
2013, March 01 - 15


எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/News/72/2013










## ஜெனீவா ஆடுகளம்

சர்வதேச சமூகத்துடன்
மல்லுக்கட்டும்
இலங்கை அரசு

| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |


உங்கள்
அபிமான
கலைக்கேசரி
இப்போது
இணையத்தளத்திலும்..
இன்றே பதிவு செய்து உங்கள்
சந்தாவைப் பெற்றுக் கொள்ளுங்கள்
KALAIKESARI
கலைக்கேசரி
CULTURE HERITAGE TRADITION EVENTS FASHION INTERVIEWS ENTERTAINMENT
www.kalaikesari.com
www.kalaikesari.com



தவறுகளை இழைத்து
கழித்த வாழ்க்கை
எதையுமே செய்யாமல்
கழித்த வாழ்க்கையையும்
விட கூடுதலான அளவுக்கு
கௌரவமானது
மாத்திரமல்ல
பயனுறுதியுடையதுமாகும்.

ஜோர்ஜ் பேர்னாட் ஷா

# உள்ளடக்கம்


ஜெனீவா-இந்தியா-இலங்கை
பேராசிரியர் அனுராதா
ஷெனொய் விசேட பேட்டி 08
எம்.பி.வித்தியாதரன்

கைகொடுக்கும் தெய்வங்களாக
சர்வதேச சமூகம் 16
பேராசிரியர் சி.சிவசேகரம்

ஐ.நா.மனித உரிமைகள் பேரவை
தீர்மானமும் இந்தியாவும் 23
கே.கொடகே

போர்க்குற்றங்கள்;
வங்கதேசம் சொல்லும் கதை 26
என்.சத்தியமூர்த்தி

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பியக்கம் 30
குசல் பெரேரா

ஒபாமாவும் சிரியாவும் 32

சசிபெருமாளின் உண்ணாவிரதம்
சென்னை மெயில் 35
எம்.காசிநாதன்

முடிவுக்கு வரப்போகிறது
காஸ்ட்ரோக்கள் யுகம் 41

தென்கொரிய புதிய ஜனாதிபதி
எதிர்நோக்கும் பிரச்சினைகள் 44


இத்தாலியில் முட்டுக்கட்டை 47

இஸ்லாமிய சகோதரர்களுக்கு...
மேதாவியின் மின்னஞ்சல் 48

மொழி-இலக்கண ஆய்வில்
வடமராட்சி
புலமையாளர்களின் பங்களிப்பு 52
க.இரகுபரன்

அரைமனதுடனான ஒரு ஒப்பந்தம் 58
ரி.எஸ்.கணேசன்

கடைசி பக்கம் 64
த.இராஜரத்தினம்












*Samakalam focuses on issues that affect the lives of people of*

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு
சமகாலம்
2013, மார்ச் 01-15


08


23



32


26


41


44


64

*Sri Lanka, the neighbourhood and the world*

ஆசிரியரிடமிருந்து...

# ஜெனீவாவும் கொழும்பும்

ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவருகின்ற தீர்மானம் பற்றிய வாதப் பிரதிவாதங்கள் சூடுபிடித்திருக்கின்றன. கடந்த வருடம் இதே கால கட்டத்தில் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கேட்டுக்கொள்ளப்பட்ட விடயங்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் நிறைவேற்றுவதில் கரிசனை காட்டவில்லை என்பதை அடிப்படையாகக் கொண்டு அதன் தொடர்ச்சியான ஒரு தீர்மானத்தையே இத்தடவை அமெரிக்கா முன்னின்று கொண்டுவருகின்றது என்பது தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

உள்நாட்டுப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு ஏறத்தாழ நான்குவருடங்கள் முடிவுறும் நாட்கள் நெருங்கும் நிலையில் சர்வதேச சமூகத்தின் வல்லாதிக்க நாடுகளிடமிருந்து ராஜபக்ஷ அரசாங்கம் அதிகரித்த நெருக்குதல்களை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. கடந்த வருடம் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை தோற்கடிப்பதற்கு பேரவையின் உறுப்புநாடுகள் மத்தியில் ஆதரவைத் தேடுவதற்கு காட்டிய தீவிர அக்கறையை இத்தடவை அரசாங்கம் காட்டவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. அத்துடன், அமெரிக்காவின் தீர்மானத்துடன் சம்பந்தப்பட்ட விவகாரத்தை எவ்வாறு கையாளுவது என்பதில் கூட அரசாங்கத் தலைவர்கள், அமைச்சர்கள், வெளியுறவு அமைச்சு அதிகாரிகள் மற்றும் வெளிநாடுகளில் இருக்கக், கூடிய இலங்கை இராஜதந்திரிகள் மத்தியில் தெளிவான அணுகுமுறையில்லை என்பதையும் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

இதற்கு அடிப்படைக் காரணம் சர்வதேச சமூகத்தின் மத்தியில் தன்னை நியாயப்படுத்தி நிற்கக்கூடிய நடத்தைகளை அரசாங்கம் முன்னெடுக்கவில்லை என்பதே யாகும். இந்த நடத்தைகள் வெளியுலகுடன் சம்பந்தப்பட்டவேயல்ல. சொந்த மக்களான தமிழ் மக்களின் பிரச்சினைகளுடன் சம்பந்தப்பட்டவை. அவர்களின் அவலங்களுடன் சம்பந்தப்பட்டவை. அந்த மக்களின் மனதை வென்றெடுக்க அரசாங்கம் மானசீகமாக நடவடிக்கைகளில் இறங்கியிருந்தால், போரின் விளைவாக அவர்களுக்கு ஏற்பட்ட புண்களை குணமாக்குவதில் அக்கறை காட்டியிருந்தால் இன்று சர்வதேச அரங்கில் இத்தகைய நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய சூழ்நிலை வந்திருக்காது. இனிமேலாவது அதை உணருவதற்கு அரசாங்கத்தலைவர்கள் தயாராயிருப்பார்கள் என்று நம்புவதற்கு நாதி ஏது? ■

# கடிதங்கள்













## குஷ்புவால் குழப்பம்

தமிழகத்தை பலமுறை ஆட்சி செய்ததுடன், பழம் பெரும் தலைவர்களையும் கொண்ட தி.மு.க, இன்று வடமாநிலத்தவரான நடிகை குஷ்புவினால் இரண்டுபடும் நிலைக்குச் சென்றுள்ளதை முத்தையா காசிநாதனின் கட்டுரையில் படிக்கும் போது வேதனை ஏற்படுகின்றது. நடிகைகளினால் வீடுகளில் மட்டுமல்லாது இப்போது கட்சிகளிலும் குழப்பங்கள், மோதல்கள் ஏற்பட்டுவிட்டன. தமிழகத்தைத் திருத்த இனிமேல் எத்தனை பெரியார்கள் வந்தாலும் முடியாது.

கே.ரேவதி, யாழ்ப்பாணம்

## ஜொலிக்கிறது

சமகாலம் பெப்ரவரி 16-28 இதழில் மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து கட்டுரை வெளியிட்டிருந்தமை வரவேற்கத்தக்கது. அல்பேர்ட் அயன்ஸ்ரீனின் அற்புத வரிகள் சஞ்சிகையை வாசித்து முடித்த பின்னும் நினைவோடு தொடர்கின்றது. இடதுசாரி இயக்கங்களின் சமகால நிலைபற்றிய புரிதலை பேராசிரியர் அ.மார்க்ஸின் நேர்காணல் தந்து நிற்கின்றது. 'கமலினால் இந்தியாவிலிருந்து வெளியேற முடியுமா?' என்ற கட்டுரை தமது சொந்த நாடுவிட்டுச் சென்ற கலைஞர்கள், அரசியல் வாதிகள், அறிஞர்கள் பற்றிய தகவல்களையும் அவர்களின் நிலையையும் தெளிவாகத் தந்து நிற்கின்றது. இக்கட்டுரை மூலம் புதிய விடயங்கள் பலவற்றை அறிந்து கொள்ள முடிந்தது. சிறப்பான பல அம்சங்களுடன் சமகாலம் ஜொலிக்கின்றது.

எம்.கோபிகிருஷ்ணா, கொடிகாமம்.

## ரமேஷுக்கு பாராட்டு

தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள், தோட்டத்தொழிற்துறை வீழ்ச்சியடைந்து செல்லும் நிலைமைகள் தொடர்பில் பெரிதாக அக்கறை காட்டப்படாத நிலையில் 'சமகாலம்' அதனை முன் அட்டைப்பட கட்டுரையாக பிரசுரித்தமைக்கு ஆசிரியருக்கு நன்றி. அத்துடன் தேயிலைத் தொழிற்துறையின் இன்றைய நிலையை அழகாகத் தரவுகளுடன் வெளிப்படுத்திய கட்டுரையாளர் இரா.ரமேஷுக்கும் என் பாராட்டுகள்.

ஏ.கனகராஜா, தலவாக்கலை.

## சட்டநாதனின் கருத்து

சமகாலத்தில் அதிகம் அதிகம் விரும்பிப்படிக்கும் பகுதி அறிவியல் களரி. கடந்த இதழில் நியன்டதால் குழந்தையை குளோனிங் முறையில் உருவாக்க விடுக்கப்பட்ட அழைப்பு, அது தொடர்பான சர்ச்சை தொடர்பில் கட்டுரை அமைந்திருந்தது. புதிய விடயங்களை சுவாரஸ்யம் குன்றாமல் தருவதில் டாக்டர் எம்.கே.முருகானந்தன் கைதேர்ந்தவர் என்பதைத் தொடர்ச்சியாக அவரது படைப்புகள் உணர்த்தி நிற்கின்றன.

எழுத்தாளர் க.சட்டநாதன் ஈழத்து இலக்கிய உலகில் தவிர்க்க முடியாத ஒரு படைப்பாளி. அவர் கடைசிப் பக்கத்தில் இடம்பிடித்திருப்பது மகிழ்ச்சி. விமர்சகர்கள் பற்றி

## ரமேஷிடம் கோரிக்கை

தேயிலைத் தொழில்துறையின் அண்மைக்காலப் போக்குகளும் தொழிலாளர் நிலையும் பற்றி விரிவான கட்டுரையைத் தந்த பேராதனை பல்கலைக்கழக விரிவுரையாளர் இரா.ரமேஷ் தோட்டத்தொழிலாளர்களின் சம்பளப்பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட சர்ச்சைக்குரிய கூட்டு ஒப்பந்தம் குறித்தும் விரிவான விளக்கத்தைத் தந்தால் தற்போது பயனடையதாயிருக்கும்.

கே.குமரேசன், மஸ்கெலியா.


அவர் குறிபிட்டவை பற்றி வாசித்தபோது எனது மனதில் எழுந்த ஒரு விடயத்தையும் இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன்.

பல இலக்கிய வாதிகள் குறித்த சக படைப்பாளர்கள் பற்றி மற்றவர்களோடு பேசும் போது அதே படைப்புகள் பற்றி தரம் தாழ்த்தி கதைப்பார்கள். பின்னர் அப்படிக் கதைத்த அவரது படைப்பாளர்கள் பற்றியும், அவரது படைப்புகள் பற்றியும் உயர்வாக பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளில் எழுதுவார்கள். ஒரு படைப்பாளன் பற்றி பேசுவது ஒன்றும் எழுதுவது மற்றொன்றுமாக இப்படிப்பட்டவர்கள் ஏன் இருக்கிறார்கள் என்பது புரியவில்லை.

அரசியல் வாதிகள் போல் இலக்கிய வாதிகளும் ஆகிவிட்டார்களோ என எண்ணத்தோன்றுகின்றது. இப்படியான போக்கு தொடர்ந்து வரும் படைப்புச் சந்ததியையும் வழிமாற வைத்துவிடும்.

எஸ்.வீரசிங்கம், கொட்டாஞ்சேனை.


## குமார் டேவிட்டின் துணிச்சல்



குமார் டேவிட்டின் சிங்கள- தமிழ் ஐக்கியத்திற்கு யார் பயப்படுகிறார்கள் என்ற கட்டுரை அவரது துணிச்சலையும் இடதுசாரிகளின் தற்போதைய இயலாமையையும் வெளிப்படுத்தியுள்ளது. அத்துடன் இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தை ராஜபக்ஷக்கள் எதிர்ப்பதற்கான காரணத்தையும் நன்றாக விளக்கியுள்ளார். பாராட்டுகள்.

எஸ்.இராமச்சந்திரன், சாவகச்சேரி.

## மார்க்ஸ் கூறுவது என்ன?



இன்று இடதுசாரி இயக்கங்கள் உலகளாவிய ரீதியில் எதிர்நோக்குகின்ற சவால்கள் பற்றிய விளக்கங்களைத் தந்த தமிழக பேராசிரியர் அ.மார்க்ஸுடனான நேர்காணல் மூலமாக பல விடயங்களை அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

ஆனால், இடதுசாரி இயக்கங்களுக்கு புதிய நூற்றாண்டுக்கு புதிய கோட்பாட்டு உருவாக்கங்கள் தேவை என்ற அவரது வாதமும் உலகமயச் சூழலில் பழைய வர்க்கப் பகுப்பாய்வுகள் இன்று எள்ளளவும் பொருந்தாது என்ற அவரின் நிலைப்பாடும் மார்க்சியத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் இன்றைய சூழலுக்கு பொருத்தமற்றவை என்று அவர் கூற முன் வருகிறாரா என்று கேள்வியை எழுப்புகின்றன. மார்க்சியக் கோட்பாடுகளை முற்றாக மாற்றி எழுத வேண்டுமென்று அ.மார்க்ஸ் கூற முன் வருகிறாரா?

கே.மயூரன், வெள்ளவத்தை.




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 01 இதழ் 17
2013, மார்ச் 01 - 15

A Fortnigtly Tamil News Magazine

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
தொலைபேசி : +94 11 7322700
ஈ-மெயில்: samakalam@expressnewspapers.lk

ஆசிரியர்
வீரகத்தி தனபாலசிங்கம்

உதவி ஆசிரியர்
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

ஒப்பு நோக்கல்
என்.லெப்ரின் ராஜ்



நாய்கள் என்னை ஒருபோதும் கடித்ததில்லை. மனிதர்கள் தான் கடித்தார்கள்

-மர்லின் மன்ரோ

வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
சமகாலம்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

# வரக்குழலம்....

பயங்கரவாதிகளைத் தோற்கடித்தமைக்கான பெருமைக்கு உரிமை கோருகின்ற சில அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் நாட்டின் சார்பில் மின்சாரக் கதிரைக்குப் போவதற்கு தயாராயிருப்பதாக வீர வசனங்களைப் பேசுகிறார்கள். ஆனால், தற்போதைய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரின் முடிவுக்குப்பிறகு நியமிக்கப்படக்கூடிய எந்தவொரு சுயாதீனமான விசாரணைக்குழுவும் என்னை மாத்திரமே விசாரிக்கும். போரின் இறுதிக் கட்டங்களில் நானே இராணுவத்தளபதியாக பதவி வகித்தேன் என்பது சர்வதேச சமூகத்துக்குத் தெரியும். இறுதிக்கட்டங்களில் இராணுவ நடவடிக்கைகளுக்கு நான் தான் பொறுப்பு என்பதையும் சர்வதேச சமூகம் முழுமையாக அறியும்.



முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா

அரசியல்வாதிகளின் மகன்மாரும் ஏனைய பையன்களைப் போலத்தான் நடந்துகொள்வார்கள். எவராவது தங்களுக்கு அடித்தால் திருப்பி அடிப்பார்கள். பையன்கள் தங்களுக்குள் அடிபட்டுக் கொள்கிறார்கள். இது பாசிக்குடாவில் மாத்திரமல்ல, உலகம் பூராகவும் நடக்கிறது. காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரிக்குப் போகிறார்கள். அடித்தவர்கள் பொலிஸ் நிலையத்துக்குப் போகிறார்கள்.



தகவல், ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல

அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் கீழ் மாகாணசபைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைக் குறைக்காமல் வடமாகாணசபைத் தேர்தலை நடத்தும் பட்சத்தில், அந்த மாகாணத்தில் எதிர்க்கட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினால், அந்தப்பகுதி பிரிவினைவாத புலம்பெயர் தமிழர்களுக்கு சொர்க்கபுரியாக மாறிவிடும்.



வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச

ஊடகங்கள் தன்னைத் தாக்குவதாகவும் தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாகவும் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கூறியிருக்கிறார். அவர் ஜெனீவாவுக்குச் சென்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முறையிட வேண்டும்.




எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க

பாசிக்குடாவில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவரின் மகனை எனது மகன் தாக்கியதாகக் கூறப்படும் சம்பவத்தையடுத்து என்னை அரசியல் ரீதியாக நிர்மூலம் செய்வதற்கு சதிமுயற்சியொன்று மேற்கொள்ளப்படுகிறது. ஊடகங்களில் ஒரு பிரிவினருக்கும் இதில் சம்பந்தம் இருக்கிறது. இந்த முயற்சிகளில் அவர்கள் தோல்வி கண்டால், என்னைக் கொலை செய்வதற்கும் கூட முயற்சிக்கக்கூடும்.



சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன

சில வட்டாரங்களில் கூறப்படுவதைப் போன்று எனக்கு ஒன்றும் பதவியில் பிரச்சினையில்லை. எனது வேலையை நான் நம்பிக்கையுடன் செய்து கொண்டிருக்கிறேன். என்னை விமர்சிக்கிற அமைச்சர் ஜனாதிபதியின் நம்பிக்கைக்குரியவராக இருக்கிறார் என்கிறீர்கள். நானும் கூட ஜனாதிபதிக்கு நெருக்கமானவனே.



நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி பி.பி.ஜெயசுந்தர

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருக்கக்கூடியவர்களில் பிரதமர் பதவிக்கு மிகவும் பொருத்தமான ஆள் நானேதான். எனது சகோதரி, சகோதரன், மைத்துனர் எல்லோரும் கொல்லப்பட்டனர். நான் காயமடைந்தேன். சிறையிலடைக்கப்பட்டேன். பெலியத்தையில் உள்ள எனது குடும்பத்தவரின் வீடு நிர்மூலஞ் செய்யப்பட்டது. ராஜபக்ஷக்களுடனேயே நான் அரசியல் செய்துவந்திருக்கிறேன். ஜனாதிபதியின் நம்பிக்கைக்குப் பெரிதும் பாத்திரமானவன் நான். எனவே, பிரதமர் பதவி எனக்குத் தரப்பட வேண்டும்.



அமைச்சர் மேர்வின் சில்வா

செய்தி ஆய்வு

# தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் அச்சங்களை வலுப்படுத்தும் ஜனாதிபதியின் கருத்து



இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எந்தவொரு சர்வதேச ஊடகத்துக்காவது பெருவாரியான நேர்காணல்களைக் கொடுத்திருக்கிறாரென்றால் அது இந்தியாவின் முக்கிய தேசியத் தினசரிகளில் ஒன்றான ஆங்கில ஏடான இந்துவாகத்தான் இருக்க முடியும்.

இனநெருக்கடி தொடர்பில் ஜனாதிபதி தெரிவித்து வந்திருக்கக்கூடிய, அல்லது நிலைப்பாடுகளை மாற்றி வந்திருக்கக்கூடிய நிகழ்வுக் கோர்வைகளை அறிந்து கொள்ளவேண்டுமானால் அவர் இந்துவுக்கு அளித்த நேர்காணல்களை செம்மையாக வாசித்தால் அதுவே போதும்.

ஜெனீவாவில் நடைபெற்று வருகின்ற ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரவிருக்கின்ற தீர்மானம் பற்றி அரசியல் அரங்கிலும் இராஜதந்திர வட்டாரங்களிலும் விவாதங்கள் சூடுபிடித்திருக்கும் சூழ்நிலையில், மகிந்த ராஜபக்ஷ கொழும்பில் உள்ள இந்துவின் செய்தியாளர் ஆர்.கே.ராதாகிருஷ்ணனுக்கு ஒரு நேர்காணலை அளித்திருக்கிறார்.

ராதாகிருஷ்ணன் கிளப்பிய கேள்விகளுக்கு ஜனாதிபதி அளித்திருக்கும் பதில்கள் இனநெருக்கடிக்கான அரசியல் இணக்கத் தீர்வு தொடர்பில் அவர் எடுத்திருக்கும் மிகவும் பிந்திய நிலைப்பாட்டின் துலக்கமாக அமைந்திருக்கிறது.

வடமாகாண சபைக்கான தேர்தலை எதிர்வரும் செப்டெம்பரில் நடத்துவீர்களா என்று ஜனாதிபதியிடம் கேட்கப்பட்டபோது "ஆம் தேர்தல்களை நாம் செப்டெம்பரில் நடத்துவோம். அதனால் தான் ஏனைய மாகாண சபைகளின் தேர்தல்களையும் கூட பிற்போட்டிருக்கிறோம். வடமாகாண சபைத் தேர்தலை நடத்தும் உத்தேசம் எனக்கு இல்லை என்ற விமர்சனம் கிளம்புவதைக் காண நான் விரும்பவில்லை" என்று அவர் பதிலளித்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

வடமாகாணம் ஏனைய எட்டு மாகாணங்களும் அனுபவிக்கின்ற அதிகாரங்களையும் விட கூடுதலானதாகவோ அல்லது குறைவானதாகவோ அதிகாரங்களைக் கொண்டிருக்கப்போவதில்லை என்றும் குறிப்பாக ஜனாதிபதி சுட்டிக்காட்டத் தவறவில்லை. இதன் அர்த்தம் என்ன? இது முக்கியமான ஒரு கேள்வி.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தொடர்பில் இந்த நேர்காணலில் ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்திருக்கக்கூடிய கருத்துகளின் பின்னணியில் நோக்குகையில் இந்தக் கேள்வி தவிர்க்க முடியாமல் கூடுதல் அழுத்தம் பெறுகிறது. இனநெருக்கடிக்கு அரசியல் இணக்கத் தீர்வைக் காண்பதற்கு எஞ்சியிருக்கக் கூடிய ஒரே யொரு மார்க்கமாக

**(40ஆம் பக்கம் பார்க்க)**

# 'தமிழர்கள் உரிமைகளை பெறும் வரை இலங்கை மீதான சர்வதேச நெருக்குதல் தொடர வேண்டும்'



அனுராதா மித்ரா ஷெனொய்

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவின் தீர்மானத்தை இந்தியா நிச்சயம் ஆதரித்தேயாக வேண்டும்**

**சமகாலத்திற்கு பிரத்தியேகப் பேட்டி**

இலங்கை பாதுகாப்புப் படைகளினால் இழைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படும் அட்டூழியங்கள் தொடர்பான பிரிட்டிஷ் சனல்-4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட புதிய திரைப்படம் எதிர்பார்த்த தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது போலத் தோன்றுகிறது. இம்மாத இறுதியில் ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டு வரப்படவிருக்கின்ற தீர்மானம் மீதான வாக்கெடுப்பிற்கு முன்னதாக இந்தியாமீதும் ஏனைய நாடுகள் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துவது இத்திரைப்படத்தின் நோக்கங்களில் மூன்று என்று அதன் இயக்குநர் வெளிப்படையாகவே தெரிவித்திருக்கிறார்.

தமிழ் நாட்டிலும் இந்தியா பூராகவுமுள்ள ஏனைய அனுதாபிகள் மத்தியிலும் அபிப்பிராயங்களை உருவாக்குவதிலும் இந்தியா கடைப்பிடிக்கக்கூடிய கொள்கை மீது தாக்கத்தை ஏற்படுத்துவதிலும் இத்திரைப்படம் முக்கியமான பங்கொன்றை ஆற்றியிருக்கிறது என்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கிறது. திரைப்படம் தொடர்பான பிரதிபலிப்புகள் அதையே உணர்த்துகின்றன.

தற்போது ஆரம்பமாகியிருக்கும் இந்திய பாராளுமன்றத்தின் கூட்டத்தொடரின் போது ராஜ்ய சபையில் இலங்கை விவகாரம் தொடர்பாக சூடான விவாதம் இடம்பெற்றதையும் காணக்கூடியதாக இருந்தது. தமிழகத்தைச் சேர்ந்த எம்.பி.க்கள் அண்மையில் பிரிட்டிஷ் ஊடகத்தினால் வெளியிடப்பட்ட விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 12 வயதான இளைய புதல்வன் பாலச்சந்திரனின் படங்களை சபைக்குள் கொண்டுவந்து காண்பித்து விவாதித்து இந்திய அரசாங்கம் இலங்கைமீது மென்மையான போக்கைக் கடைப்பிடிப்பதாகக் குற்றஞ்சாட்டினர். திராவிட இயக்கக் கட்சிகளைச் சேர்ந்த எம்.பி.க்கள் வெளியுறவு அமைச்சர்

## தொடர்ந்து நெருக்குதலை கொடுத்துக்கொண்டிருக்கவேண்டியது இந்தியா முன்னால் உள்ள தெரிவு. எந்தவொரு இராணுவ உதவியையும் இந்தியா இலங்கைக்கு வழங்கக்கூடாது

சல்மான் குர்ஷித் அளித்த பதிலுக்கு ஆட்சேபம் தெரிவித்து சபையில் இருந்து வெளிநடப்பும் செய்தனர்.

அமெரிக்கா கொண்டுவருகிற தீர்மானத்தை ஜெனீவாவில் இந்தியா ஆதரிக்க வேண்டும் என்பதே தமிழக எம்.பி.க்களின் ஏகோபித்த கோரிக்கையாக இருந்தது. இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இந்தியாவுக்கு வர இனிமேல் அனுமதிக்கக் கூடாது என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

பாலசந்திரன் எவ்வாறு கொல்லப்பட்டார் என்பதைக் கண்டறிய சுதந்திரமானதும் நம்பகத்தன்மை வாய்ந்ததுமான விசாரணையொன்று நடத்தப்பட வேண்டும் என்று ராஜ்ய சபாவில் உள்ள பல்வேறு கட்சிகளினதும் எம்.பி.க்கள் கோரிக்கை விடுத்தனர். தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் குறித்து பக்கச் சார்பற்ற சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று இந்தியா கோரிக்கைவிடுக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (வலது) சார்பில் ராஜ்யசபாவில் வலியுறுத்தப்பட்டது.

கொழும்புக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானம் தொடர்பில் இந்தியா எத்தகைய நிலைப்பாட்டை எடுக்கும் என்பது குறித்து ஒரு நழுவல் தன்மையான விளக்கத்தையே வெளியுறவு அமைச்சர் குர்ஷித் அளித்தார். எமக்கு கவலை இருக்கலாம். எமக்குக் கோபம் இருக்கலாம். ஆனால், இலங்கையை எதிரிநாடு என்று நாம் சொல்லக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் வி.மைத்திரேயன் "தமிழர்களைப் பொறுத்தவரை இலங்கை ஒரு எதிரி நாடு" என்று தனதுரையில் குறிப்பிட்டதற்கு பதிலளிக்கும் வகையிலேயே வெளியுறவு அமைச்சரின் இக்கூற்று அமைந்தது.

இத்தகைய சூழ்நிலையில் தமிழகத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான அரசியல் போராட்டங்கள் தீவிரமடைந்திருக்கின்றன. சென்னையில் உள்ள இலங்கை உதவித் தூதரகத்தை மூடிவிடக்கோரி சில கட்சிகள் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தியிருக்கின்றன. தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் இந்திய அரசாங்கத்தின் அணுகுமுறைகளும் செயற்பாடுகளும் அமைய வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு.கருணாநிதி மீண்டும் வலியுறுத்திக் கேட்டிருக்கிறார்.

இந்தியா ஜெனீவாவில் கடந்த வருடம் மார்ச் மாதம் நடந்து கொண்டதைப் போன்றே- அதாவது இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்கும் - இத்தடவையும் நடந்து கொள்ளுமென்று எதிர்பார்க்கப்படுகின்றபோதிலும், இந்த விவகாரம் தொடர்பில் பாரிய விவாதங்கள் மூண்டிருக்கின்றன.






எம்.பி.வித்தியாதரன்

இந்த விவாதங்களுக்கு மத்தியில், ஆசியாவின் புகழ்மிக்க பல்கலைக் கழகங்களில் ஒன்றான புதுடில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் ஒரு பேராசிரியரும் இந்திய- இலங்கை உறவுகள் விவகாரத்தில் நிபுணத்துவம் வாய்ந்தவருமான பேராசிரியர் அநுராதா ஷெனோயை "சமகாலத்தின்" சார்பில் சந்தித்து கருத்துகளைக் கேட்டோம்.

சரித்திர மற்றும் ஐதீக உறவுகளைக் கொண்ட இவ்விரு நாடுகளுக்கும் இடையேயான விவகாரங்கள் தொடர்பில் விரிவாக எழுதி வந்திருக்கும் அநுராதா ஷெனோய் இலங்கை ஜனாதிபதியின் சர்வாதிகாரப் போக்கு சகலரையும் அரவணைக்கும் ஒரு ஜனநாயகமாக இலங்கையை மாற்றுவதற்கு மாத்திரம் குந்தகமாக இருக்கவில்லை. நாட்டுக்கே அது பேராபத்தாகப் போய்விடுமென்று கூறுகிறார்.

பேராசிரியர் அநுராதா மித்ரா ஷெனொயுடனான எமது கலந்துரையாடலை கேள்வி, பதில் வடிவில் தருகிறோம்.

***பிராந்திய நெருக்குதல்களுக்கு அப்பாற்பட்ட ஒரு இந்திய ஆய்வாளர் என்றவகையில், இலங்கையின் இனநெருக்கடியை, குறிப்பாக தமிழர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர்கள்?***

ஒரு நாடு ஜனநாயக நாடாக இருக்கிறதோ, பன்முகத்தன்மைகொண்டதாக இருக்கிறதோ அல்லது தாராளவாதப் போக்குடையதாக இருக்கிறதோ, எவ்வாறு இருந்தாலும் அதன் தன்மை, பண்பு அது எவ்வாறு சிறுபான்மை இனங்களை மதிப்பீடு செய்கிறது, எவ்வாறு நடத்துகிறது என்பதிலேயே தங்கியிருக்கிறது. பெரும்பான்மைக் குழுக்களுக்கு

கொடுக்கிற அதே உரிமைகளை சிறுபான்மை இன, மதக் குழுக்களுக்கும் வழங்கவில்லையானால் அந்த நாடு ஒரு முழுமையான ஜனநாயக நாடு அல்ல. எதேச்சாதிகாரப் போக்குகளும் சிறுபான்மை இனங்கள் தொடர்பில் சகிப்புத்தன்மையற்ற போக்குகளும் கொண்ட ஒரு நாடாகவே அது இருக்கும். குறுகிய கட்சி மனப்பான்மை கொண்ட, குறுகிய குழு மனப்பான்மை கொண்ட அரசியலில் ஈடுபடுகின்ற அத்தகைய நாடொன்றுக்கு எதிர்காலத்தைப் பொறுத்தவரை நம்பிக்கை பெரிதாக இருக்க முடியாது. ஏனென்றால், அதன் சிறுபான்மை இனங்கள் உரிமைகளை உணர முடியாமல், பிரிந்து போகவே விரும்பும், சமத்துவமான அபிவிருத்திக்கான உரிமைகளை சகல பிரஜைகளுக்கும் வழங்குவது நாட்டின் நலன்களுக்கு உகந்தது.

***இந்த அடிப்படையில் இலங்கைத் தமிழர்களின் விவகாரத்தை எவ்வாறு பார்க்கிறீர்கள்?***

இலங்கை அரசு மிகவும் பழைமை வாய்ந்த ஜனநாயகங்களில் ஒன்று என்று நான் நினைக்கிறேன். காலனியாதிக்கத்தின் முடிவுக்குப் பிறகு இடையறாத ஜனநாயக அரசாக அது விளங்கிவந்திருக்கிறது. ஆனால், அதன் சகல சிறுபான்மை இனங்களுக்கு குறிப்பாக, தமிழர்களுக்கு நேர்மையாக இலங்கை நடந்துகொள்ளவில்லை. மேலாதிக்கத் தன்மை கொண்ட சிங்களத் தேசியவாதம் அங்கே காணப்படுகிறது. இந்த சிங்களத் தேசியவாதம் முனைப்புறுத்தப்படுவதற்குக் காரணம், அது ஒரு சிறியநாடு, சிறிய சனத்தொகையைக் கொண்டது. சகல பிரச்சினைகளுமே பெரிதாகப் பார்க்கப்படுகின்றன. சிங்களத் தேசியவாதம் தமிழர்களுக்கு போதுமான இடைவெளியைக் கொடுக்கவில்லை. ஆட்சியாளர்கள் தங்களுடைய பெரும்பான்மையினத்தவர்களுக்கே முன்னுரிமையைக் கொடுக்கிறார்கள். மொழியுரிமையாக இருந்தாலென்ன, அபிவிருத்தி கலாசாரம், தொழில் வாய்ப்புகளில் என்றாலென்ன பெரும்பான்மை இனத்தவர்களுக்கே முன்னுரிமை.

இத்தகைய பாரபட்சத்தின் விளைவாக இருதரப்பிலும் அதாவது சிங்களப் பெரும்பான்மையினர் பக்கத்திலும் தமிழ்ச் சிறுபான்மையினர் பக்கத்திலும் - அடையாள அரசியல் தீவிரமடைந்திருக்கிறது. அதன் தொடர்ச்சியாக தீவிரவாத அரசியலைக் கையிலெடுத்த விடுதலைப் புலிகள் போன்ற இயக்கங்கள் தோன்றின. பேச்சுவார்த்தைகள் மூலமாக தங்களால் எதையும் அடையமுடியாது என்று அவர்கள் நம்பினார்கள். அதனால் மூண்ட ஆயுத மோதல்கள் பல வருடகால உள்நாட்டுப் போராக மாறியது.



**இலங்கை அரசின் சர்வாதிகார போக்கு சகலரையும் அரவணைக்கும் ஒரு ஜனநாயகமாக இலங்கையை மாற்றுவதற்கு மாத்திரம் குந்தகமாக இருக்கவில்லை. நாட்டுக்கே அதுபேராபத்தாகவும் போய் விடும்**

***இப்போது இலங்கை ஜனாதிபதி தமிழர்களுக்கான சுயாட்சியை நிராகரித்திருக்கிறார். அவர் தனது முன்னைய உறுதிமொழியில் இருந்து பின்வாங்கிவிட்டாரே....?***

உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பிறகு, ஜனாதிபதிக்கே முற்றுமுழுதான வெற்றி கிட்டியிருக்கிறது. அவர்கள் தரப்பில் வெற்றிக் குதூகலம் காணப்படுகிறது. அந்த வெற்றிக்குப் பிறகு பிரச்சினைக்கான அடிப்படைக் காரணிகளைக் கண்டறிந்து பேச்சுவார்த்தைகளை நடத்தித் தீர்வொன்றைக் காண்பதற்கு ஜனாதிபதி முயற்சிக்கவில்லை. தமிழர்களுக்கு சில வகையான சுயாட்சியைக் கொடுத்திருக்கவேண்டும். தமிழர்களுக்கு குடியியல், அரசியல் உரிமைகளை வழங்கியிருக்கவேண்டும். பதிலாக அவர் என்ன சொல்கிறார்? இலங்கை ஒரே அரசு, ஒரே மக்கள், ஒரே தேசம் என்கிறார். அதற்கு அப்பால் வேறு எதுவுமில்லை. உண்மையில் அவர் பழைய ஆரம்ப இடத்துக்கு வந்து நிற்கிறார். சகலருமே உரிமைகளைக் கொண்டிருக்க வேண்டிய ஒரு பல்லின, பல் கலாசார நாடாக இலங்கையைக் காண்பிக்க அந்த ஜனாதிபதி விரும்பவில்லை.

தவிரவும், அவசரகாலக் கட்டமைப்புகளைக் குலைக்கவில்லை. இராணுவமயத்தை நிறுத்தவில்லை. ஜனாதிபதி கூடுதலான அளவுக்கு எதேச்சாதிகாரப் போக்குடையவராக மாறியிருப்பதுடன், குடும்ப ஆட்சியை வலுப்படுத்துவதில் அக்கறை கொண்டு செயற்படுகிறார். அவரது குடும்பத்தின் 26 உறுப்பினர்களே சகல அதிகாரங்களையும் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலைவரங்கள் எல்லாம் தமிழ் மக்களுக்கு பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. இறுதியில் சிங்கள மக்களுக்கும் கூட பாதகமாகவே இதுபோய் முடியும். எதேச்சாதிகார மேலாண்மையையும் இராணுவமயமாக்கல் அதிகரிப்பையுமே காண முடிகிறது. இராணுவ மயமாக்கல் என்பது இராணுவ ஆட்சி என்று அர்த்தமாகிவிடாது. கொள்கைத் தெரிவுகளுக்கு மேலாக இராணுவ படைப்பலத்தை அதிகரித்த வகையில் ஜனாதிபதி பயன்படுத்துவதில் அக்கறை காட்டுகிறார் என்பதே இதன் அர்த்தமாகும். சிவிலியன்



**பொதுநலவரசு உச்சிமாநாட்டை பகிஷ்கரிப்பது இலங்கை மீது நெருக்குதலை கொடுப்பதற்கு உதவுமேயானால் அவ்வாறு செய்வது நல்லது.**

வேலைகளுக்கு இராணுவம் பயன்படுத்தப்படுகிறது. பதில் கூறும் கடப்பாடு, பொறுப்புக்கூறுதல் என்று எதுவுமே இல்லை என்றே அங்கிருந்து எனக்குக் கிடைக்கும் தகவல்கள் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது.

போர்க் குற்றங்கள் இடம்பெறவில்லை என்றும் மறுக்கப்படுகிறது. போரின் இறுதிக் கட்டத்தில் இறுதி வாரங்களில் தமிழ் மக்கள் வகைதொகையின்றிக் கொல்லப்பட்டனர். நிராயுதபாணிகள், மோதலில் சம்பந்தப்படாதவர்கள், குடிமக்கள், சரணடைந்த போராளிகள் என்று பல தரப்பினரும் கொல்லப்பட்டனர்.

பெண்களுக்கு எதிராக கொடுமைகள், பாலியல் வன்முறைகள் எவ்வாறு இழைக்கப்பட்டிருக்கின்றன என்பதை மனித உரிமைகள் கண்காணிப்பகம் (Human Rights watch) உலகம் பூராகவும் காண்பித்துவருகிறது. பாலியல் வல்லுறவு என்பது ஒரு போர் ஆயுதமாகவே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே, இவையெல்லாம் பிராந்தியத்துக்கும் சர்வதேச சமூகத்துக்கும் ஏற்புடையவையல்ல.

**மேற்குலக ஊடகங்கள் இலங்கை தொடர்பில் ஒரு பக்கச்சார்புத் தன்மையைக் கொண்டிருப்பதாக நீங்கள் நினைக்கவில்லையா?**

இல்லை, அந்த ஊடகங்கள் பக்கச்சார்பைக் கொண்டிருப்பதாக நான் நினைக்கவில்லை. எவராவது கண்டிக்கப்படும்போது,விமர்சிக்கப்படும்போது, இலங்கைக்கு விரோதமான போக்கு காரணமாகவே அவ்வாறு செய்யப்படுகிறது என்று கூறுவது மிகவும் வசதியான விடயம். ஒரு சமநிலை இருக்கவேண்டும் என்பதே யதார்த்தமாகும். மேற்குலகம் ஒன்றைச் சொல்கிறது என்பதற்காக இது நடைபெறவில்லை என்று அர்த்தமாகிவிடாது. இலங்கையின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு இந்த விவகாரங்கள் எல்லாம் விசாரிக்கப்பட வேண்டுமென்று கூறியிருக்கிறது. குற்றங்களுக்கு பொறுப்புடைமை கூறப்பட வேண்டும், சுயாட்சி வழங்கப்பட வேண்டுமென்றெல்லாம் அந்த ஆணைக்குழு கூறியிருக்கிறது. ஆணைக்குழுவின் விதப்புரைகள் கூட ஏன் நடைமுறைப்படுத்தப்படவில்லை?

**எனவே, எந்தவிதமான பக்கச்சார்பையும் நீங்கள் காணவில்லை?**

எந்த வகையிலும் இல்லை. மேற்குலகினால் மாத்திரமல்ல, இந்தியர்களினால் கூட பக்கச்சார்பான போக்கு கடைப்பிடிக்கப்படவில்லை என்பதே எனது அபிப்பிராயம். இந்தியத் தரப்பு நெருக்குதலைக் கொடுக்க முயற்சிக்கிறது. ஆனால், மேற்குலகத்தைப் பொறுத்தவரை அவர்களுக்கு மனித உரிமைகள் என்பவை பெரியதொரு பிரச்சினையாகும். அவர்களைப் பொறுத்தவரையிலும்கூட, பூகோள அரசியல் நலன்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன என்பதும் உண்மையே. ஆனால், மனித உரிமை மீறல்கள் எதுவுமே நடைபெறவில்லை என்று கூறுவதன் மூலம் தேசிய பாதுகாப்புப் போர்வையின் கீழோ அல்லது மேற்குலக அரசியல் என்ற போர்வையின் கீழோ சகலவற்றையும் மறைத்துவிட முடியாது.

**சகல பிரஜைகளுக்கும் சமத்துவமான உரிமைகளைக் கொடுக்கப் போவதாக இலங்கை ஜனாதிபதி இப்போது கூறுகிறாரே....?**

சரி அவர் கொடுக்கட்டுமே. அவர் எவ்வாறு சகல பிரஜைகளுக்கும் சமத்துவமான உரிமைகளைக் கொடுக்கிறார் என்றுதான் பார்ப்போமே. பிரச்சினை சமத்துவமான உரிமைகளைப் பற்றியதல்ல. சிங்களவர்களுக்கு ஏற்கனவே சமவுரிமை இருக்கிறது. தமிழர்களின் சில நியாயமான கோரிக்கைகள் கவனிக்கப்பட வேண்டும். நிறைவேற்றப்படவேண்டும் என்பதே முக்கியமானது. நாட்டுப் பிரிவினை, சுதந்திர ஈழம் என்பது போன்ற சகல கோரிக்கைகளையும் நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், குறைந்தபட்சம் தமிழர்களுக்கு அவர்களது மாகாண சுயாட்சியாவது கிடைக்க வேண்டும். அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் கீழான உரிமைகள், அதிகாரங்கள் அவர்களுக்கு கிடைக்கவேண்டும். அதுவழங்கப்படும் என்று தமிழர்களுக்கு ஏற்கனவே வாக்குறுதியளிக்கப்பட்டிருக்கிறது. 13ஆவது திருத்தம் என்கிறபோது மாற்றியமைக்கப்பட்ட 13ஆவது திருத்தமல்ல. முன்னைய அடிப்படை 13 ஆவது திருத்தத்தையே இங்கு நான் கூறுகிறேன்.

**இலங்கை ஜனாதிபதி இப்போது உறுதிமொழியில் இருந்து பின்வாங்கிவிட்டதால், இந்தியாவுக்கு இருக்கக்கூடிய மாற்றுவழிகள், தெரிவுகள் எவை?**

தொடர்ந்து நெருக்குதலைக் கொடுத்துக்கொண்டிருக்க வேண்டியதே இந்தியாவின் முன்னால் உள்ள தெரிவு. எந்தவித இராணுவ உதவியையும் இலங்கைக்கு இந்தியா வழங்கக்கூடாது. இலங்கை விவகாரத்தில் இந்தியா ஒரு பெரிய பாத்திரம். இலங்கை ஜனாதிபதி சீனாவுடன் மேலும் நெருக்கமாகப் போவதற்கு முயற்சிப்பார் என்பது உண்மையே. அதற்கு இந்தியா பயப்படக்கூடாது என்று நான் நினைக்கிறேன். சீனாவிடமிருந்து பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. இலங்கை சீனாவுடன்

ஒத்துழைக்கலாம். தொடர்புகளைக் கொண்டிருக்கலாம். இந்தப்பிரச்சினை மீண்டும் வெடிக்காதிருப்பதை இந்தியாவும் சீனாவும் உறுதி செய்ய வேண்டும். மக்களின் உரிமைகள் கொடுக்கப்பட்டால் மாத்திரமே மீண்டும் பிரச்சினை வராது. மக்களின் உரிமைகள் கொடுக்கப்படாத பட்சத்தில் பிரச்சினை மீண்டும் மீண்டும் வெடித்துக் கொண்டேயிருக்கும்.

**ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தியாவுக்குள்ள தெரிவுகள் எவை?**

அமெரிக்காவின் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். கடந்த தடவை ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா நீர்த்துப் போகச் செய்துவிட்டது என்று நான் நினைக்கிறேன்.

**அண்மையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின் போது பேசிய வெளியுறவு அமைச்சர் அமெரிக்காவின் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கக்கூடும் என்று ஏற்கனவே சூசகமாகக் கூறியிருக்கிறாரே?**

இத்தடவையும் இந்தியா தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்கக்கூடும். சில பின்னரங்க இராஜதந்திர நகர்வுகள் இடம்பெறலாம். போர்க்குற்றங்கள் அம்பலப்படுத்தப்படும் வரை, அக்குற்றங்கள் தொடர்பில் பொறுப்புடைமை காண்பிக்கப்படும்வரை, இராணுவ மயமாக்கல் இல்லாமற் செய்யப்படும் வரை, தமிழர்கள் அவர்களின் உரிமைகளைப் பெறும் வரை இலங்கை மீதான சர்வதேச நெருக்குதல் தொடரவேண்டும். முற்றுமுழுதான புனர்வாழ்வு இடம்பெற்றாகவேண்டும். சிங்கள சமூகத்திற்கு சமமான மட்டத்துக்கு தமிழர்களும் வருவதை உறுதி செய்வதற்கு சாத்தியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

**ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடருக்குப் பிறகு உடனடியாக ஏப்ரலில் லண்டனில் இன்னொரு கூட்டம் நடைபெறவிருக்கிறது. இலங்கையில் நடத்தப்படவிரு ப்பதாக எதிர்பார்க்கப்படும் அடுத்த பொதுநலவரசு உச்சி மகாநாட்டுக்கான ஏற்பாடுகளை ஆராய்வதற்கானதே அந்தக்கூட்டம். இலங்கையில் அந்த மகாநாட்டை பகிஷ்கரிக்கவேண்டும் என்ற தங்களின் கோரிக்கையை இந்தியாவும் ஆதரிக்கவேண்டும் என்று மேற்கு நாடுகள் வலியுறுத்துகின்றனவே..?**

இந்த விடயம் பல அம்சங்களில் தங்கியிருக்கிறது. பொது நலவரசு உச்சி மகாநாட்டைப் பகிஷ்கரிப்பது எந்தவகையிலும் உதவியானதாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால், பல்வேறு வழிகளில் நெருக்குதல்கள் தொடரவேண்டும் என்று நான் நினைக்கிறேன். இலங்கை மீது நெருக்குதலைக் கொடுப்பதற்கு பகிஷ்கரிப்பு உதவுமேயானால், அவ்வாறு செய்வது நல்லதே. தாங்கள் கூறுவதை இலங்கை அரசாங்கம் செவிமடுக்கிறதா என்பதை அந்த நாடுகள் ஆராய்ந்து அறிந்து உறுதி செய்துகொள்ள வேண்டும். இலங்கை அரசாங்கம் மிகவும் கர்வத்தனமானது. அவர்கள் சொல்வதற்கும் செய்வதற்கும் இடையே நிறைய வேறுபாடுகள் .

**இந்திய அரசாங்கத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையேயான நல்லெண்ணம் மற்றும் நம்பிக்கைக் காரணியை எவ்வாறு நீங்கள் மதிப்பிடுகிறீர்கள்?**

நிச்சயமாக அது தாழ்ந்துவிட்டது. தமிழர் பிரச்சினை இருநாடுகளிலுமே மிகவும் உணர்ச்சிபூர்வமானது. இந்தியாவில் இது ஒரு பெரிய உள்நாட்டு அரசியல் சர்ச்சையாக இருக்கிறது. தமிழகத்தில் உள்ள இரு பிரதான அரசியல் கட்சிகளான திராவிட முன்னேற்றக்கழகமும் அண்ணா தி.மு.க.வும் இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு அவர்களின் உரிமைகள் மீளக் கிடைக்கப்பெற வேண்டுமென்று இடையறாது வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன. தி.மு.க.வும், அண்ணா தி.மு.க.வும் விடுதலைப் புலிகளை ஒருபோதும் ஆதரிக்கவுமில்லை. ஆதரித்ததுமில்லை. அரசியல் பேச்சுவார்த்தைகளையே அவர்கள் விரும்புகிறார்கள். அதனால், இந்தியாவின் நிலைப்பாடும் அதுவாக இருக்கும்.



சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையேயான உறவுகளும் இந்தியாவிற்கும் சீனாவுக்கும் இடையேயான உறவுகளும் வித்தியாசமானவை. இலங்கை ஜனாதிபதி சீனாவுடன் மேலும் நெருக்கமாக போவதற்கு முயற்சிப்பார் என்பது உண்மை. அதற்கு இந்தியா பயப்படக்கூடாது

**இந்தியா கூடுதல்பட்ச நெருக்குதலைக் கொடுக்க வேண்டுமென்று நீங்கள் கூறுகிறீர்கள். எந்த மட்டத்திற்கு அது போக முடியும்?**

இராணுவ நெருக்குதலுக்கு அப்பால், இராணுவரீதியான நெருக்குதலிலோ அல்லது பௌதீக ரீதியான நெருக்குதலிலோ எனக்கு நம்பிக்கையில்லை. நெருக்குதல் இராஜதந்திர ரீதியானதாகவும் அரசியல் ரீதியான



**இலங்கையில் இனப்பிரச்சினை மீண்டும் வெடிக்காதிருப்பதை இந்தியாவும் சீனாவும் உறுதி செய்ய வேண்டும். மக்களின் உரிமைகள் கொடுக்கப்பட்டால் மாத்திரமே மீண்டும் பிரச்சினை வராது. அல்லது வெடித்துக் கொண்டேயிருக்கும்**

தாகவும் இருக்க வேண்டும். தடைவிதிப்புகளிலும் எனக்கு நம்பிக்கையில்லை. ஏனென்றால் தடைகள் மக்களைப் பெரிதும் பாதிக்கும். இந்தியா தொடர்ந்தும் வீடுகளைக் கட்டிக்கொடுத்து தமிழர்கள் மீள் குடியேற்றப்படுவதை உறுதி செய்ய வேண்டும். இந்தியா 50 ஆயிரம் வீடுகளைக் கட்டித்தருவதாக உறுதியளித்தது. ஆனால், 4 ஆயிரம் அல்லது 5 ஆயிரம் வீடுகள் மாத்திரமே இதுவரை நிர்மாணிக்கப்பட்டுள்ளன. வீடுகள் கட்டும் பணிகளை இந்தியா தீவிரப்படுத்தவேண்டும். உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும். ஆனால், இதுவெல்லாம் தமிழர்களுக்கு இலங்கை அரசு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதுடன் ஒருங்கிசைவானதாக இருக்க வேண்டும்.

**இதனால் தமிழர்களுக்கு ஏதாவது ஒரு வகை சுயாட்சி கிடைக்க உதவுமென்று உங்களுக்கு நம்பிக்கையிருக்கிறதா?**

அதற்குக் காலம் எடுக்கும். நான் பெருமளவுக்கு நம்பிக்கை கொண்டவனாக இல்லை. இலங்கை அரசாங்கம் பெருமளவுக்கு எதேச்சாதிகாரமானது. அவர்கள் பெருமளவு அதிகாரத்தை தங்கள் வசம் குவித்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் நீண்டகால அடிப்படையில் நோக்குவதாக இல்லை. ஆனால், அவர்கள் நல்லறிவுடையவர்களாக இருந்தால், இலங்கை மக்கள் சகலரினதும் நீண்டகால நலன்களை நோக்குபவர்களாக இருந்தால், பெருமளவு அதிகாரங்களை தங்கள் கைகளில் குவித்து வைத்திருக்கும் குறுகிய நோக்குடைய அணுகுமுறையைக் காட்டிலும் இணக்கபூர்வமான தீர்வொன்றுக்கு வருவார்கள் என்று நான் நினைக்கிறேன். குறுகிய நோக்குடனான அணுகு முறையை அவர்கள் தொடர்ந்து கடைப்பிடிப்பார்களேயானால் இறுதியில் இலங்கை ஒரு பலவீனமான அரசாகப்போகும்.

**இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை மீது செல்வாக்குச் செலுத்தக் கூடியதாக ஏற்கனவே தமிழ் நாட்டில் இருந்து பெருமளவு நெருக்குதல்கள் கொடுக்கப்படுகிறதே? இன்று தமிழகக் கட்சிகள் நெருக்குதல்களைக் கொடுக்கின்றன. பங்களாதேஷ் தொடர்பான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் செல்வாக்குச் செலுத்த திரிநாமுல் காங்கிரஸ் முன்னர் நெருக்குதல் கொடுத்தது. நாட்டின் வெளியுறவுக் கொள்கையை முழுமையாக நோக்கும் போது இத்தகைய நெருக்குதல் தந்திரோபாயங்கள் அதை எவ்வாறு பாதிக்கின்றன?**

தெற்காசிய தொடர்பான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை வித்தியாசமானது. அது எப்போதுமே பிராந்திய (மாநில) அரசியலினால் நிர்ணயிக்கப்படுகிறது. இலங்கை தொடர்பான கொள்கை தமிழ்க்கட்சிகளினாலும் பங்களாதேஷ் தொடர்பான கொள்கை மேற்கு வங்காளத்தினாலும் நிர்ணயிக்கப்படுகின்றன. மியன்மார் தொடர்பான இந்தியக் கொள்கை வடகிழக்கு இந்தியப் பிராந்தியத்தினால் நிர்ணயிக்கப்படுகிறது. இவையெல்லாமே நெருக்குதல்கள். ஆனால், இது புதிர் விளையாட்டில் ஒரு துண்டு அல்ல. எல்லாத்துண்டுகளும் ஒன்றாகச் சேர்ந்தே வருகின்றன. வர்த்தகம், சீனக் காரணி மற்றும் உள்நாட்டு அரசியல் என்று தேசிய அக்கறைகளும் இதில் வருகின்றன. அதனால், இது ஒரு காரணியல்ல, பன்மடங்கு காரணிகள்.

**ஆனால், இப்போது இவை மிகவும் மோசமாக மாறியிருக்கின்றனவே....?**

இல்லை. அப்படி மோசமாக மாறவில்லை. அவை தங்கள் தாக்கத்தைச் செலுத்துகின்றன. ஆனால், மத்தியும் மாநிலங்களும் ஒன்றாக இருந்து நிலைவரங்களை ஆராயவேண்டும். எமது ஆட்சிமுறை சமஷ்டித்தன்மையானது. அதில் எப்போதுமே பேச்சுவார்த்தைக்கு வழியிருக்கிறது. நெருக்குதல்களும் இருக்கின்றன. விவகாரங்களை எவ்வாறு கையாளுவதென்பது குறித்து அவர்கள் பேச்சுவார்த்தைகளை நடத்தி இறுதியில் அவர்கள் கூட்டாகத் தீர்மானிப்பார்கள் என்று நினைக்கிறேன்.

**வலிமையான மத்திய அரசு இருந்த போது பிரச்சினைகள் வந்ததில்லை. ஆனால், இப்போது பிராந்தியக் கட்சிகளின் நெருக்குதல் தந்திரோபாயங்களுக்கு பலவீனமான மத்திய அரசு அடிபணிகிறது போலத் தெரிகிறதே..?**

வலிமையான மத்திய அரசு என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. தற்போது வலிமையான மத்தி என்பது சாத்தியமில்லை. அத்துடன் அத்தகைய மத்திய அரசு சமஷ்டி முறைக்கு நல்லதுமில்லை. எனவே, பிராந்தியக் கட்சிகள் அவற்றைப் பாதிக்கின்ற பிரச்சினைகளில் கருத்துகளை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும்.

**இந்திய -இலங்கை உறவுகளைப்**

***பாதிக்கிற இன்னொரு பிரச்சினை மீன்பிடியுடன் சம்பந்தப்பட்டதாக இருக்கிறதே...?***

இது மிகவும் இடர்மிக்க பிரச்சினையாகும். ஏனென்றால், முழுப்பகுதியுமே இராணுவமயப்படுத்தப்பட்டிருக்கிறது. இலங்கையின் கடற்படை அவநம்பிக்கை கொண்டதாகவும் சந்தேகம் கொண்டதாகவும் இருக்கிறது. மீனவர்கள் இருநாடுகளுக்கும் இடையேயான குரோத உணர்வுகளுக்கு பலிக்கடாக்களாகவோ அல்லது போர்க் கைதிகளாகவோ மாறாதிருப்பதை உறுதிசெய்வதற்கு சிலவகை இணக்கப்பாடுகள் காணப்படவேண்டும். இரு நாடுகளுக்குமே நல்லுறவுகள் இருக்கின்றன. மீனவர்களின் பிரச்சினைகளை இருதரப்பினரும் பேசித் தீர்வுகாண வேண்டியது அவசியமாகும். சில சந்தர்ப்பங்களில் மீனவர்கள் கொல்லப்படுகிறார்கள், சில சந்தர்ப்பங்களில் கைது செய்யப்படுகிறார்கள், துன்புறுத்தப்படுகிறார்கள். இது இலங்கைக் கடற்படையினால் மாத்திரமல்ல, இரு நாடுகளினதும் கடற்படையினாலும் இடம்பெறுகின்றன. இந்த மீனவர்கள் எவ்வாறு, எங்கே ஒத்துழைத்துச் செயற்படக்கூடியதாக இருக்கும் என்பதைக் கண்டறியவேண்டும்.

***இந்திய மீனவர்கள் தடைசெய்யப்பட்ட இழுவைப் படகுகளையும் வலைகளையும் பயன்படுத்துவதாகவும் தடுக்கப்பட்ட பகுதிகளில் மீன்பிடிப்பதாகவும் இலங்கை மீனவர்கள் மத்தியில் பெருமளவு அதிருப்தி நிலவுகிறது. இதை நிறுத்துவதற்கு இந்தியா ஏன் எதையும் செய்யவில்லை? சட்ட விரோத வழிமுறைகளைப் பயன்படுத்தும் இந்த மீனவர்களுக்கெதிராக கடுமையான நடவடிக்கை எடுப்பதிலிருந்து இந்தியாவை எது தடுக்கிறது?***

இந்தியா சுற்றாடல் பாதுகாப்பு, உயிரின வாழ்வுச்சூழல் தொடர்பில் சில உடன்படிக்கைகளை செய்துகொள்ள வேண்டும் என்று நான் நினைக்கிறேன். ஏனைய உறவுகள் நன்றாக இருந்தால் மாத்திரமே இதைச் செய்துகொள்ள முடியும். கடலையும் கடல் வாழ் உயிரினங்களையும் பாதுகாப்பானதாக வைத்திருக்கும் ஒரு தெற்காசிய கூட்டுக் கோட்பாடு மீது இருதரப்பினரும் கவனம் செலுத்தினால் அவர்களினால் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருக்க முடியும். போட்டிக்குப் பதிலாக கூட்டுக்கோட்பாட்டுக்காக பாடுபட்டிருக்க முடியும்.

***வர்த்தகம் இன்னொரு பிரச்சினை. சுதந்திர வர்த்தக உடன்படிக்கை போன்ற வர்த்தக ஏற்பாடுகள் தொடர்பில் இலங்கை வர்த்தகர்கள் அவ்வளவு திருப்தியாக இல்லை. இத்தகைய உடன்படிக்கைகள் இந்தியத் தரப்பினருக்கு மாத்திரமே உதவியாக இருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள். தற்போது பேசப்படுகிற விரிவான வர்த்தக உடன்படிக்கை குறித்தும் அவர்களுக்கும் ஐயப்பாடுகள் இருக்கிறதே...?***

அதை நாம் பார்க்க வேண்டும். சுதந்திர வர்த்தக உடன்படிக்கை என்பது உலக மயமாக்கலின் அங்கம். இந்தியா ஒரு பெரிய நாடு. அதிலிருந்து இந்தியா பயன்பெறும். இலங்கை அதன் பொருளாதாரத்தை தனியார் மயப்படுத்தி, உலகமயமாக்கி கட்டுப்பாடுகளை தகர்த்தெறிந்த முதல் நாடு. இந்தியா உட்பட தெற்காசியாவின் சகல நாடுகளுடனும் இலங்கை வர்த்தகம் செய்துகொண்டிருக்கிறது. அதனால் இது அவர்கள் பேசித் தீர்க்க வேண்டிய பிரச்சினை. நான் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் ஒரு ஆதரவாளன் அல்ல. உள்நாட்டு உற்பத்தியாளர்களும் சிறிய ரக உற்பத்தியாளர்களும் பாதிக்கப்படுவார்கள் என்பதை நான் அறிவேன். ஆனால், இலங்கை பேச்சுவார்த்தை நடத்தி தேவையானால் உடன்படிக்கையை மாற்றியமைத்துக்கொள்ளலாம். அத்துடன் சிறிய வர்த்தகர்களின் நலன்களுக்கு நல்லது எது என்பதையும் அவர்கள் பார்க்க வேண்டும். வெறுமனே பேசிக்கொண்டிருப்பதை விடுத்து வர்த்தக விபரங்கள் பற்றாக்குறை போன்றவை குறித்து ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

***1950களில் இருந்து சீனாவுடன் இலங்கை நல்லுறவுகளைப் பேணிவந்திருக்கிறது. ஆனால் இப்போது சீனா நோக்கி இலங்கை கூடுதலான அளவிற்கு சாய்வதாக இந்தியாவில் ஒரு கருத்து இருக்கிறது. தமிழர் விவகாரத்தில் இந்தியாவுடனான உறவுகள் மோசமாக பாதிக்கப்படுகிற அளவிற்கு சீனாவிற்கு நெருக்கமாக இலங்கை போகிறது என்று கருதப்படுகிறது. இது பற்றி என்ன கூறுகிறீர்கள்?***

இந்த வகையான கருத்து எனக்கு ஏற்புடையதல்ல. ஒரு நாடு இன்னொரு நாட்டுடன் கொண்டிருக்க வேண்டிய உறவு மூன்றாவது நாட்டுடனான உறவுகளை மேம்படுத்த உதவுமென்றோ அல்லது மோசமாக்கும் என்றோ நான் நினைக்கவில்லை. ஒரு நாடு இன்னொரு நாட்டுடன் கொண்டிருக்கக்கூடிய உறவுகளை அவற்றின் நன்மை, தீமைகளின் அடிப்படையிலேயே நோக்கப்படுகிறது. இலங்கைக்கு சீனாவுடனும் இந்தியாவுடனும் நல்லுறவுகள் இருக்கின்றன. இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையான உறவுகளும் சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையேயான உறவுகளும் வேறுபட்டன. இந்தியா இலங்கையிலிருந்து 22 கிலோமீற்றர் தொலைவில் இருக்கிறது. அதனால் இந்தியா எப்போதுமே முக்கியமானதொரு காரணி. சீனாவுடனான இலங்கையின் வர்த்தகம் பெரியதாக மாறலாம். அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாண போன்ற சில ஒப்பந்தங்களை சீனாவிற்கு இலங்கையர்கள் கொடுக்கக்கூடும். அதனால் போட்டி குரோதத் தன்மையானதாக மாறுவதில்லை. மூன்று நாடுகளும் ஒன்றுடன் மற்றையது எவ்வாறு நடந்துகொள்வதென்பதைப் பொறுத்து இந்த நிலைமைகள் பரஸ்பரம் பயனுடையதாக அமைய முடியும்.

**இலங்கை மீது ஆதிக்கம் செலுத்துவது தொடர்பான போட்டி உண்மையிலேயே அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையேயானதென்றும் அது ஜெயவர்தன ஆட்சிக் காலத்தில் முன்னரங்கத்திற்கு வந்ததென்றும் இந்தியாவில் ஒரு கருத்து இருக்கிறது. இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையேயான உறவுகள் சுமுகமடைந்தபோதிலும் கூட இலங்கை தொடர்பிலான போட்டி தொடருகின்றதெனவும் கருதப்படுகிறது. நோர்வே அனுசரணையுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது அமெரிக்காவும் இந்தியாவும் முரண்பாடான அணுகுமுறைகளை கடைப்பிடித்ததை இதற்கு உதாரணமாகக் கூறுகிறார்கள். தெற்காசியாவில் மட்டுப்பாடில்லாத மேலாதிக்கத்தை இந்தியா கொண்டிருக்க அமெரிக்கா அனுமதிக்கப்போவதில்லை என்றும் அவர்கள் கூறுகிறார்கள். இதுபற்றி உங்கள் கருத்து என்ன?**


இலங்கை மீது இந்தியா ஏன் மேலாதிக்கம் செலுத்த வேண்டும். இந்தியா போதுமானளவிற்கு பெரிய நாடு. நாம் ஆதிக்கம் செலுத்த விரும்பவில்லை. ஆனால் இந்தியா ஒரு பிராந்திய வல்லரசு. அமெரிக்காவினதோ அல்லது வேறு எந்த நாட்டினதோ அளவு கடந்த செல்வாக்கு இலங்கை மீது இருப்பதைக்காண நாம் விரும்பவில்லை என்று நினைக்கிறேன். இலங்கை தனது சுதந்திரத்தை முனைப்பொறுத்துவதே சிறப்பானது. சீனாவிற்கெதிராக இந்தியாவையோ, அமெரிக்காவிற்கெதிராக இந்தியாவையோ தட்டிவிடும் அணுகுமுறையை இலங்கை கடைப்பிடிக்கக்கூடாது. ஒவ்வொரு விவகாரத்திலும் சுதந்திரமான கொள்கையை அவர்கள் கடைப்பிடிக்கவேண்டும்.

**புவிசார் அரசியலின் அடிப்படையில் இது உண்மையில் அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான ஒரு போட்டியா?**

அமெரிக்காவிற்கு அக்கறையிருக்கிறதென்பது மாத்திரமல்ல, அது இந்தியாவின் பாத்திரத்தை பயன்படுத்தவும் விரும்புகிறது. தங்களது ஒரு வாடிக்கையாளர் நாடாக இந்தியாவைக் காண அமெரிக்கர்கள் விரும்புகிறார்கள். அமெரிக்கா தொடர்பில் சுதந்திரமான வெளியுறவுக் கொள்கையை இந்தியா அதன் சொந்தத்தில் வகுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இலங்கையிலோ அல்லது நேபாளத்திலோ அல்லது வேறெங்குமோ அமெரிக்காவின் ஒரு கையாக இந்தியா இருக்க முடியாது. இந்தியாவிற்கு அதன் சொந்தத்தில் சுதந்திரமான நிலைப்பாடு இருக்க வேண்டும். அமெரிக்காவுடன் பகைமையைக் கொண்டிருக்கவும் முடியாது. அதற்கு தலையாட்டும் நாடாகவும் இருக்க முடியாது.

***அணிசேராக் கொள்கை....?***

அதை நான் சுயாதீனமான கொள்கை என்றழைக்கிறேன். நீங்கள் விரும்பியமாதிரி அழைத்துக்கொள்ளுங்கள். ■



உள்நாட்டு அரசியல்



பேராசிரியர் சி.சிவசேகரம்

# அரசுக்கும் தமிழ்த் தலைமைகளுக்கும் கைகொடுக்கும் தெய்வங்களாக மேற்குலகும் ஐ.நா.வும்

**என்றாவது ஒருநாள் மேற்குலகு இலங்கையில் குறுக்கிட்டு ஆட்சியைக் கவிழ்க்க முடிவெடுக்கும் வரை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் அதற்கு கிடைத்த ஒரு வரமாகவே இருக்கும். மேற்குலகின் மூலம் என்ன நடந்தாலும் அதனால் தமிழ் மக்கள் நன்மையடைய மாட்டார்கள்**

‘சாட்சிக்காரன் காலில் விழுவதை விடச் சண்டைக்காரன் காலில் விழுவது மேல்’ என்பது நாம் நன்கறிந்த ஒரு பழமொழி. நம்முடைய பிரச்சினைகளில் வெளியாருக்கு அக்கறை இருக்காது என்பது என்னுடைய நிலைப்பாடல்ல. எனினும் எந்தவிதமான அக்கறைக்கும் ஒரு காரணமும் நோக்கமும் இருக்கும். முரண்படும் இரண்டு தரப்பினரில் எவராவது ஒருவரின் தரப்பில் மூன்றாம் ஒருவர் நிற்பதானால் அங்கு மூன்றாமவரின் நலன் எவ்வகையிலோ சம்பந்தப்பட்டிருக்கும். அந்தக் காரணமும் நோக்கமும் விளங்காமல் எந்த மூன்றாந் தரப்புக் குறுக்கீட்டையும் எதிர்பார்ப் பது அறிவுடைமையல்ல.

சிலவகையான அக்கறைகள் பரந்துபட்ட மனித நலன்கள் சார்ந்தவை. அவை ஓரளவு ஆழமான அரசியற் தெளிவை வேண்டி நிற்பவை. எனினும் வியட்நாமில் அமெரிக்காவின் போரையும் பலஸ்தீனத்தில் இஸ்ரேலின் ஒடுக்குமுறையையும் வட அயர்லாந்தில் பிரித்தானிய அடக்குமுறையையும் கண்டித்துப் பேசியும் வெகுசன அபிப்பிராயத்தை உருவாக்கச் செயற்பட்டும் வந்தவர்களுக்குப் பொதுவான ஒரு நோக்கம் இருந்திருக்கத் தேவையில்லை. ஒருவர் இடதுசாரி என்பதால் அமெரிக்காவின் போரை எதிர்த்திருக்கலாம். இன்னொருவர் அமெரிக்கப் போரின் கொடுமையால் மனம் வெறுத்து அதை எதிர்த்திருக்கலாம். வேறொருவர் அது வெல்ல முடியாத போரென்பதால் எதிர்த்திருக்கலாம். இப்படிப் பல காரணங்களும் இருந்திருக்கலாம். அவ்வாறே ஒருவர் அரபுத் தேசியவாத நோக்கிலோ இஸ்லாமிய கண்ணோட்டத்திலோ நியாய, அநியாயங்கள் பற்றிய மதிப்பீட்டின் அடிப்படையிலோ ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாட்டிலிருந்தோ இஸ்ரேலுக்கு எதிரான ஒரு நிலைப்பாட்டைக் மேற்கொண்டிருக்கலாம். ஒரு ஐரிஷ் தேசியவாதியோ இன உணர்வாளரோ, மட்டுமன்றி, பிரித்தானிய ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களும் அயர்லாந்து பற்றிய அறிவின் அடிப்படையிலான நியாய உணர்வால் உந்தப்பட்டவர்களோ பிரித்தானியப் படைகளின் வெளியேற்றத்தைக் கோரியிருக்கலாம். இவற்றுக்கும் அப்பால் முன் குறித்த விடயங்களில் வேறேதாவது பகைமையாலும் தவறான காரணங்களாலும் உள்நோக்கங் கொண்டும் நியாயத்தின் தரப்பிற்கு ஆதரவு கிடைத்திருக்கலாம்.

எவ்வாறாயினும் சரி, பிழைகளின் அடிப்படையிலோ ஒரு பொது அடையாள அடிப்படையிலோ அமையும் ஆதரவு எதுவும் நம்பகமானதாகவும் நிலைக்கக்கூடியதாகவும் இருக்க இடமுண்டு. எனினும் உரிமைக்குப் போராடும் தரப்பின் நியாயம் முக்கியமானது. இந்தப் பின்னணியில் இலங்கைத் தமிழரின் தேசிய இனப் பிரச்சினையில் வெளியார் அக்கறைகளையும் தமிழ்த் தரப்பு எதிர்பார்ப்புகளையும் நோக்குவோம்.

### தேசிய இனப்பிரச்சினையின் தோற்றமும் முதிர்வும்

சிங்கள பௌத்த அரசியலின் எழுச்சியிலும் யாழ்ப்பாணச் சைவ வேளாள அரசியலின் உருவாக்கத்திலும்

**விடுதலைப்புலிகளை ஓரங்கட்டி ஒடுக்குவதில் மேற்குலகமும் அக்கறையுடன் இருந்தது என்பதை ஏற்றுக் கொள்வதில் சிலருக்கு மனத்தடைகள் உள்ளன. ஆனால் அதற்கான சான்றுகள் வெளி வந்து கொண்டிருக்கின்றன**

கிறிஸ்துவத்துடனான முரண்பாடு கட்கு முக்கியமான இடம் இருந்தது. எனினும், இந்த மதச் சார்பான அரசியற் போக்குகள் பிரித்தானிய கொலனியத்துடன் நேரடியாக மோதத் தயங்கின. அந்தத் தேசியவாத மரபுகளிற் தோன்றிய தலைமைகளே சிங்கள, தமிழ்த்தேசிய வாதங்களின் வழிகாட்டிகளாக இருந்து வந்தன.

19 ஆம் நூற்றாண்டின் முடிவில் நீர்கொழும்புப் பகுதியில் நடந்த பௌத்த - கத்தோலிக்கக் கலவரத்தை விட்டால் இலங்கையின் முதலாவது மதக்கலவரம் எனக்கூறக் கூடியதும் நாடளாவிய முதலாவது இனக்கலவரம் எனக் கூறக்கூடியதுமான சிங்கள-முஸ்லிம் கலவரம் 1915 இல் நடந்தபோது, பிரித்தானிய ஆட்சியாளர்களின் அக்கறை தமது அதிகாரத்திற்குச் சவாலான முறையில் நாட்டின் சட்டமும் ஒழுங்கும் சீர்குலையக்கூடாது என்பதற்கு அப்பாற் போனதாகக் கூற இயலாது. சிங்களத் தலைவர்கள் பிரித்தானிய ஆட்சியாளர்களுடன் மன்றாடி மன்னிப்பைக் கோரினரே ஒழிய, எதிர்த்துப் போராடவில்லை. பொன்னம்பலம் ராமநாதன் அவர்களுக்காக மன்றாடி, தண்டிக்கப்பட்ட சிங்களத் தலைவர்களுக்கு மன்னிப்பைப் பெற்றுக் கொடுத்ததுடன், தமிழ்-முஸ்லிம் உறவுகட்கும் ஆப்பு வைத்தார்.

சிங்கள,தமிழ், முஸ்லிம் இன அடையாள அரசியல், கொலனிய எசமானர்களைப் பகைக்காமல் நடந்தது. நாட்டின் நிருவாகத்தில் அந்தந்த சமூகங்களில் மேல் நிலையில் இருந்தவர்களுடைய பிரதிநிதிகள் நாட்டின் நிருவாகத்தில் பங்கு கோரினார்களே ஒழிய,கொலனி ஆட்சி போவதை அவர்கள் வேண்டவில்லை.

இந்த விதமான இனவழித் தேசிய அரசியற் பாரம்பரியத்திலிருந்து விலகிய இரண்டு முக்கிய போக்குகள் தோன்றின. ஒன்று யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ். மற்றையது இலங்கையின் இடதுசாரி இயக்கத்தின் முன்னோடியான சூரியமல் இயக்கம். இவையே கொலனிய எதிர்ப்பினதும் குறுகிய இன நலன் கடந்த இலங்கைத் தேசிய உணர்வினதும் உண்மையான வெளிப்பாடுகள் எனலாம்.

சிங்களப் பேரினவாதம் வெகுசன அரசியலாக்கப்படுவதற்குத், தேர்தல்களின் மூலம் அரச மன்றத்திற்கும் பின்னர் பாராளுமன்றத்திற்கும் தெரிவுகள் நடந்தமை கணிசமாக உதவியது. அரச அதிகாரத்தில் தமது பங்கை உறுதிப்படுத்துவதற்கு மேட்டுக்குடிகளிடையே இருந்து வந்த போட்டி அதன் தூண்டுகோலாக இருந்தது. குறுந்தமிழ்த் தேசியவாதம் சிங்களப் பேரினவாதத்தையொட்டியே விருத்தி பெற்றது.

இதிற் கவனிக்கத்தக்கது ஏதெனில், சிங்கள, தமிழ் மேட்டுக்குடி அரசியற் தலைமைகள் யாவும் பிரித்தானிய கொலனி நிருவாகிகளதும் பிரித்தானிய அரசினதும் ஆதரவை நாடி நின்றனர் என்பதாகும். கொலனிய எசமானர்களுடைய நடுநிலைமை, நியாய உணர்வு என்பவற்றை ஏற்பவர்களாகவும் அவர்கள் இருந்தனர்.

டொனமூர் யாப்பும் பின்னர் சுதந்திர இலங்கைக்கான சோல்பரி யாப்பும் தமிழ்த் தலைமைகளின் பரிந்துரைகளைப் புறக்கணித்தமை கவனிக்கத்தக்கது. எதிர்காலத் தேசிய இனப் பிரச்சினை ஒன்றின் சாத்தியப்பாட்டை அறிந்தும், அது தேசிய இன ஒடுக்கலாகாமல் தடுக்கப் போதிய பாதுகாப்புகள் இல்லாமலே சுதந்திர இலங்கைக்கான யாப்பு வரையப்பட்டது என்பதைத் தமிழ்த் தலைமைகள் அறியும். அறிந்தும் கொலனிய ஆட்சியாளர்களை அவை வழிபட்டன. இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கியபோது ஆட்சி கொலனி நிருவாகத்திற்கு விசுவாசமானவர்களின் கைகளுக்குப் போவதை உறுதிப்படுத்தும் முறையிலேயே பிரித்தானிய எசமானர்கள் செயற்பட்டனர். 1948 இல் சுதந்திரம் வந்த கையோடே மலையகத் தமிழரின் வாக்குரிமை பறிக்கப்பட்டமை தேசிய சிறுபான்மையினரின் உரிமைகளைக் காக்க சோல்பரி யாப்பு போதுமானதல்ல என்பதை உறுதிப்படுத்தியது.

அதன் பின்பு, 1956 இல் இயற்றிய சிங்களம் மட்டும் சட்டம் அரசியல் யாப்பிற்கு முரணானதும் சிறுபான்மையினருக்கு எதிராகப் பாரபட்சம் காட்டுவதும் என்ற அடிப்படையில் தொடுக்கப்பட்ட கோடீஸ்வரன் வழக்கு பிரித்தானிய பிரிவு கவுன்சிலுக்கு மேன்முறையீட்டுக்கு கொண்டு செல்லப்பட்டது. அவ்விடயத்தில் பிரித்தானிய ஆட்சி கையை விரித்ததும் பின்னைய தமிழ்த் தலைமைகள் அறியாத விடயமல்ல.

இலங்கையைப் பற்றி பிரித்தானிய அரசின் ஒரே அக்கறை, இலங்கையிலிருந்த ஆட்சி பிரித்தானிய முடியாட்சிக்கு விசுவாசமானதாகவும் இலங்கையில் பிரித்தானிய நலன்கட்குக் கேடு விளைவிக்காததாகவும் இருக்க வேண்டும் என்பது மட்டுமே. அதற்கப்பால் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை தேசிய இன ஒடுக்கலாக வடிவம் பெறுவதைப் பற்றி பிரித்தானிய ஆட்சியாளர்கட்கு எவ்விதமான அக்கறையும் இருந்ததில்லை.

மொழிப்பிரச்சினையாகவே 1956 முதல் 1977 வரை இலங்கைக்கு வெளியே அறியப்பட்ட தேசிய இனப்பிரச்சினையில் பிரித்தானிய ஆட்சியாளர்களோ வேறெந்த

மேற்கு வல்லரசோ அக்கறை காட்டும் என்று எதிர்பார்க்கக் காரணமில்லாமைக்கு இன்னொரு அடிப்படையும் இருந்தது. ஒவ்வொரு முதலாளிய வல்லரசும், தனது தேச எல்லைகட்குள்ளும் (சில சமயங்களில் வெளியிலும்), திட்டமிட்ட முறையில், தேசிய இனங்களின் மொழி உரிமையை மறுத்தும் மொழி வளர்ச்சியை மறித்தும் வந்துள்ளன. இதை நாம் அதிகம் கணிப்பில் எடுத்ததில்லை.

## 1960களில் தேசிய இன ஒடுக்கலில் அந்நிய அக்கறைகள்

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை மொழி அடிப்படையிலான பாரபட்சமாக பல வடிவங்களை எடுத்தது. 1958 இல் நடந்த பேரினவாத வன்முறை தேசிய இனப்பிரச்சினை ஆபத்தான திருப்பங்களை எட்டிவிட்டதைச் சுட்டியது. எனினும் 1960களின் முற்பகுதி வரை பேரினவாதத்திற்கு விட்டுக்கொடுக்காத ஒரு வலிய இடதுசாரி இயக்கமும் கட்சி, தொழிற்சங்க நிறுவனங்களும் இலங்கையில் இருந்து வந்தன.

எந்த நிலையிலும், தமிழ்த் தேசியவாதம் இடதுசாரிகளை ஒரு நட்புச் சக்தியாக ஏற்க ஆயத்தமாக இருக்கவில்லை என்பதுடன், ஏகாதிபத்தியச் சார்பான சிங்களப் பேரினவாதக் கட்சியான யூ.என்.பி.ஆட்சியில் இருப்பதையே அது விரும்பியது. 1965 இல் இது யூ.என்.பி.யுடன் கூட்டரசாங்கத்தில் இணைந்தது.

தமிழ்த் தேசிய அரசியல், சிங்கள மக்களிடையே பேரினவாதத்திற்கு எதிராக நிற்கக்கூடிய எந்த நட்புச் சக்தியையும் அறிய விரும்பாததுடன், இடதுசாரிகளை எதிரிகளாகக் கருதியுஞ் செயற்பட்டமைக்கு ஒரு வலிய காரணம் அதனுடைய பிரதான தேர்தல் அரசியல் தந்திரோபாயமாகும். விலக்கின்றி சிங்கள அரசியல் தலைமைகள் அனைத்தையும் பேரினவாதிகளாகக் காட்டிச் சிங்கள மக்களை எதிரிகளாகக் கருதுமாறு தமிழ் மக்களைத் தூண்டுவதில் தேர்தல் ஆதாயம் இருந்தது. பேரினவாத ஆட்சிகளின் இன ஒடுக்கற் செயற்பாடுகளும் அதற்கு வாய்ப்பாக அமைந்தன.

## மேற்குலகு

தமிழ்த்தேசிய தலைமைகளிடம் மேற்குலகு பற்றிய விசுவாசம் தொடர்ந்தாலும், மேற்குலகு தமக்குச் சார்பாக இலங்கையிற் குறுக்கிடும் என்று எதிர்பார்க்க ஏற்ற காரணமெதுவும் இருக்கவில்லை. 1956க்குப் பின்பு, சூழலின் நிர்ப்பந்தங்களால் பண்டாரநாயக்க சில ஏகாதிபத்திய விரோத நிலைப்பாடுகளை மேற்கொண்டார். அந்த அரசியல் 1960 இல் சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சிக்கு வந்த பின்பும் தொடர்ந்தது. அச்சூழ்நிலையில் இலங்கையில் மீண்டும் யூ.என்.பி.யை ஆட்சிக்குக் கொண்டுவரும் நோக்கம் மேற்குலகில் வலுத்தது. 1961 இல் சத்தியாக்கிரகம் தோற்றது. 1962 இல் வலதுசாரிச் சதிப்புரட்சி ஒன்று தோற்றது. இப்பின்னணியில் தமிழரசுக் கட்சிக்குள் அமெரிக்காவைத் தமிழருக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் நோக்கம் ஏற்பட்டது. அந்த முயற்சிகள் செயல்வடிவம் பெறுமுன்பு, 1965 இல் ஒரு ஆட்சி மாற்றம் நேர்ந்து தமிழ்க் கட்சிகள் இரண்டும் யூ.என்.பி.யுடன் கூட்டரசாங்கத்தில் இணைந்துவிட்டன.

> ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது தமிழ்த் தேசியவாதத்தின் ஒரு அம்சமாக என்றுமே இருக்கவில்லை. விதி விலக்காக தமிழ்த் தேசியவாதத்தினுள் இழுபட்ட ஓரிரு சிறு அமைப்புகளைக் கூறலாம். என்றாலும் அவற்றை பிரதான தமிழ்த் தேசியவாத போராளி அமைப்புகள் ஓரங்கட்டியதைக் கண்டோம்.

## இந்தியா

இந்தியாவைப்பற்றிய தமிழ் எதிர்பார்ப்புகளுக்குத் தமிழ்நாட்டில் திராவிட இயக்கத்தின் தமிழ்த் தேசியவாத அரசியல் ஒரு தூண்டுகோலாக இருந்தது. எனினும், இலங்கையின் சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சிக்கும் இந்தியாவின் காங்கிரஸ் மத்திய அரசாங்கத்திற்குமிடையில் வலுவான நட்புறவு இருந்தது. அதைவிடவும், 1967 வரை தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சியே இருந்ததுடன், தி.மு.க.வுக்கும் மத்திய அரசுக்குமிடையே நல்ல உறவு இருக்கவில்லை. எனவே, தமிழக அரசியலினூடு இந்திய ஆதரவைப் பெறுவது இயலாத காரியமாகிவிட்டது.

எனினும், 1962 ஆம் ஆண்டு நடந்த சீன இந்திய எல்லைப் போரைத் தமிழரசுக் கட்சி தன்னை இந்தியாவுடன் நெருக்கிக்கொள்ளும் வாய்ப்பாக்க முயன்றது. சீன-இந்திய எல்லைத் தகராற்றைப் பற்றிய எந்த விதமான ஆராய்வும் இல்லாமல் கம்யூனிஸ எதிர்ப்பு நோக்கிற் சீனாவைக் கண்டித்த யூ.என்.பி.யை விடத் தீவிரமாகத் தமிழரசுக் கட்சி சீன எதிர்ப்பில் இறங்கியது. ஸ்ரீ.ல.சு.கட்சி அரசாங்கம் எந்தத் தரப்பையும் சாராமல் இரண்டு நாடுகட்கிடையிலும் இணக்கத்தை ஏற்படுத்த முயன்றது. சோவியத் ஒன்றியம் இத்தருணத்தை இந்தியாவுடனான நட்பை வலுப்படுத்த பாவித்தது. இந்தியா இலங்கையின் நடுநிலையை விரும்பாத போதும், இலங்கையுடனான நட்பை இழக்க விரும்பவில்லை. எனவே, தமிழரசுக் கட்சியின் குருட்டுத்தனமான இந்திய ஆதரவு நிலைப்பாடு இந்திய அரசாங்கத்துடன் அதை நெருங்க வைக்க உதவவில்லை. அதே வேளை, அதன் வெளிப்படையான கம்யூனிஸ விரோதம், சோவியத் நட்பைப்பெற அதற்கு உதவவில்லை. யாழ்ப்பாணத்தில் சீனச்சார்புக் கம்யூனிஸ்ட்டுகள் எனப்பட்ட இடது கம்யூனிஸ்ட்டுகளுக்கு ஒடுக்கப்பட்

வெளி நெருக்குவாரங்களை தனக்குச் சாதகமான முறையில் மகிந்த சிந்தனை அரசாங்கம் உள்நாட்டில் பயன்படுத்துகிறது. மேலை நாடுகளின் ஆதிக்கப் போக்கை எதிர்த்து நிற்பதாகவும் இலங்கையின் இறைமையை பாதுகாப்பதற்காக எவ்வித சர்வதேச தண்டனைக்கும் ஆயத்தம் என்றும் மக்களுக்கு கூறப்படுகிறது

டோரிடையே வளர்ந்து வந்த செல்வாக்கின் பயனாக, வலிந்து சீனாவைப் பகைக்கும் போக்கும் வலுவடைந்தது. இதன் தொடர்ச்சியாகவே சீனாவின் பண்பாட்டுப் புரட்சியையும் வியட்நாம் போராட்டத்தையும் 1960களின் பிற் கூற்றில் தமிழரசுக்கட்சி கேவலப்படுத்திப் பேசி வந்தது. 1966இல் தொடங்கிய சாதியத்திற்கெதிரான எழுச்சியையும் சீனக் கம்யூனிஸ்ட் சதி என்று சொல்லும் அளவுக்குத் தமிழரசுக் கட்சி தாழ்ந்து போனது.

### இஸ்ரேல்

தமிழ் மக்கள் பின்பற்ற வேண்டிய முன்மாதிரி இஸ்ரேல் என்ற மயக்கம், 1961 சத்தியாக்கிரகத்தின் தோல்வியின் பின்னணியில், தமிழரசுக்கட்சி வட்டாரங்களுட் தோன்றியது. இப்போக்கு, 1970களில் இளைஞர் இயக்கங்களின் எழுச்சிக்காலம் வரை வலுப்பட்டு வந்தது. அதன் தொடர்ச்சியை இன்னமும் நாம் புலம்பெயர்ந்த தமிழ்த்தேசியவாதிகளிடையே கணிசமாகக் காணலாம்.

இஸ்ரேலை முன்மாதிரியாகக் கொண்டதன் அடி ஆழத்தில் இருந்த எதிர்பார்ப்பு என்னவெனில், மேற்குலகின் (முக்கியமாக உலக வல்லரசாக உயர்ந்து நின்ற அமெரிக்காவின்) ஆதரவுடன் தமிழருக்கான ஒரு தனியரசை வெல்ல இயலும் என்பதாகும். சில தமிழ்த் தேசியவாதிகள் இஸ்ரேலுடன் தொடர்புகளை ஏற்படுத்த முயன்றனர். 1980களில் இஸ்ரேல், விடுதலைப் புலிகட்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் சமகாலத்தில் இராணுவப் பயிற்சி வழங்கியது என்பதை நாம் பின்னர் அறிந்தோம். எனினும் இஸ்ரேல் தமிழர் விடுதலைப் போராட்டத்தின் போது இலங்கையின் பேரினவாத யூ.என்.பி. ஆட்சியை ஆதரித்தே வந்தது என்பதும் இலங்கை அரசிற்கான ஆயுத வழங்கல்கள் யூ.என்.பி.ஆட்சி போன பின்பும் தொடர்ந்தது என்பதும் கவனிக்கத்தக்கன.

### பிறநாடுகள்

விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டம் வலுத்த சூழலிற் தமிழர் பெருந்தொகையில் புலம் பெயர்ந்தனர். காலப் போக்கில், மேற்குலகநாடுகளில் சில அரசியற் கட்சிகளினுள் தமிழ்த் தேசியவாதிகள் தமிழ் மக்களுக்கு ஆதரவாக அமையக்கூடிய தனிமனிதர்களை அடையாளங் கண்டு ஊக்குவித்தனர். அவ்வாறே தென்னாபிரிக்காவின் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் உட்பட பிற நாடுகளின் அரசியற் கட்சிகளின் உள்ளும் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணயத்தை ஆதரிக்கக் கூடியவர்களை அவர்கள் அடையாளங்கண்டனர். இவ்வாறான தொடர்புகளில் விடுதலைப்புலிகளின் புலம்பெயர்ந்த முகவர்களின் பங்களிப்பு முக்கியமாயிருந்தது.

இத்தனைக்கும் நடுவே, 1970களின் பிற்பகுதி தொட்டு 1980களின் நடுப்பகுதி வரையான காலத்தை விட்டால், தமிழ்த் தேசியவாதிகள் பலஸ்தீனப் போராட்டத்திற்கு ஆதரவாகக் கருத்துரைத்ததாகக் கூற முடியாது. அதை விடவும், ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது தமிழ்த் தேசியவாதத்தின் ஒரு அம்சமாக என்றுமே இருக்கவில்லை எனலாம். விலக்காக தமிழ்த் தேசிய வாதத்தினுள் இழுபட்ட இடதுசாரிப் போக்குடைய ஒரிரு சிறு அமைப்புகளைக் கூறலாம். ஆயினும் அவற்றைப் பிரதான தமிழ்த் தேசியவாதப் போராளி அமைப்புகள் ஒடுக்கி ஓரங் கட்டிவிட்டன.

### போருக்குப் பிந்திய அரசியல்

விடுதலைப் புலிகளின் எழுச்சி முதல் வீழ்ச்சி வரையிலான வரலாற்றை இங்கு விரிவுபடுத்த இயலாது. அது இங்கு தேவையுமில்லை. எனினும் 1983 தொட்டு போரின் முன்பும் போரின் போதும் அமைதிப் பேச்சுகளின் போதும் தமிழ்த்தேசியத்தின் பாராளுமன்ற அரசியற் தலைமையினர் முற்று முழுதாக இந்தியாவால் வழிநடத்தப்பட்டோராக இருந்தனர் என்பதும் விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவுக்குமிடையிலான முரண்பாடு, ராஜீவ்காந்தியின் கொலையால் மட்டுமன்றி, 1987 இலிருந்தே இருந்து வந்தது என்பதையும் மகிந்த சிந்தனை அரசாங்கத்தின் தோற்றம் விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டுவதற்கான வாய்ப்பை இந்தியாவுக்கு வழங்கியது என்பதையும் பலர் நன்கறிவர். விடுதலைப் புலிகளை ஓரங்கட்டி ஒடுக்குவதில் மேற்குலகும் அக்கறையுடன் இருந்தது என்பதை ஏற்பதிற் சிலருக்கு மனத்தடைகள் உள்ளன. ஆனால் அதற்காக சான்றுகள் வெளிவந்தவாறே உள்ளன.

இவற்றின் நடுவே, சில முக்கிய உண்மைகள் நம் முன் தெளிவாகத் தெரிகின்றன.

1. மகிந்த சிந்தனை அரசாங்கத்திற்கு தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எவ்விதமான அக்கறையும் இருந்ததில்லை.
2. போரின் முடிவு அமைதியான தீர்வுக்கு வழிவகுக்கும் என்று கூறியவர்கள் வாயடைத்து நிற்கிறார்கள்.
3. இந்தியா, மகிந்த சிந்தனை அர

சாங்கத்தின் மீது அழுத்தஞ் செலுத்தி, 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் அடிப்படையில் அல்லது அதினும் மேலான ஒரு தீர்வுக்கு வழி செய்யும் என்ற எதிர்பார்ப்பு பொய்த்து விட்டது.

4. மகிந்த சிந்தனை அரசாங்கம் தனது கடும்போக்குப் பேரினவாதக் கூட்டாளிகளின் பாதையிற் சென்று தமிழ் மக்களின் பிரதேச அடையாளத்தை அழிக்கவும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை மறுக்கவும் கடுமையாக முயலுகின்றது.
5. பேரினவாதத் தேசிய இன ஒடுக்கல் இப்போது முஸ்லிம் மக்களையும் மலையகத் தமிழரையும் முன்னிலும் தீவிரமாக இலக்கு வைக்கிறது.
6. போரின் வெற்றியை ஆதாரமாக்கிச் சிங்கள மக்கள் நடுவே ஒரு புறம் வெற்றிப் பெருமிதமும் மறுபுறம் தமிழரையும் மேற்குலகையும் பற்றிய அச்சமும் கலந்த ஒரு திகில் உணர்வு நிலையை உருவாக்கி அதன் துணையுடன் மகிந்த சிந்தனை அரசாங்கம் தன்னை நிரந்தரமாக அதிகாரத்திற் தக்கவைக்க முயல்கிறது.
7. பலவாறான ஒழுங்கீனங்கள் மூலமும் சனநாயக மீறல்கள் மூலமும் ஊடகத்துறை மீதான வன்முறையின் மூலமும், ஒரு வலுவான மாற்று அரசியற் கட்சியோ அணியோ எழுவது தடுக்கப்படுவதுடன், நாடு சர்வாதிகாரப் போக்கில் நகர்த்தப்படுகிறது.
8. போர் நடந்த காலத்திலேயே இரு தரப்பினரதும் பலவாறான போர்க் குற்றங்கள் பற்றிய தகவல்கள் வெளியுலகிற்குத் தெரிய வந்துள்ளன. போரின் இறுதிக் கட்டத்தில் நடந்த இரத்தத்தை உறைய வைக்கும் கொடுமைகளை அரசாங்கம் மறுத்தாலும், அவற்றுக்கான சான்றுகள் வெளிவந்தவாறே உள்ளன.
9. சர்வதேசச் சமூகம் எனப்படும் மேற்குலகும் அதன் கருவியான ஐ.நா.சபையும் அதன் மனித உரிமைகள் சபையும் இலங்கை அரசாங்கத்தின் போர்க்குற்றங்களும் மனித உரிமை மீறல்களும் பற்றி மேற்கொண்ட விசாரணைகளில் இலங்கை அரசாங்கம் ஒத்துழையாமையின் பயனாகவே இலங்கை அரசாங்கத்தின் மீதான ஐ.நா.மனித உரிமைகள் சபை நெருக்குவாரங்கள் மேலும் கடுமையாகியுள்ளன.
10. மேற்குலக, ஐ.நா. நெருக்குவாரங்களைத் தணிக்கும் நோக்கிலேயே இலங்கை அரசாங்கம் கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்தது. ஆணைக்குழுவின் பரிந்துரைகள், தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கான ஆலோசனைகள் என்ற வகையில் மிகவும் போதாதவையாயினும், சில உடனடிப் பிரச்சினைகளுக்கு ஏற்ற ஆலோசனைகளைக் கொண்டிருந்தன. அவற்றை நடைமுறைப்படுத்தவும் இலங்கை அரசாங்கம் ஆயத்தமில்லை என்பதையே இன்று வரையிலான அதன் நடத்தை உணர்த்துகிறது.
11. இத்தனைக்கும் நடுவே, அரசாங்கத்தின் மீதான வெளிநெருக்குவாரங்களைத் தனக்குச் சாதகமான முறையில் அரசாங்கம் உள்நாட்டில் பயன்படுத்துகிறது. மேலைநாடுகளின் ஆதிக்கப் போக்கை எதிர்த்து நிற்பதாகவும் இலங்கையின் இறைமையைக் காப்பதற்காக எந்த சர்வதேசத் தண்டனைக்கும் ஆயத்தம் என்றும் மக்களுக்குக் கூறப்படுகிறது. ஆயினும் மேற்குலகம் விதிக்கும் பொருளாதார நிபந்தனைகளை மறுப்பின்றி ஏற்று மக்கள் மீது பொருளாதாரச் சுமையை ஏற்றியும் வருகிறது.

> ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தீர்மானம் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வைப் பற்றியதல்ல என்பது எல்லோருக்கும் தெரியும். இத்தீர்மானத்திற்கும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கும் புலம் பெயர்ந்த தமிழ்த் தேசிய அமைப்புகளின் நெருக்குவாரத்திற்கும் அதிக உறவு இருப்பதாக நினைப்பது தவறு

## மனித உரிமைகள் சபையின் தீர்மானம்

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் பற்றிய ஒரு கண்டனத் தீர்மானம் முதல்முறையாக ஐ.நா.மனித உரிமைகள் சபையிற் கொண்டுவரப்படவிருந்த போது, மிகவும் தந்திரமான காய் நகர்த்தலின் மூலம், பயங்கரவாதத்தைத் தோற்கடித்ததற்காக இலங்கை அரசாங்கத்தைப் பாராட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றிக் கண்டனத் தீர்மானத்தைத் தவிர்க்க முடிந்தது.

இரண்டாவது தடவை கண்டனத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது, இந்தியாவின் குறுக்கீட்டால் அதன் கடுமை தணிக்கப்பட்டது. எனினும் இலங்கை மீது பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டன.

விதிக்கப்பட்ட நிபந்தனைகளும் அலட்சியப்படுத்தப்பட்ட நிலையில், இன்று, இலங்கையின் நிலை முன்னிலும் பலவீனமாகவே உள்ளது. எனவே, இம்முறை இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான கடுமையான தீர்மானம் ஒன்று நிறைவேறும் என நாம் எதிர்பார்க்கலாம்.

## தீர்மானமும் தமிழ்த் தேசியத் தலைமைகளும்

ஐ.நா. மனித உரிமைகள் சபைத் தீர்மானம் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வைப் பற்றியதல்ல என்பது எல்லோருக்கும் தெரியும். இது இலங்கை அரசாங்கத்தின் போர்க்குற்றங்களையும் மனித உரிமை மீறல்களையும் விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கு

மாறு இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்தும் நோக்குடையது. இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறும் அது வற்புறுத்தலாம். முன்னைய தீர்மானத்தைத் தட்டிக்கழிக்கும் விதமாக இலங்கை அரசாங்கம் நடந்துகொண்டமை கடுமையான விமர்சனத்திற்கு உட்படலாம். இலங்கை அரசாங்கத்திற்கெதிரான எவ்விதமான நடவடிக்கைகளை எடுக்குமாறு அவ்வறிக்கை ஐ.நா.சபைக்குப் பரிந்துரைக்கும் என்பது நிச்சயமற்றது.

பிரபாகரனின் பால வயது மகன் பாலச்சந்திரனின் கொலை தொடர்பான படம் காலங்கணித்து வெளியிடப்பட்டது என்பதில் ஐயமில்லை. இலங்கையின் மீதான தீர்மானம் கடுமையாக இருக்கும் என்பதற்கு அதுவும் ஒரு சான்றாகும்.

## தீர்மானமும் தமிழ்த் தலைமைகளும்

எவ்வாறாயினும் இந்தத் தீர்மானத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் புலம்பெயர்ந்த தமிழ்த் தேசிய அமைப்புகளின் நெருக்குவாரங்கட்கும் அதிகம் உறவு இருப்பதாக நினைப்பது தவறு. தமிழ்த் தலைமைகளை அவர்களோடு ஒட்டி உறவாடிய தமிழக அரசு போரின் இறுதிக் காலத்தில் ஏமாற்றியது. இந்திய அரசு தமிழ் மக்களின் படுகொலைக்கு மனமறிந்து உதவியது. ஆயிரக்கணக்கானோர் படுகொலைக்காளாவர் என்பதை 2009 இன் தொடக்கத்திலேயே அறிந்திருந்த மேற்குலகும் ஐ.நா.சபையும் அந்தக் கொலைகளைத்தவிர்க்க எதையுமே செய்யவில்லை. ஐ.நா.தலைமையகத்தின் மெத்தனமான போக்குப்பற்றி விசாரித்த ஒரு ஐ.நா.உள்ளக விசாரணைக் குழு, திட்டமிட்ட புறக்கணிப்பைச் சுட்டும் விதமான அறிக்கையொன்றைச் சில மாதங்கள் முன்பு வெளியிட்டது. அந்த அறிக்கையில் முக்கியமான சில பகுதிகள் நீக்கப்பட்ட போதிலும், ஐ.நா. அலுவலர்களும் செயலாளரும் தமிழ் மக்களின் படுகொலை தொடர்பாக, நிகழ்வுகட்கு முன்னும் பின்னும், போதிய அக்கறை காட்டவில்லை என்பதே முக்கியமானது.

இந்தப் பின்னணியிலே இங்குள்ள தமிழ்த் தேசிய அமைப்புகள் இரண்டு விழுந்தடித்துக் கொண்டு ஜெனீவாவுக்குப் போயுள்ளதைக் கவனிக்க வேண்டியுள்ளது. இது தமிழ் மக்களை நம்பவைப்பதற்கான ஒரு நாடகமேயன்றி வேறல்ல என்றே கூறலாம்.

> அரசாங்கத்திற்கு உள்நாட்டு அரசியலை பொறுத்தவரை அதற்கு ஆதரவான தீர்மானங்களும் வெற்றிகள் தான். எதிரான தீர்மானங்களும் வெற்றிகள் தான்

புலம்பெயர்ந்த தமிழ்த் தேசிய அமைப்புகளுக்குத் தங்களை முக்கியப்படுத்துவதற்கு இந்த ஜெனீவாக் கூட்டமும் அதில் வரவுள்ள தீர்மானமும் தேவை. தத்தமது அழுத்தங்களாலேயே இவ்வளவு கடுமையான தீர்மானம் நிறைவேறியது என்று ஒவ்வொரு குழுவும் உரிமை கோரும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் தனக்கான வாய்ப்பைத் தவறவிடப்போவதில்லை. பெப்ரவரி நடுப்பகுதி வரை தாங்கள் ஜெனீவாவுக்குப் போவது பற்றி நிச்சயமற்றிருந்த கூட்டமைப்பினர் திடீரென்று தமது மனதை மாற்றியிருப்பது கவனிக்கத்தக்கது.

## அந்நிய தொடர்புகள்

வெளிநாட்டுப் பயணம் ஒவ்வொன்றின் மூலமும் தமிழ் மக்களுக்காக எதையோ வென்று தந்துள்ளதாக த.தே.கூ. பம்மாத்து செய்துவந்துள்ளது. பற்பல இந்திய பயணங்கள் மூலம் எதுவுமே வெல்லப்படாததால், இப்போது பிரதமர் மன்மோகன் சிங் அவர்களுடன் பேசினார் என்பதற்குப் பெறுமதியே இல்லாமற் போய்விட்டது.

உலகப்பெருவல்லரசான அமெரிக்கா தங்களை மதித்து அங்கு வரவழைத்ததாக 2011 இல் நமக்குப் பொய்யுரைக்கப்பட்டது. அமெரிக்க வெளிவிவகாரத்துறைப் பிரமுகரான ரொபேட் பிளேக்கிடம் தாங்கள் அமெரிக்க வெளி அலுவல்கள் திணைக்களத்திற்குச் சென்று யாரையும் சந்திக்க முடியுமா என்று அவர்கள் மன்றாடியது உண்மை. அதிகார பூர்வமான அழைப்பு எதுவும் வரவில்லை என்பது அதைவிட உண்மை. அழைப்பிதழைக் காட்டுமாறு விடுக்கப்பட்ட சவாலை அவர்கள் ஏற்கவில்லை என்பதும் முக்கியமான உண்மை. எப்படியோ அமெரிக்காவுக்குப் போய் வெளிஅலுவலர்கள் திணைக்களத்தில் கீழ்மட்ட அதிகாரிகள் சிலரை சந்தித்துவிட்டுத் திரும்பினார்கள். அச்சந்திப்பின் முக்கியத்துவம் எவ்வளவு என்பதை, அச்சந்திப்புப் பற்றிய கூட்டறிக்கை எதுவுமே வெளியிடப்படவில்லை என்பதிலிருந்து அறியலாம்.

மறுபடியும், சென்ற ஆண்டின் பிற்பகுதியில் அமெரிக்க அழைப்பையேற்றுப் போக இருப்பதாகத் தெரிவித்தார்கள். ஆனாற் போகவில்லை. (அதனால் ஒருவேளை ஒபாமா மிகவும் மனமுடைந்து போயிருப்பார். பின்னர் வந்து சந்திப்பதாகக் கடிதமோ மின்மடலோ அனுப்பியிருப்பார்களென்று நினைக்கிறேன்) பின்னர் தென்னாபிரிக்காவுக்குப் போகிற கதை சொல்லப்பட்டது. பெப்ரவரியில் அவர்கள் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் மாநாட்டுக்குத் தான் போனார்களே ஒழிய, அரசாங்க அழைப்பில்லல. நிச்சயமாக ஆபிரிக்க தேசிய காங்கிரசில் இலங்கைத் தமிழர்கட்கு அனுதாபமானவர்கள் உள்ளனர். ஆயினும் தென்னாபிரிக்க அரசாங்கம் இப்போது ஒரு முதலாளிய அடக்குமுறை அரசாங்கமாகிவிட்டது. சென்ற ஆண்டு மரிக்கானாவில் பிளற்றினம் சுரங்கத் தொழிலாளர்க

**சிங்களப் பேரினவாதம் ஒரு வலுவான அரசியல் சக்தியாகியுள்ளது. அதைக் கைவிட்டால் தேர்தல் களை வெல்லுவதற்கு உதவக் கூடிய எந்த ஒரு கொள்கையும் அரசாங்கக் கட்சியிடமும் இல்லை, பிரதான எதிர்க்கட்சியிடமும் இல்லை**

ளின் வேலை நிறுத்தத்தின் போது, தென்னாபிரிக்கப் பொலிஸார் பல சுரங்கத் தொழிலாளர்களைச் சுட்டுக் கொன்றதை நாம் மறக்கலாகாது. அந் தப் படுகொலையை ஆபிரிக்க தேசி யக் காங்கிரஸும் அதன் கூட்டாளி யான தென்னாபிரிக்க கம்யூனிஸ்ட் கட்சியும் நியாயப்படுத்தின. ஏகாதி பத்தியத்திற்கு உடந்தையாகிவிட்ட தென்னாபிரிக்க அரசிடமிருந்து தமி ழர் எதையும் எதிர்பார்க்க இயலாது. எதிர்பார்க்கக்கூடிய விதமாக எதை யும் த.தே.கூ. பெற்று வரவுமில்லை.

### தமிழரின் மீட்பர்கள்

நீரில் முழ்குகிறவனுக்கு ஒரு துரும்பு மாதிரி வரவுள்ள மனித உரி மைகள் சபைத் தீர்மானம் தமிழ்த் தேசியவாதிகட்குக் கிடைத்துள்ளது. அறுபது ஆண்டுகாலமாக சிங்கள-தமிழ் இனப் பகையைப் பற்றிப் பேசியே அரசியல் நடத்திய ஒரு பாரம்பரியம் இன்று திக்கற்றுத் தவிக் கிறது. தமிழ் மக்கள் மத்தியிலுள்ள ஏற்றத் தாழ்வுகளைப் புறக்கணித்துப் பழைமைவாதத்தில் மூழ்கிக் கிடக் கிற தமிழ்த் தலைமைகள், ஒடுக்கப்ப டுகிற பிற தேசிய இனங்களையும் பேரினவாதப் பிடிக்குட் சிக்காத சிங் களவர்களையும் தமக்கு ஆதரவாகத் திரட்டுவதற்கு என்றுமே அக்கறை காட்டவில்லை. அன்றுபோல் இன் றும் ஏதாவது அயல் நாட்டையும் அந்நிய மீட்பரையும் காட்டியே தமிழ் மக்களை ஏய்த்து தம்மை அவர்களு டைய பிரதிநிதிகளாகத் தக்கவைத்துக் கொண்டுள்ளனர்.

### சிங்களவர்களின் மீட்பர்கள்

பேரினவாத மகிந்த சிந்தனை அர சாங்கத்திற்குச் சில உண்மைகள் தெளிவாக விளங்குகின்றன.

1. சிங்களப் பேரினவாதம் ஒரு வலு வான அரசியற் சக்தியாகியுள்ளது. அதைக் கைவிட்டால் தேர்தல் களை வெல்லுவதற்கு உதவக் கூடிய ஒரு கொள்கையும் அரசாங் கக் கட்சியிடமும் இல்லை. பிரதான எதிர்க்கட்சிகளிடமும் இல்லை.
2. ஜே.ஆர்.ஜயவர்தன உருவாக்கிய ஒரு எதேச்சாதிகார ஆட்சிமுறை யும் சிங்கள மக்களை அச்சுறுத்திய ஒரு போரை முடிவுக்குக் கொண்டு வந்ததன் பயனான செல்வாக் கையும் கொண்டு ஆட்சி அதிகா ரத்தை மேலும் இறுக்கியுள்ள இந்த அரசால் ஜனநாயகச் சூழலுக்கு மீள இயலாது.
3. தேசிய இன முரண்பாட்டை மேலும் வலுப்படுத்துவதன் மூலம் சிங்கள மக்களின் கவனத்தை அவர்களைப் பாதிக்கும் பாரிய பொருளாதாரப் பிரச்சினைகளிலி ருந்தும் சட்டமும் ஒழுங்கும் பற் றிய பிரச்சினைகளிலிருந்தும் பெருக்கெடுக்கும் அரச நிருவாக ஊழலிலிருந்தும் ஜனநாயக அடிப் படை உரிமை மீறல்களிலிருந்தும் திசை திருப்ப இன்னமும் இயலு மாயுள்ளது.
4. இலங்கைக்கு ஆதரவான எந்த அந்நிய நிலைப்பாட்டையும் இல ங்கை அரசாங்கத்திற்கான அங் கீகாரமாகவும் அரசாங்கத்திற்கு எதிரான எந்த நிலைப்பாட்டையும் நாட்டின் இறைமைக்கெதிரான அந்நிய மிரட்டலாகவும் காட்ட இயலும் என்பதுடன், தேசிய இனப்பிரச்சினையிலோ போர்க் குற்றங்களின் தொடர்பிலோ அர சாங்கத்தைக் குற்றஞ்சாட்ட சிங் கள மக்கள் நடுவே செல்வாக் குள்ள எந்த அரசியற் கட்சியும் துணியாது.

இந்த நிலைமைகளின் கீழ், மகிந்த சிந்தனை அரசாங்கத்துக்கு, உள் நாட்டு அரசியலைப் பொறுத்தவரை, அதற்கு ஆதரவான தீர்மானங்களும் வெற்றிகள் தான். எதிரான தீர்மானங் களும் வெற்றிகள் தான்.

ஐ.நா.சபையோ அமெரிக்காவோ ஐரோப்பிய ஒன்றியமோ இலங்கை மீது செலுத்தும் நெருக்குவாரங்களின் நோக்கம் மனித உரிமை மீறல்களை யும் போர்க்குற்றங்களையும் தண்ட னைக்குட்படுத்துவதல்ல என்று இலங்கை அரசாங்கம் அறியும். சீனா வுடனான அதன் நட்பு ஒரு புறம் அதற்கெதிரான நடவடிக்கைகட்கான ஒரு தூண்டுகோலாக உள்ளது. இன் னொரு புறம் அதுவே மேற்குலக நெருக்குவாரங்கட்கெதிரான துருப் புச் சீட்டாகவும் பயன்படுகிறது.

இந்த ஆட்டம் பல காலம் நீடிப்பது கடினம். எனினும் என்றாவது மேற் குலகு இலங்கையில் குறுக்கிட்டு ஆட்சியைக் கவிழ்க்க முடிவெடுக் கும்வரை, இந்த அரசாங்கத்துக்கு ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானம் அதற்குக் கிடைத்த ஒரு வரமாகவே இருக்கும். மேற்குலகின் மூலம் என்ன நடந்தாலும், அதனால் தமிழ் மக்கள் நன்மையடைய மாட் டார்கள் என்பது என் கணிப்பு.

### கைகொடுக்கும் தெய்வங்கள்

சுருக்கமாகச் சொல்வதானால், மேற்குலகும் ஐ.நா. நிறுவனமும் இன்று வங்குரோத்தாகியுள்ள தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் பிழைத்தி ருக்கக் கைகொடுக்கும் தெய்வங் களாக உள்ளன. அதே அளவுக்கு வங்குரோத்தாகியுள்ள மகிந்த சிந் தனை அரசாங்கத்துக்கும் அது கவிழ்ந்து விழாமல் கைகொடுக்கும் தெய்வங்களாக அவை உள்ளன. ■

உள்நாட்டு அரசியல்

# ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தீர்மானமும் இந்தியாவும்

கடந்த வருடம் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஜெனீவாவில் இந்தியா ஆதரித்தது என்றால், இத்தடவையும் ஆதரிக்கப் போகிறது என்றால் அதற்கு இலங்கை மீது இந்தியாவுக்கு குரோத உணர்வு இருக்கிறது என்று அர்த்தமில்லை



கே.கொடகே

ஜெனீவாவில் ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இவ்வருடம் தீர்மானங்களுக்கு நாம் முகங்கொடுக்க வேண்டிவரும் என்பது அரசாங்கத்துக்குத் தெரியும். உகந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், எமக்கு எதிராகக் கொண்டுவரப்படக்கூடிய தீர்மானங்களின் உள் எடக்கம் குறித்தும் சாத்தியமான விளைவுகள் குறித்தும் கூட அரசாங்கம் எதிர்பார்த்திருக்கவேண்டும். இந்த ஐ.நா. அமைப்பினால் மேற் கொள்ளப்படக்கூடிய எந்தவொரு கெடுதியான நடவடிக்கையையும் தடுத்துநிறுத்துவதற்கு நாம் எடுத்திருக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அறிவதில் இந்நாட்டு மக்களுக்கு அக்கறை இருக்கும். எமது நாட்டின் இறைமையைப் பாதிக்கக்கூடிய மிகவும் கஷ்டமான சூழ்நிலைக்கு நாம் முகங்கொடுக்க வேண்டியிருக்கிறது என்பதை சகல செய்திகளும் உணர்த்துகின்றன.

விளைவு எத்தகையதானதாக இருக்குமென்பதை அறிந்திருந்தும் கூட, குறுகியகால அறிவிப்பில் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அமைச்சர் மகிந்த சமரசிங்க ஒரு துணிச்சலான மனிதர் என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தில் விரிவானதொரு அறிக்கையை விடுத்து உரையாற்றியமைக்காக அவரைப் பாராட்டவேண்டும். அவரின் உரை எமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. 'இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாத்துப் பேணுவது தொடர்பில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையினால் கடைப்பிடிக்கப்படக்கூடிய நேர்மையற்ற, பக்கச்சார்பான, கோட்பாட்டு நெறியற்ற, அநீதியான அணுகுமுறையை நாம் கடுமையாக ஆட்சேபிக்கிறோம்' என்று மகிந்த சமரசிங்க திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.

'பெருவாரியான மனித உரிமை மீறல்கள்' என்பதுபோன்ற பதங்களைப் பாவித்து விலக்கோ வரையறையோ எதுவுமின்றி அறிக்கைகளை விடுக்கும் நவிபிள்ளையையும் சமரசிங்க கடுமையாகச் சாடியிருக்கிறார். அவரின் வார்த்தைகளிலேயே கூறுவதானால்,

'நவிபிள்ளை ஊகங்களின் அடிப்படையிலமைந்த, உறுதிப்பாடில்லாத சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கை மீது தொடர்ச்சியாக குற்றச்சாட்டுகளைச் சுமத்துகிறார்.'

இந்தப் பெண்மணி முற்றிலும் பக்கச்சார்பானவர் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. புலம் பெயர்ந்த தமிழர்களிடம் பணம் வாங்குகிறார் இந்தப் பெண்மணி என்ற எண்ணத்தை அவரின் சொந்த அறிக்கைகளே ஏற்படுத்துகின்றன. இதைப் பலர் இல்லை என்று சொல்லக்கூடும். எமக்குத் தொல்லை தருபவர்களிடமிருந்து நாம் கடுமையான சவாலை எதிர்நோக்குகிறோம் என்பதிற் சந்தேகமில்லை. புலம் பெயர் தமிழர்கள் மத்



தியில் இருந்து தங்களுக்கு பணம் தருபவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவே இந்தத் தொல்லைக்காரர்கள் செயற்படுகிறார்களே, தவிர அவர்களின் செயற்பாடுகளுக்கு கோட்பாட்டு ரீதியான அடிப்படை எதுவுமேயில்லை. இலங்கையில் ஈழத்தை உருவாக்க வேண்டுமென்று கோரும் உலகத் தமிழ்ப் பேரவை அதன் மூன்றாவது வருடாந்த மகாநாட்டை பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் குழு அறை ஒன்றில் நடத்துகிறதென்றால் பார்த்துக்கொள்ளுங்களேன். இதைவிட வேறு என்ன சொல்ல இருக்கிறது.

உலகத்தமிழர் பேரவையின் இந்த மகாநாட்டில் புலிகள் ஆதரவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் பிரிட்டிஷ் பிரதிப் பிரதமர் நிக்கிளெக் மற்றும் சொல்ஹெய்ம் உட்பட பலர் கலந்துகொள்கிறார்கள். போர் முடிந்துவிட்ட போதிலும், பயங்கரவாதிகள் தோற்கடிக்கப்பட்டுவிட்ட போதிலும், இப்போது நாம் புலிகள் அளவுக்கு சக்திவாய்ந்தவர்களாக விளங்கும் புலம்பெயர்தமிழர்களை தொடர்ந்து எதிர்த்து நிற்க வேண்டியிருக்கிறது. இலங்கையில் வாழுகின்ற தமிழ் மக்களுக்கு நேசக்கரம் நீட்டுவதன் மூலமாக இதை எம்மால் செய்ய முடியும். இந்த நாடு எமக்குச் சொந்தமாயிருப்பதைப் போன்றே அவர்களுக்கும் சொந்தமானது. ஒரே இலங்கைத் தேசத்தைக் கட்டியெழுப்பும் பணியில் அரசாங்கம் இப்போது இறங்க வேண்டும். மூன்று தசாப்தகாலப் போருக்கான காரணிகளை நாம் கவனித்துக் கையாள வேண்டும்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளை நாம் நடைமுறைப்படுத்த வேண்டியது மாத்திரமல்ல, எமது தமிழ்ச் சகோதரர்களை அணுகவும் வேண்டும். துணையாதரவின் அடிப்படையில் தமிழர்களை அரசியல் ரீதியில் உரிமையும் அதிகாரமும் உடையவர்களாக்க வேண்டும். தமிழர்களின் மனங்களை வெற்றிகொள்வதற்கு எவ்வளவோ காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. ஏற்கனவே நான் குறிப்பிட்டதைப் போல, மோதலுக்கான காரணிகளை நாம் நேர்மையுடன் கவனிக்க வேண்டும். அந்தக் காரணிகள் 1956 ஆம் ஆண்டில் இருந்தே ஆரம்பிக்கின்றன. பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதற்கு ஆர்வம் கொண்ட நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களைப் பாதித்த தரப்படுத்தல் முறை போன்ற பல பாகுபாடான நடவடிக்கைகள் தமிழ் மக்களை எங்களிடமிருந்து அந்நியப்படுத்தத் தொடங்கின. குறிப்பாக வடபகுதி மக்களைப் பொறுத்தவரை, கல்வியே விடுதலைக்கான அனுமதிச் சீட்டாக விளங்கியது. இன்றும் விளங்குகிறது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வரப்படுகின்ற தீர்மானங்கள் எல்லாம் ஒரே இலங்கைத் தேசத்தை உருவாக்க உதவப்போவதில்லை. ஏனென்றால், அவை தவறு கண்டுபிடிக்கும் செயற்பாடுகளின் ஒரு அங்கமேயாகும். அவற்றில் ஆக்க பூர்வமானவை என்று எதுவுமில்லை. குறிப்பாக, வடக்கில் மேற்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய பாரிய பௌதிக மற்றும் மனிதாபிமானப் பணிகளை இந்தத் தீர்மானங்கள் அங்கீகரிக்கவில்லை. நாமெல்லோரும் காண்பதற்கு அங்கலாய்த்துக் கொண்டிருக்கிற சமாதானம், உறுதிப்பாடு மற்றும் ஐக்கியத்தை அடைவதற்கு எமது நாட்டுக்கு நம்பிக்கையூட்டுவதாக இந்தத் தீர்மானங்கள் அமைவதில்லை.

தற்போது வெளியிடப்பட்டிருக்கும் தீர்மானத்தில் ஒரு பந்தி பின்வருமாறு அமைகிறது.

'சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான உரிமைகள் மீறல்கள் என்று கூறப்படுகின்றவற்றை சுயாதீனமாகவும் நம்பகமாகவும் விசாரிப்பதற்கும் உள்நாட்டில் பொறுப்புடைமைச் செயன்முறைகளைக் கண்காணிப்பதற்கும்' அத்தகைய கண்காணிப்பு என்பது நிச்சயமாக எமது இறைமையை, சுயாதிபத்தியத்தை மீறுவதாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. அதற்கு நாம் அனுமதிக்கக்கூடாது. ஏனென்றால், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையுடன் நாம் எப்போதுமே ஒத்துழைத்து வந்திருக்கிறோம். எங்களை அவர்கள் எளிதாக நினைத்துவிட அனுமதிக்கக்கூடாது. இது இடம் பெற அனுமதிக்கப்பட்டால், தவறான முன்னுதாரணம் ஒன்று ஏற்படுத்தப்படுவதற்கு அனுமதித்ததாகிவிடும். அதாவது சிறியநாடுகளுக்கு எதிராக ஒரு ஆயுதமாக இதை வல்லாதிக்க நாடுகள் பயன்படுத்த அனுமதிப்பதாக அமைந்துவிடும்.

இன்னொரு முக்கியமான விடயம். ஏன் அதை நாம் மனிதாபிமான நடவடிக்கை என்று வர்ணித்தோம். என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. இது ஒரு போர். ஒரு பயங்கரவாதக் குழுவுக்கு எதிரான போர். அதுவும் ஒரு தனியான அரசை உருவாக்குவதற்காக போராடிய, உலகிலேயே மிகவும் சக்திமிக்க பயங்கரவாதக் குழு என்று வர்ணிக்கப்பட்ட அமைப்பிற்கு எதிரான போர். விடுதலைப் புலிகளினால் பணயக்கைதிகளாக வைக்கப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான மக்களை காப்பாற்றுவதற்கு நாம் நாட்டம் கொண்டபோது போரின் இறுதிக் கட்டங்களில் அது மனிதாபிமான நடவடிக்கையாக மாறியது.

போர் என்றால் போர்தான். இரண்டாவது உலக மகாயுத்தத்தில் பலி

**நவி பிள்ளை முற்றிலும் பக்கச்சார்பானவர் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. புலம்பெயர்ந்த தமிழர்களிடம் பணம் வாங்குகிறார் இந்த பெண் மணி என்ற எண்ணத்தை அவரின் சொந்த அறிக்கைகளே ஏற்படுத்துகின்றன. இதை பலர் இல்லையென்று சொல்லக்கூடும்**

யான 5 கோடிபேரில் 3 கோடி பேர் குடிமக்கள், எந்த ஆயுத மோதலிலும் குடிமக்களே மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுகிறார்கள். ஆனால், குடிமக்களை வேண்டுமென்றே திட்டமிட்டு இலக்கு வைத்தால் அது நிச்சயமாக கொலையே. இது இன்னொரு கேள்வியை எழுப்புகிறது. போரிடுபவர்கள் (Combatants) யார், போரிடாதவர்கள் (Non-combatants) யார்? சிவிலியன் உடையில் இருந்தவர்கள் சண்டையிலீடுபடுபவர்களாக விளங்கிய சந்தர்ப்பங்கள் பல உண்டு. தற்கொலைப்படையினரை எடுத்துக்கொள்ளுங்கள். உதாரணத்திற்கு ராஜீவ்காந்தியையும் பிரேமதாசவையும் கொலை செய்தவர்கள் எப்படியிருந்தார்கள்?

இங்கு மேலுமொரு கேள்வி எழுகிறது. கடுஞ் சமருக்கு மத்தியில் நிற்கிற ஒரு படைவீரர், தனது துப்பாக்கியினால் சுடுவதற்கு முன்பாகத் தன்னை நோக்கிவருபவர் ஒரு தற்கொலைப் போராளியா, இல்லையா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்? அவர் அவ்வாறு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? ஐயநிலையின் சாதகம் (Benefit of doubt) படைவீரருக்கு கொடுக்கப்படக்கூடாதா? அடுத்து விடுதலைப் புலிகளுக்கு தாங்களாக முன்வந்து உதவிய குடிமக்கள் இருக்கிறார்கள். புலிகள் பதுங்கு குழிகளையும் மண் அணைகளையும் கட்டுவதற்கு குடிமக்கள் உதவியிருக்கிறார்கள். ஏனைய பல முயற்சிகளுக்கும் பலவழிகளில் குடிமக்கள் துணைபோயிருக்கிறார்கள். அவர்களைப் போரில் ஈடுபடாதவர்கள் என்றும் குடிமக்கள் என்றும் கருத வேண்டுமா? மனிதாபிமானச் சட்டங்கள் என்று கூறப்படுகின்றவற்றின் கீழ் பாதுகாக்கப்படுவதற்கான உரிமையை அத்தகைய ஆட்கள் கொண்டிருக்கிறார்களா? அதனால் யார் போரில் ஈடுபட்டவர், யார் போரில் ஈடுபடாதவர் என்ற கேள்வி முக்கியமாகிறது.

'நீதியையும் நேர்மை இலக்கையும் உறுதிப்படுத்துவதற்கு நம்பகமானதும் சுயாதீனமானதுமான நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும்' என்ற கோரிக்கை எமது சுயாதிபத்தியத்தை அப்பட்டமாக மீறுவதாக அமைகிறது. எமக்குரிய இந்த சுயாதிபத்தியம் ஜெனீவா சாசனத்திலேயே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கில் மோதல் இடம்பெற்ற பகுதிகளில் பாதுகாப்புப் படைகளின் பிரசன்னத்தைப் பொறுத்தவரை, அது பல்வேறு காரணங்களினால் நியாயப்படுத்தப்படக் கூடியதாகும். நாட்டின் பாதுகாப்புக்கு அதியுயர் முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும். புலனாய்வுத் தகவல்களைச் சேகரிப்பது நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு முற்றிலும் அவசியமானதாகும். போர் முடிவுக்கு வந்துவிட்டதால் என்றென்றைக்குமாக எமது பாதுகாப்பு உத்தரவாதப்படுத்தப்பட்டுவிட்டது என்று நினைப்பது படுமுட்டாள்தனமானதாகும். வரவிருக்கும் பல வருடங்களுக்கு நாம் விழிப்புடன் இருக்க வேண்டியிருக்கிறது.

அமெரிக்கத் தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவு அளிப்பதற்கான காரணங்கள் வெளிப்படையானவை. இந்தியாவில் இன்னும் ஒருவருடத்தில் பொதுத் தேர்தல்வரவிருக்கிறது. காங்கிரஸ் தலைமையிலான தற்போதைய கூட்டரசாங்கம் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதற்கு தமிழ் நாட்டைச் சேர்ந்த 16 எம்.பி.க்களின் ஆதரவில் தங்கியிருக்க வேண்டியிருக்கிறது. உடனடியாக இப்போதைக்கு பொதுத்தேர்தல் ஒன்றுக்குப் போவதற்கு அரசாங்கம் விரும்பும் என்ற கேள்விக்கே இடமில்லை.

தற்போதைய இந்திய அரசாங்கம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கத் தீர்மானத்துக்கு ஆதரவளித்து, அல்லது மீண்டும் ஆதரவளிக்கப் போகிறது என்றால், அதற்கு இலங்கை மீது இந்தியாவுக்கு குரோத உணர்வு இருக்கிறதென்று அர்த்தமில்லை. இந்திய அரசாங்கம் அதன் சொந்த இருப்பை உறுதி செய்ய வேண்டியிருக்கிறது. அதுவே முற்றிலும் காரணம்.

சமகாலத்தின் வாசகர்களுடன் நான் ஒரு சிந்தனையைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

இன்னமும் கூட இலங்கையில் பிரிட்டனுக்குச் சொந்தமாக தேயிலைத் தோட்டங்கள் இருந்திருக்குமானால், அந்த நாடு எத்தகைய நிலைப்பாட்டை எடுத்திருக்கும்? மோட்டார் ரோலா, ஹரிஸ் செமி கொண்டக்டர்ஸ் மற்றும் மூன்று பிரமாண்டமான கம்பியூட்டர் நிறுவனங்கள் இலங்கையில் தொடர்ந்தும் இருந்திருந்தால் அமெரிக்காவின் நிலைப்பாடு எத்தகையதாக இருந்திருக்கும்? அந்த நிறுவனங்கள் 1983 ஜூலை வன்செயல்களுக்குப் பிறகு அவற்றின் நிர்மாணப் பணிகளை நிறுத்திக் கொண்டன. அவை தொடர்ந்தும் செயற்பட்டிருந்தால் இலங்கையில் அமெரிக்க முதலீடுகள் மலேசியாவில் இன்றுள்ளதைப் போன்று பெருவாரியாக இருந்திருக்கும்.

கடந்த வருடமும் ஜெனீவாவில் அமெரிக்கா எமக்கு எதிராக விரும்பத்தகாத தீர்மானமொன்றைக் கொண்டுவந்தது. மலேசியாவில் உள்ள (இலங்கைக்கு எதிரான) புலம்பெயர் தமிழர்கள் அந்த நாட்டு அரசாங்கம் அமெரிக்கத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டுமென்று கோரியதற்கு மத்தியிலும், மலேசியாவை ஜெனீவா வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாதிருக்கச் செய்ய என்னால் இயலுமாக இருந்தது. அது மாத்திரமல்ல, அவ்வாறு வாக்கெடுப்பில் கலந்து கொள்ளப் போவதில்லை என்பதை மலேசியப் பிரதமர் நகுயிப் பைக் கொண்டு தொலைபேசி மூலம் எமது ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு உறுதிப்படுத்திக் கூறவும் வைத்தேன். எனக்குக் கிடைத்த பரிசு என்ன தெரியுமா? கோலாலம்பூரில் இருந்து திருப்பியழைக்கப்பட்டேன்! ■

*(கே.கொடகே ஓய்வு பெற்ற இலங்கை இராஜதந்திரி)*

உள்நாட்டு அரசியல்

# போர்க் குற்றங்கள்; வங்கதேசம் சொல்லும் கதை

**வங்கதேசத்தில் போர் முடிந்து 40 ஆண்டுகளுக்குப் பின்னரும் போர்க்குற்றங்கள் குறித்த விசாரணைகள் நடைபெறுவது வரவேற்கத்தக்கது. சமகால அரசியலை முன் வைத்து நடைபெறும் தற்போதைய அந்த விசாரணை எதிர்க்கட்சியாக இருக்கும் முன்னாள் பிரதமர் பேகம் காலிதா சியா தலைமையிலான கூட்டணி ஆட்சிக்கு வந்தால் ஒன்றும் இல்லாமல் ஆக்கப்படலாம்**



என்.சத்தியமூர்த்தி

வருடத்திற்கு இரண்டு முறை, பருவ மழை பெய்கிறதோ-இல்லையோ, நெல் பயிரிடப்படுகிறதோ-இல்லையோ, ஜெனீவாவின் ஐ.நா மனித உரிமை மன்றத்தின் முன் 'போர்க் குற்றங்கள்' குறித்த விவாதங்கள் வருடத்திற்கு இரண்டு முறை நடைபெறுவது தவிர்க்க முடியாத விடயமாகி விட்டது. காரணம், 'போர்க் குற்றங்கள்' குறித்த கவலைகள் இயற்கையை நம்பி இல்லை என்பதே உண்மை. அவை செயற்கையான விடயமும் அல்ல. ஆனால், அதனை முன் வைத்து சர்வதேச அரசியல் செய்வதில் எங்கேயோ செயற்கைத் தனம் புகுத்தப்படுகிறதோ என்ற கேள்வி மட்டும் எழத்தொடங்கி உள்ளது என்பதும் உண்மை.

இனப்போர் தடாலடியாக முடியும் என்றோ, விடுதலைப் புலிகள் இயக்கம் முழுமையாகத் தோல்வியைத் தழுவும் என்றோ அவர்களை ஆதரித்து அரசியல் ஆர்ப்பாட்டங்கள் செய்து வந்த புலம்பெயர் தமிழர்கள் எதிர்பார்க்கவில்லை. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் அந்தப் போரில் உயிரிழந்து விடுவார் என்பதும் அவர்களால் இன்றளவும் ஜீரணித்துக் கொள்ளமுடியாத விடயம். அந்த அதிர்ச்சியில் இருந்து அவர்கள் இப்போது தான் மெதுவாக தங்களை விடுவித்துக்கொள்ளப் பழகி வருகிறார்கள்.

புலம்பெயர் தமிழர்களைப் பொறுத்தவரையில், ஒரு வகையில், 'போர்க் குற்றங்கள்' என்ற பெயரில் இலங்கை அரசை குற்றம்சாட்ட வேண்டியது, மனசாட்சி பொறுத்த விடயம் மட்டுமல்ல அவர்களது உறவினர்களும் நண்பர்களும் உயிரிழந்தமை குறித்த விடயமும் கூட. அதேசமயம், முந்தைய தசாப்தங்களில் அரங்கேற்றப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இமாலயத் தவறுகளையும் அவர்களது 'போர்க் குற்றங்களையும்' தங்களோடு கொள்கை அளவில் ஒத்துப்போகாத அப்பாவித் தமிழர்களை ஆயிரக் கணக்கில் கொன்று குவித்த குற்றச்சாட்டுகளையும் நோக்கி சர்வதேச சமூகம் கவனம் செலுத்துவதை தடுத்து நிறுத்தும் ஒரு கருவி. இது போன்ற குற்றச்சாட்டுகளில் புலம்பெயர் தமிழ்த் தலைமையில் சிலராவது குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்படுவார்கள் என்றும் எதிர்பார்க்கலாம்.

புலம்பெயர்ந்த தமிழர்களில் ஒரு பகுதியினராவது இன்னமும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் 'தனி நாடு' கோரிக்கை சாத்தியமானதே என்று கருதுகிறார்கள். மிதவாத அரசியல் போக்கினால் அது சாத்தியமல்ல என்றாலும், தீவிரவாத தாக்குதல்களால் தங்களது இலக்கை அடைய முடியாது என்பதும் அவர்களது கருத்தாக இருப்பதாக எண்ணமுடிகிறது. இன்னும் சொல்லப் போனால், இது போன்ற காரணங்களினால் தான் சர்வதேச சமூகம் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரிக்க முடியாமல் போனது என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

அதாவது, அமெரிக்க 'இரட்டைக் கோபுரம்' தாக்குதலுக்குப் பின்னர், இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தீவிரவாதச் செயல்களைக் கண்டு கொள்ளாமல் இருந்த சர்வதேச சமூகம் பிந்தைய காலத்தில் தனது எண்ணவோட்டத்தையே மாற்றிக் கொண்டது. அதனை முழுமையாக உணர்ந்து செயல்படாதது, விடுதலைப் புலிகள் இயக்கத் தலைமையின் இமாலயத் தவறுகளின், எவரெஸ்ட் சிகரம் என்று கூறலாம். எனவே, இனப்போருக்கு புது வடிவம் கொடுக்க முடியவில்லை என்றாலும், மிதவாத அரசிய

லுக்கு 'போர்ச் சாயம்' பூசலாம் என்பது அவர்களது கணிப்பாக இருக்குமோ என்ற கேள்வி எழுகிறது.

அதேசமயம், தங்களது எதிர்காலத் திட்டங்களில் சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு அவசியம் என்பதையும் அவர்கள் உணர்ந்துள்ளதாகக் கருத முடிகிறது. மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போல் மேற்கு நாடுகளின் சீன-இலங்கை குறித்த கவலைகளோடு தங்களது 'தனி நாடு' கோரிக்கைகளுக்கு புது உருவம் கொடுத்துள்ளனர்.

## மறந்துபட்ட அதிகாரப் பரவல்

கடந்த ஆண்டு துவக்கம், ஜெனீவாவில் இலங்கை குறித்த விவாதங்களும் வாக்களிப்பும் துவங்கியது முதலே, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு, அதிகாரப் பரவல் உட்பட்ட அரசியல் தீர்வுகளை முழுவதுமாகவே மறந்து விட்டனர் என்றே சொல்ல வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தைகளில், தான் அதுவரை காட்டிவந்த மெத்தனப் போக்கே சர்வதேச சமூகத்தின் கவலைகளுக்கு காரணம் என்பதை அரசு தரப்பு இது வரை உணர்ந்ததாகத் தெரியவில்லை.



தங்கள் தலைவருக்கு எதிரான போர்க்குற்ற விசாரணை மன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து பங்களாதேஷ் ஜமாத் ஈ இஸ்லாமி கட்சிக்காரர்கள் தலைநகர் டாக்காவில் வன்முறையில் இறங்கியிருக்கிறார்கள்

ஆனால், அரசின் இத்தகைய போக்கிற்கு, 'சிங்களப் பேரினவாதம்' மட்டுமே காரணம் அல்ல என்பதை தமிழ்ச் சமூக-அரசியல் தலைமைகள் ஏனோ ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. அரசியல் தீர்வு விடயத்தில், அரசுடன் கூடி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்கும் முடிவுகளுக்கு புலம்பெயர் தமிழர்கள் ஆதரவு கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை எழும் விதமாக தமிழர் தரப்பில் யாரும் இதுவரை காரியமாற்றவில்லை என்பதே உண்மை. மாறாக, 2010-ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் தொடங்கி, ஜனாதிபதி ராஜபக்ஷவின் ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழக பேச்சு நடைபெறாமல் தடுத்தது என்பன போன்ற பல்வேறு நிகழ்வுகளின் மூலம் புலம்பெயர் தமிழருக்கும் கூட்டமைப்பிற்கும் இடையேயான உறவில் முடிவு எடுப்பது யார் என்பது எதார்த்தமாகத் தெரிந்தது.

அதாவது, தனது செயல்பாடுகளில், கூட்டமைப்பு, புலம்பெயர் தமிழர்களின் கருத்துகளை ஒட்டியே முடிவு எடுக்கும். ஆனால், கூட்டமைப்பின் அரசியல் முன்னெடுப்புகளுக்கு புலம்பெயர் தமிழ்க் குழுக்கள் அச்சாரம் கொடுக்காது. அந்த விதத்தில், கூட்டமைப்புடன் அரசு எந்தத் தீர்வை எட்டியிருந்தாலும், அதனை புலம்பெயர் குழுக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. மாறாக, கூட்டமைப்பு அரசிடம் ஏற்றுக் கொண்ட அரசியல் தீர்வின் ஷரத்துகளை தங்களது கோரிக்கைகளின் அடிப்படையாக வைத்து, புலம்பெயர் குழுக்கள் காய் நகர்த்தத் துவங்கும் என்று அரசு கருதியதாக எண்ணுவதற்கு இடம் இருக்கிறது.

இந்தப் பின்னணியில், அரசியல் தீர்வு குறித்து கூட்டமைப்பின் செயல் முறையை அரசு சந்தேகிக்கவில்லை என்றாலும், புலம்பெயர் குழுக்கள் உள்ளிட்ட தமிழ்ச் சமூகத்தின் மீது அதற்குண்டான பிடிப்பை அரசு சந்தேகிக்கத் தொடங்கியது என்றே கருத வேண்டும். அந்த விதத்தில், கூட்டமைப்புடன் எத்தகைய அரசில் தீர்வை எட்டினாலும், அது புலம்பெயர் குழுக்களின் அடுத்த கட்ட நடைமுறைகளுக்கு அச்சாரம் போடுவதாக ஆகிவிடும் என்ற எண்ணம் அரசிற்கு தோன்றியிருந்தால், இன்றும் அது கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயம். அந்த விதத்தில், 'தனி நாடு' கோரிக்கையும், 'தமிழ்த் தீவிரவாதமும்' அரசின் கண்களின் முன்னால் இன்னமும் நிழலாடி வருகிறது என்பதே உண்மை.

இதனால் எல்லாம் அரசின் நடவடிக்கைகளும் போர்க் குற்றங்கள் குறித்த அதன் நிலைப்பாடும் செயல்பாடும் பரிசுத்தமாகி விடாது. அது போன்றே, அரசினை குறித்து தமிழ்த் தரப்பு தொடர்ந்து கூறி வரும் குற்றச்சாட்டுகளால், அவர்கள் தரப்பிலான தவறுகளை மூடி மறைத்து விடமுடியாது. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பதில் எந்த ஒரு கருத்து வேறுபாடும் இருக்க முடியாது. ஆனால், அதுவே 'தனி நாடு' கோரிக்கைக்கு முதல் படி என்ற அரசின் எண்ணத்திற்கும், சிங்களப் பேரினவாத உணர்வுகளுக்கும் சரியான மறுப்பு தமிழ்த் தலைமையிடம் இருந்து கிளம்பினால் மட்டுமே, அரசியல் தீர்வுக்கான சாத்தியக் கூறுகள் உருவாகும்.

இதற்கு மாறாக, இலங்கை அரசினை மட்டுமே குறைகூறி தமிழ்த் தலைமை அரசியல் செய்தால் அதனால் தமிழ்ச் சமூகத்திற்கு எந்தப் பயனும் கிடைத்து விடாது. அரசை இல்லை என்றால், இந்திய அரசை குறைகூறும் போக்கும் இவ்வாறான பயனற்ற பேச்சாகவே அமைந்து

விடும். இது போன்றே, இன்று சர்வ தேச சமூகத்தை தோளில் சுமப்போர், எதிர்வரும் மாதங்களிலும் ஆண்டுகளிலும் அவர்களைக் குறை கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கு புதிதாக ஒன்றும் இல்லை. இவ்வாறான சூழலை எதிர்நோக்கித் தானோ என்னவோ, இலங்கை அரசும் அரசியல் தீர்வு விடயத்தில் வாளாவிருக்கிறது.

### இன்னும் ஒரு வாக்களிப்பு

எது எப்படியோ, கடந்த இரண்டு ஆண்டுகளாக அரசியல் தீர்வு குறித்து அரசிற்கும் கூட்டமைப்பிற்கும் இடையேயான பேச்சுவார்த்தை இல்லாமலே போய்விட்டது வருத்தப்பட வேண்டிய விடயம். 'என்ன பேசினாலும், சர்வதேச சமூகத்தை அண்டித் தானே அரசியல் செய்யப் போகிறீர்கள்... அவர்களிடமே பேசிக் கொள்ளுங்கள்' என்ற விதத்தில் அரசு தரப்பு, கூட்டமைப்பை உதாசீனப்படுத்துவதாகவே கருத வேண்டியுள்ளது. இதன் காரணமாகவே, கடந்த இரண்டு ஆண்டுகளில், கூட்டமைப்பிற்கும் உள்நாட்டு அரசியலில் குறிப்பிட்ட வகையில் எந்தவித பங்களிப்பும் செய்ய முடியாமல் போய்விட்டது என்று முடிவு செய்ய வேண்டியுள்ளது.

ஏதாவது ஒரு காரணத்திற்காக, அரசு எப்போதாவது மனம் மாறி, பேச்சுவார்த்தை நடத்த முன் வந்தால், அன்று கூட்டமைப்பின் நிலைப்பாடு மட்டுமல்ல, அதன் நிலையே எப்படி இருக்கும் என்பது குறித்து கருத்துக் கூற முடியாத நிலை உள்ளது. அண்மையில் கூட, கூட்டமைப்பை தனி அரசியல் கட்சியாகப் பதிவு செய்து, அடிப்படைக் கட்டமைப்பு துவங்கி, கட்சியின் அனைத்து நிலைகளிலும் புதிய தலைமை உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் முன்வைக்கப் பட்டுள்ளது.

அதாவது, வெளியில் செய்யப்பட வேண்டிய பணிகள் இல்லை என்றால், உள்ளுக்குள் பிரச்சினையைக் கிளப்பி அரசியல் செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாகும் என்ற அரசியல் விதிமுறைப்படி கூட்டமைப்பு செயல்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அல்லது, ஏற்படுத்தப் பட்டுள்ளது. இனப்போர் முடிவிற்கு வந்த காலகட்டத்திலும், அரசுடனான பேச்சுவார்த்தைகள் துவங்குவது வரையிலும் கூட, கூட்டமைப்பு இது போன்ற நிலைமையைச் சந்தித்தது. இது போன்ற அரசியல் சூழ்நிலைகளில் இது தவிர்க்க முடியாததும் கூட. என்றாலும், வருங்காலத்தில் அரசுடனான பேச்சுவார்த்தை மீண்டும் துவங்குமேயானால், அன்று கூட்டமைப்பு கூட்டாக இருந்து செயல்படுமா என்பதே கேள்விக்குறியாகி வருகிறது. இதனால் தமிழ் மக்களுக்குத் தான் மேலும் பின்னடைவு ஏற்படும்.

### 'போர்க் குற்றமும்' விசாரணையும்

ஜெனீவாவில் மக்கள் உரிமை மன்றத்தில் அமெரிக்கா முன்மொழிவதாக உள்ள இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா இந்த முறையும் ஆதரித்து வாக்களிக்க வேண்டும் என்று இந்தியப் பாராளுமன்றத்தின் மேலவையில் அனைத்துக் கட்சிகளும் ஒருமித்து குரல் எழுப்பி உள்ளன. இது இலங்கைத் தமிழ் மக்களுக்கு மனநிறைவைத் தரும் விடயமாகும். அதேசமயம், இது குறித்த விவாதங்களில் பங்கெடுத்த தமிழ் நாட்டைச் சேர்ந்த அரசியல் கட்சிகள் இதனை தங்களிடையேயான அரசியல் சித்து விளையாட்டிற்கான பகடைக்காயாகப் பயன்படுத்தினர் என்பது வேதனைக்குரிய விடயம்.

அதற்கும் அப்பால் சென்று, அமெரிக்காவின் தீர்மானம் வாக்கெடுப்பு நிலையைச் சென்றடையுமா என்பதே கேள்விக்குறியாக இருக்கிறது. கடந்த ஆண்டு, அமெரிக்கா இது போன்ற தீர்மானத்தை முதன்முறையாக முன்வைத்தபோது, இலங்கை அரசு அதனை தீவிரமாக எதிர்த்து உலகளவில் ஆதரவு திரட்டியது. ஆனால், பிரச்சினையின் தாக்கத்தாலும், அமெரிக்காவின் பராக்கிரமத்தாலும், முக்கியமாக இந்தியாவின் ஆதரவாலும் அந்தத் தீர்மானம் வெற்றி பெற்றது. இலங்கை அரசு தோல்வியைத் தழுவியது.

இந்த வருடத்திய நிலைமை வேறு. கடந்த வருடம் இலங்கையை வெளிப்படையாக ஆதரித்த சீனா மற்றும் ரஷ்யா ஆகிய இரண்டு முக்கிய நாடுகள் இந்த முறை வாக்களிக்கும் உறுப்பினர்கள் அல்ல. மாறியுள்ள சூழ்நிலையில், இந்தியாவின் ஆதரவு இல்லாமலே அமெரிக்காவின் தீர்மானம் அதிக வாக்குகளில் வெற்றி பெறும் வாய்ப்பு இப்போதே உள்ளது. அதை விட முக்கியமாக அமெரிக்காவின் தற்போதைய தீர்மானம், இலங்கை அரசு அமைத்த நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிவுரைகளைச் செயல்படுத்துவது குறித்த கணக்கெடுப்பு மட்டுமே. அது குறித்த ஏற்றத் தாழ்வுகளை இரண்டு நாடுகளும் எதிரும் புதிருமாக இருந்து பேசித் தீர்த்துக் கொண்டால் அந்த தீர்மானத்தின் மீது வாக்களிப்பு நடத்த

> **போர்க் குற்றங்கள் என்ற பெயரில் இலங்கையில் அரசியல் தீர்வு பின் தள்ளப்பட்டு விட்டது. போர்க்குற்றங்கள் சர்வதேச அரசியலில் பகடைக்காயாகிவிட்டது. இதனால் ஏற்படும் நன்மைகள் பிற நாடுகளைச் சென்றடையலாம். தீமைகள் மட்டுமே இலங்கையில் தங்கி போரின் தாக்கத்திலிருந்து மெதுவாக தங்களை விடுவிக்க முயற்சி செய்யும். அப்பாவித் தமிழ் மக்களின் வாழ்க்கையை மீண்டும் மீண்டும் அவலத்திற்குள்ளாக்கும்**

வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விடும்.

ஆனால், போர்க் குற்றங்கள் குறித்த விசாரணைப் பிரச்சினை தீவிரம டைந்தால், இலங்கைத் தமிழ்ச் சமூகம் தென்னாபிரிக்கா போன்ற தூர தேச நாடுகளின் முன்மாதிரிகளை நோக்கி காய் நகர்த்த வேண்டாம். மற்றொரு தெற்காசிய நாடான வங்காள தேசத்தில் கடந்த 1971-ஆம் ஆண்டு நடைபெற்ற சுதந்திரப் போராட்டம் தொடர்பான போர்க் குற்றங்கள் குறித்த விசாரணை நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக கடந்து, தற்போது தான் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. காரணம், மனப்புண்ணுக்கு மருந்திடும் வேலை போர் முடிந்த அடுத்த நாளே துவங்கப்பட்டிருந்தால் அதனால் எந்த ஒரு பிரச்சினையும் தீர்க்கப்பட்டிருக்காது. அவற்றின் தீவிரம் கூடியிருக்கும்.

'வங்க தேசத்தின் தந்தை' என்று அறியப்படும் ஷேக் முஜீபூர் ரஹ்மான் நாடு சுதந்திரம் அடைந்து அதன் முதல் பிரதமராக பதவியேற்ற காலம் தொட்டே, 'போர்க் குற்றங்களுக்கான' விசாரணை முடுக்கி விடப்பட்டது. சுதந்திரப் போர்க் காலத்தில், பாகிஸ்தான் இராணுவத்தோடு கை கோர்த்துச் செயல்பட்டதாக 37,000க்கும் அதிகமான வங்க தேசத்தவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு, தனி நீதிமன்றத்தின் முன் விசாரணையும் தொடங்கியது. சுமார் பத்து இலட்சம் அப்பாவி மக்களைக் கொன்று குவித்தது மற்றும் ஐந்து இலட்சம் பெண்களை மானபங்கப்படுத்தியது உட்பட்ட குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டன.

ஆனால், நடந்தது என்ன? விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்ட சில மாதங்களிலேயே, முஜீபூர் அரசு அந்த நடவடிக்கையை நிறுத்திக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் தோன்றியது. போர் முடிந்து இணக்கச் சூழ்நிலை நிலவ வேண்டிய காலத்தில், இந்த விசாரணை மக்களிடையே புதிய பிரிவுகளை ஏற்படுத்துவதாக அரசு கருதியதே இதற்கு காரணம். மேலும், போராட்ட காலத்தில் பாகிஸ்தானின் ஆட்சி அதிகாரத்தின் கீழ் வங்காள தேசம் இன்னமும் இருந்தால், அன்றைய இராணுவத்தினர், சட்டப்படியான அரசின் உத்தரவிற்கு கீழ்ப்படிந்து செயல்பட்டதான வாதமும் முன் வைக்கப்பட்டது.


இதன் காரணமாக, அன்றைய அரசு, குற்றம் சாட்டப்பட்டவர்களில் 22,000 பேர் மீதான வழக்கை உடனடியாக பின்வாங்கியது. முஜீபுர் கொலை செய்யப்பட்டு, அடுத்து வந்த இராணுவ ஆட்சி, மீதியுள்ள வழக்குகளையும் பின்வாங்கியது. இதன் காரணமாக அன்று முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் நீர்த்து போய்விட்டாலும், உக்கிரமான போர் முடிவிற்கு வந்த பின்னர், அந்த நாடு, விசாரணை என்ற பெயரில் புதிய பிரிவினைகளுக்குத் தயாராக வில்லை என்பதே உண்மை. குறிப்பாக, பாகிஸ்தானிடம் இருந்து பிரிந்து வந்த வங்காள தேச இராணுவத்தில் குறிப்பிட்ட சிலர் மீது நடவடிக்கை எடுத்தால், அதன் விளைவுகள் விபரீதமாக அமையும் என்ற கவலையும் இருந்தது.

ஆனால், இன்று பதவியில் இருக்கும் முஜீபுர் ரஹ்மானின் மகளான பிரதமர் ஹசீனா தலைமையிலான அரசு அந்த வழக்குகளில் பலவற்றையும் தூசி தட்டி எடுத்து, தனக்கு எதிராக அரசியல் செய்யும் ஜமாத் இஸ்லாமி என்ற கட்சித் தலைமைக்கு எதிராக வழக்குகளைப் பதிவு செய்து தனி நீதிமன்ற விசாரணையும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அவர்களில் ஒரு சிலருக்கு எதிராக தீர்ப்பும் சொல்லப்பட்டு தண்டனையும் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், அந்த தீர்ப்புகளுக்கு ஆதரவாகவும் எதிராகவும் நாடு தழுவிய போராட்டங்களும் தற்போது அரங்கேறி வருகின்றன. அதுவே அந்த நாட்டில் இந்த ஆண்டின் இறுதியில் நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் முக்கிய பிரச்சினையாகவும் உருவெடுத்து வருகிறது.

வங்க தேசத்தில், போர் முடிந்து நாற்பது ஆண்டுகளுக்குப் பின்னரும் 'போர்க் குற்றங்கள்' குறித்த விசாரணை நடைபெறுவது வரவேற்கத்தக்கது. இது, அந்த நாடு, தவறுகளை என்றென்றும் மன்னித்துவிடுவதில்லை என்ற பயத்தையும் மரியாதையையும் 'போர்க் குற்றம்' செய்தவர்களிடையே ஏற்படுத்தும். இது இலங்கை உட்பட்ட பிற நாடுகளிலும் படிப்பினையாக அமையும்.

அதேசமயம், சமகால அரசியலை முன்வைத்து நடைபெறும் தற்போதைய அந்த விசாரணை ஒருதலைப் பட்சமாக அமைந்துவிடும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தி உள்ளது. இதுவே அரசின் நல்ல முயற்சியை கொச்சைப்படுத்தி விட்டது. மேலும், இதன் காரணமாக தற்போது மிஞ்சப் போவது எல்லாம், போராட்டங்களும் குழப்பங்களும் தான். தேர்தல் முடிவில் இந்த அரசு போய் தற்போது எதிர்க்கட்சியாக இருக்கும் முன்னாள் பிரதமர், பேகம் காலிதா ஸியா தலைமையிலான கூட்டணி ஆட்சிக்கு வந்தால், தற்போதைய விசாரணை ஒன்றும் இல்லாமல் ஆக்கப்படும். இதனால் மிஞ்சுவது, குழப்பமும் வன்முறையும் மட்டுமே.

இலங்கையின் இன்றைய நிலையும் அது தான். 'போர்க் குற்றங்கள்' என்ற பெயரில் அரசியல் தீர்வு பின்தள்ளப்பட்டு விட்டது. அதேசமயம், 'போர்க் குற்றங்கள்' குறித்த விசாரணை எதுவும் துரிதப்படுத்தப்படவில்லை. அவ்வாறு விசாரணை நடைபெற்றாலும், அது ஏற்புடையதா, என்பதும் விவாதத்திற்குரியதே. ஆனால், வங்காள தேசத்தைப் போல் இல்லாமல், இலங்கையில் 'போர்க் குற்றங்கள்' சர்வதேச அரசியலில் பகடைக்காயாகி விட்டது. இதனால் ஏற்படும் 'நன்மைகள்' பிற நாடுகளைச் சென்றடையலாம். 'தீமைகள்' மட்டுமே இலங்கை நாட்டில் தங்கி, போரின் தாக்கத்தில் இருந்து மெதுவாக தங்களை விடுபட முயற்சி செய்யும் அப்பாவித் தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கையை மீண்டும் மீண் டும் இல்லாதாக்கி, எங்கேயோ இரு ந்து கொண்டு எள்ளி நகைக்கும். ■



# உருப்படியான எதிர்க்கட்சிகள் கூட்டணி அமைவதற்கு வழி என்ன?

குசல் பெரேரா

**ராஜபக்ஷ ஆட்சியை தூக்கியெறியப்போவதாக எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பியக்க அரசியல்வாதிகள் கூறுவதை நாட்டு மக்கள் அக்கறையுடன் கேட்பார்களா? ஒரே மாதிரியான அறிக்கைகளை எவ்வளவு காலத்திற்குத்தான் மக்களால் கேட்டுக்கொண்டிருக்க முடியும்**

உள்நாட்டு அரசியல்



ஆட்சியை மாற்றுவதே எமது குறிக்கோள். எனவே எம்முடன் கைகோர்க்குமாறு சகலருக்கும் அழைப்பு விடுக்கிறோம்.- கடந்த மாத ஆரம்பத்தில் 'எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பியக்கம்' (விபக்ஷயே விரோதய) என்ற புதிய அணியை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு பிரகடனம் செய்திருந்தார்.

இந்த அணியில் செல்வாக்கில்லாத அரசியல்வாதிகளே பெருமளவில் காணப்பட்டனர். முன்னர் அவர்கள் கூறிய கருத்துகளையே மீண்டும் கூறுகிறார்கள். ஒரேமாதிரியான கருத்துகளையும் அறிக்கைகளையும் எவ்வளவு காலத்திற்குத்தான் மக்களால் கேட்டுக்கொண்டிருக்க முடியும்? ராஜபக்ஷ ஆட்சியை தூக்கியெறியப் போவதாக இந்த அரசியல்வாதிகள் கூறுகின்ற போது மக்கள் அதை அக்கறையுடன் கேட்பார்களா?

ராஜபக்ஷ ஆட்சியை கவிழ்க்கப் போவதாக ரணில் விக்கிரமசிங்க கூறுவது இது முதல் தடவையல்ல. இதற்கு சில தினங்கள் முன்னதாக மாத்தறையில் கூட்டமொன்றில் பேசிய அவர் 2014 ஆம் ஆண்டளவில் ராஜபக்ஷ ஆட்சியை கவிழ்க்கப்போவதாக சூளுரைத்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அப்போது அரசாங்கம் பயந்துவிட்டதாகக் கூட அவர், மக்கள் முன்னிலையில் கூறினார். சில வருடங்களுக்கு முன்னர் 'சுதந்திரத்திற்கான மேடை' என்ற அமைப்பில் வந்து இணையுமாறு சகல ஜனநாயகசக்திகளுக்கும் அழைப்பு விடுத்து மாற்றத்திற்கான

உறுதிப்பாடு என்ற தலைப்பில் ஐந்து கோட்பாடுகளை உள்ளடக்கிய வேலைத்திட்டம் ஒன்றையும் விக்கிரமசிங்க அறிவித்தார். 2009 நவம்பரில் கொழும்பு ஜெயவர்தன நிலையத்தில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் ராஜபக்ஷ ஆட்சியைக் கவிழ்த்து இந்த நாட்டை மீளக் கட்டியெழுப்பப் போவதாகவும் அவர் வாக்குறுதி அளித்தார். அப்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உத்தியோகபூர்வமாக அந்த அணியில் உள்ளடக்கப் படவில்லை.

2010 ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் உட்பட பல தேர்தல்கள் நடைபெற்று முடிந்து சுமார் 3 வருட காலம் கடந்துவிட்டது. இந்த சுதந்திரத்திற்கான மேடையில் தனியொருவரைக் கொண்ட புதிய நவ ஜாதிகஹெல உறுமயவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் கலந்துகொண்டன. ஆனால் பிரதம நீதியரசர் திருமதி ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிரான குற்றப்பிரேரணையின் போது இந்த அணி முற்று முழுதாக உறங்கு நிலையில் இருந்தது. குற்றப்பிரேரணை காலகட்டத்தில் இருந்த தலைவர்கள் எல்லோரும் எங்கே இருந்தார்கள் என்பதை பொலிஸாரின் மோப்பநாய்கள் கூட கண்டுபிடித்திருக்க முடியாது என்று கொழும்பு புதுக்கடையில் ஒருவர் சொன்னார்.

சுதந்திரத்திற்கான மேடை என்ற அந்த அணி ஜனநாயக விவகாரங்களைப் பற்றி பேசுவதற்கு அதற்கு இருக்கக்கூடிய நம்பகத்தன்மையை இழந்துபோய்விட்ட நிலையில், எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பியக்கம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. இதில் மேலும் புதிய பெயர்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.


தமிழ் மக்களின் சார்பில் தெல்லிப்பழையில் நடத்தப்பட்ட முதலாவது சத்தியாக்கிரகப் போராட்டமே இந்த எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பியக்கத்தை மற்றவர்கள் திரும்பிப்பார்க்க வைத்தது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் புதியதொரு அணுகுமுறையைக் கடைப்பிடிக்க விக்கிரமசிங்க முயற்சிக்கிறார். அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் தமிழ் மக்களிடம் வடக்கில் அபகரிக்கப்பட்ட நிலங்களை அவர்களிடம் திருப்பிக் கொடுக்காமல் இருக்கும் அரசாங்கத்தைக் கண்டித்து கொழும்பில் இருந்து 305 கிலோமீற்றர் தொலைவில் தெல்லிப்பழையில் விக்கிரமசிங்க பேசிய போது அவரது ஐக்கியதேசியக் கட்சியின் கீழான ஜாதிக சேவக சங்கமயவின் சிங்களத்தலைவர்கள் புதிதாக தோன்றியிருக்கும் வன்முறையுடன் கூடிய இனவெறி இயக்கமான பொதுபலசேனாவிற்கு தங்களது தொழிற்சங்கத்தின் கிளைகளுக்குள் ஆதரவுக் குழுக்களை அமைப்பது குறித்து யோசனை முன்வைத்திருக்கிறார்கள். விக்கிரமசிங்கவிற்கும் அவரது கட்சியின் விசுவாசிகளுக்கும் இடையே இருக்கக் கூடிய முற்றுமுழுதான தொடர்பின்மையை இது அம்பலப்படுத்துகிறது. இந்தத் தொடர்பின்மையை இல்லாமல் செய்வதற்கு அரசியல் ரீதியில் ஒருபோதுமே முயற்சி மேற் கொள்ளப்பட்டதேயில்லை.

தற்போது அரசாங்கத்திற்கு எதிராக முக்கியமான பிரச்சினைகளில் போராட்டங்களை நடத்துவதற்கு தனது கட்சியுடன் இணைந்த அமைப்புகளை அணிதிரட்ட முடியாதவராக எதிர்க்கட்சித் தலைவர் இருக்கிறார். ஜாதிக சேவக சங்கமய இப்பொழுது எந்தவொரு தொழிற்சங்க செயற்பாடுகளுக்கும் அப்பாலேயே இருக்கிறது. வேலைத்தளங்களில் தலைமைத்துவத்தை உருவாக்குவதற்கு அந்த தொழிற்சங்கம் ஒருபோதும் அனுமதிக்கப்பட்டதில்லை. எனவே எந்தவொரு பிரச்சினையிலும் ஜாதிக சேவக சங்கமய அதன் சொந்த உறுப்பினர்களைக் கூட அணிதிரட்டி போராட்டங்களை முன்னெடுக்க முயற்சிக்கவில்லை. கூரையைப் பிரித்துக்கொண்டு வானளாவ உயரம் வாழ்க்கைச்செலவு பிரச்சினையாக இருந்தாலென்ன சம்பள உயர்வுக் கோரிக்கையாக இருந்தால் என்ன இந்தச் சங்கம் குரலெழுப்புவதாக இல்லை. அதன் உறுப்பினர்கள் வெறுமனே கட்சி அனுதாபிகளாக இருக்கிறார்கள். சிறில் மத்தியூவின் காலத்தில் ஜாதிக ஹெலஉறுமய சிங்களக் குண்டர் அமைப்பாக அணிதிரட்டப்பட்டிருந்தது. இப்போதும் அவ்வாறு தான் தொடர்கிறது. ஆனால் விஷம் இல்லை.


ஐ.தே.க.வின் கீழான பெண்கள் அமைப்பான லக்வனிதா வடக்கிலும் தெற்கிலும் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு, பாலியல் வன்கொடுமைக்குள்ளாக்கப்பட்ட பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் பாய்களையும் தலையணைகளையும் வழங்குவதற்கு விருப்பப்படுகின்ற தலைமைத்துவத்தைக் கொண்டதாக இருக்கிறது. தினமும் இலங்கையில் 5 பாலியல் வன்கொடுமைச் சம்பவங்கள் இடம் பெறுவதாக ஒரு முன்னணி ஞாயிறு செய்திப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. ஐ.தே.க.விற்குள் இருக்கக்கூடிய இந்தப் பெண்களின் தலைமைத்துவம் ஆடை தயாரிப்புத் தொழில்துறையில் உள்ள பெருவாரியான இளம் பெண்களின் பிரச்சினைகள் பற்றியோ றிசானா நபீக்குகள் பற்றியோ அக்கறையற்றதாக இருக்கிறது. ராஜபக்ஷ ஆட்சியினால் வழங்கப்படுகின்ற வரப்பிரசாதங்களை அனுபவிக்கும் கணவன்மாருடன் வாழுகின்ற மனைவியர் ஐ.தே.க.வின் இந்தப் பெண் தலைமைத்துவத்திற்குள் இருக்கிறார்கள்.

இத்தகைய பின்புலத்திலே எத்தகைய உருப்படியான செயல்திட்டமும் தெளிவான அரசியல் இலக்கும் இல்லாத புதிய அணியினால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை. வெறுமனே கோஷங்கள் மாத்திரமே ஒலிக்கும். ஐ.தே.க.வையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் தவிர எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பியக்கத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுக்கோ குழுக்களுக்கோ மக்கள் செல்வாக்கு என்பது அறவேயில்லை. அரசியல் ரீதியில் நோக்குகையில் முன்னைய கூட்டணிகளையும், செயற்திட்டங்களையும் விட பெருமளவிற்கு வித்தியாசமானதாக இந்தப் புதிய அணி இல்லை.

*(51ஆம் பக்கம் பார்க்க)*



றிச்சர்ட் கோஹென்



'லோரன்ஸ் ஒஃப் அரேபியா' திரைப்படத்தில் அராபியர்களை ஐக்கியப்படுத்துவதற்கான முயற்சி டமாஸ்கஸிலேயே சீர்குலைந்து போகிறது. சபையில் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக தனது துப்பாக்கியின் அடிப்பாகத்தினால் மேசையில் பலமாகத் தட்டுவான் லோரன்ஸ். ஆனால், பயனேதுமில்லை. குழப்பம் மூளுகிறது. இப்போது அதேபோன்று சிரியாவில் நடந்துகொண்டிருக்கிறது. உள்நாட்டுப் போரில் இதுவரை 70 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுவிட்டார்கள். சிரியநெருக்கடி பிராந்திய இரத்தக்களரியாக மாறிக் கொண்டிருக்கிறது. இந்த நிலைவரங்கள் எல்லாம் மீண்டும் விவகாரங்கள் சீர்குலைவதையே உணர்த்துகின்றன. திரைப்படத்தை போன்று நிஜவாழ்வு அமைவதில்லை. என்றாலும், திரைப் படத்தில் லோரன்ஸ் எதையோ செய்ய முயற்சியையாவது எடுத்ததைக் கண்டோம். ஆனால், நிஜவாழ்வில் பராக் ஒபாமா எதையுமே செய்யாமல் பார்த்துக் கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

உண்மையில் அவர் தனது தேர்தல் வாக்கு இலக்கங்கள் மீது ஏறி அமர்ந்திருக்கிறார். சிரிய உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு உருப்படியாக எதையும் செய்வதற்கு ஜனாதிபதி காட்டுகின்ற மறுப்பின் அடிப்படை இரு அம்சங்களைக் கொண்டிருப்பதாக நீண்ட காலமாகச் சந்தேகிக்கப்பட்ட ஒரு கொள்கை யாகும். நினையாப் பிரகாரம் ஏற்ப

**வெள்ளைமாளிகை கொள்கை வகுப்பாளர்களின் இலக்கு தந்திரோபாய ரீதியான முக்கிய தீர்மானங்களை எடுப்பதல்ல. பொது மக்களின் எண்ணத்தை திருப்திப்படுத்துவதாகவே இருந்தது. அதற்கு சிரியாவும் விதிவிலக்கானதாக இருக்கவில்லை. சிரியாவில் உள்ள நிலைவரம் அமெரிக்காவிடமிருந்து துணிச்சலையே வேண்டி நிற்கிறது. அமெரிக்க வெளியுறவுக் கொள்கை முற்று முழுவதுமாக உள்நாட்டு அரசியல் அக்கறைகளுக்கு அடிவருடியாக மாறிவிட்டது**



சர்வதேச அரசியல்

# ஒன்றுமே செய்வதில்லை என்பது ஒரு கொள்கையாகும் போது.....

டக்கூடிய பின்விளைவுகள் பற்றிய பீதியும் இரவுச் செய்திகள் (Nightly News) பற்றிய பீதியுமே அவ்விரு அம்சங்களாகும்.

இப்போது ஒரு புத்தகம் வெளிவர விருக்கிறது. அதை எழுதியவர் ஒபாமா நிருவாகத்திற்குள் பணியாற்றிய ஒருவர். ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் தொடர்பிலான வெள்ளைமாளிகையின் அணுகுமுறையில் உள்நாட்டு அரசியல் அக்கறைகள் வகித்த பாத்திரத்தை திறந்த மனதுடன் நம்பகமான முறையில் அவர் விளக்கிக் கூறியிருக்கிறார். கொள்கை வகுப்பாளர்களின் இலக்கு தந்திரோபாய ரீதியான முக்கிய தீர்மானங்களை எடுப்பதல்ல, பொதுமக்களின் எண்ணத்தை திருப்திப்படுத்துவதாகவே இருந்தது. சிரியாவும் இதற்கு விதிவிலக்கானதாக இருக்கவில்லை என்றே தோன்றுகிறது.

ஒபாமா நிருவாகத்தில் முன்னர் பணியாற்றிய வாலி நாசர் மிகவும் பிரகாசமான அறிவாளி. சர்வதேச கற்கைகளுக்கான ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பாடசாலை முதல்வராகவும் புரூக்கிங்ஸ் நிறுவனத்தில் ஒரு சிரேஷ்ட ஆய்வாளராகவும் அவர் இருக்கிறார். அத்துடன் வெளியுறவுகள் கவுன்சிலின் ஆயுட்கால உறுப்பினர். அதற்கும் மேலாக, ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானுக்கான ஜனாதிபதி பராக் ஒபாமாவின் விசேட பிரதிநிதியாக இருந்த காலஞ்சென்ற ரிச்சர்ட் கோல்புரூக்கின் முன்னாள் சிரேஷ்ட ஆலோசகராக விளங்கியவரே இந்த வாலி நாசர்.

ஹோல்புரூக் தினமும் ஒவ்வொரு திட்டத்தையும் யோசனையையும் முன்வைப்பார். ஆனால், அதனால் எந்தப்பயனும் ஏற்படுவதில்லை. அவரின் யோசனைகளை வெள்ளை மாளிகையில் உள்ளவர்கள் பெரிதாகக் கருதியதில்லை என்று சிரேஷ்ட ஆலோசகர் என்ற வகையில் தனக்குக் கிடைத்த அனுபவத்தை வாலி நாசர் கூறியிருக்கிறார்.


அவரைப் பொறுத்தவரை வெள்ளைமாளிகை கிட்டத்தட்ட ஒரு உயர் பாடசாலையில் உள்ள உணவகம் போன்றதாகவே இருந்தது. அங்கே ஹோல்புரூக் வெறுத்தொதுக்கப்பட்டார். அவரது யோசனைகளுக்கு பதில்கள் கிடைப்பதில்லை. மௌனமே சாதிக்கப்படும். ஒப்பீட்டளவில் அனுபவம் குறைந்த வெள்ளைமாளிகை ஆலோசகர்கள் குழு ஒன்றையே வாலி நாசர் குற்றஞ்சாட்டுகிறார். இந்தக் குழு முற்றுமுழுதாக அரசியலில் தான் அக்கறை காட்டியது. விவேகிகளான ஆண்கள் அல்ல, மட்டரகமான பெண்களே அமெரிக்கக் கொள்கையைத் தீர்மானித்தார்கள்.

நாசர் தனது கருத்துகளை 'The Dispensable Nation' (இன்றியமையத்தக்க தேசம்) என்ற நூலில் வெளியிட்டிருக்கிறார். இந்த நூல் எதிர் வரும் ஏப்ரிலில் தான் வெளியிடப் படவிருக்கிறது. ஆனால், இரகசியப் பிரதிகள் ஏற்கனவே விநியோகிக்கப் பட்டிருக்கின்றன. ஒட்டுமொத்தத்தில் இந்த நூல் ஒபாமா ஒரு வெளியுறவுக் கொள்கை இல்லாத மனிதர் என்ற பொதுவான எண்ணத்தையே கொடுக்கிறது. ஒபாமா சூதுவாதற்ற அபிலாசைகளைக் கொண்டிருந்தார். அதாவது நல்லதொரு உரையின் வல்லமையினால் உலகை மாற்றியமைத்தல் போன்ற அபிலாசை ஒரு உதாரணம். ஆனால், எதையும் சாதிப்பதற்கு தெளிவான பாதை அவரிடம் இருந்ததில்லை.

ஆப்கானிஸ்தானுக்கு மேலதிக அமெரிக்கப்படைகளை அனுப்புவதற்கான தீர்மானம் அங்கிருந்து படைகளை வாபஸ் பெறுவது தொடர்பான தீர்மானத்துடன் சமாந்தரமாக அறிவிக்கப்பட்டது என்று கூறி வாலி நாசர் தனது அதிருப்தியை வெளிக் காட்டுகிறார்.

ஒபாமாவின் முரண்பாடான கொள்கையை நடைமுறைப்படுத்தும் பொறுப்பை புதிதாக ஏற்றிருக்கும் ஜோன் கெரி முன்னர் ஒரு தடவை தனது சொந்த யுத்தத்தைப் பற்றி கிளப்பிய கேள்வியை நினைத்துப் பார்க்க வேண்டியவராக இருக்கிறார். வியட்நாமில் இறக்கும் கடைசி மனிதராக இருக்க வேண்டுமென்று ஒருவரை எவ்வாறு நீங்கள் கேட்பீர்கள்? இதுவே அந்தக் கேள்வி.

பிராந்தியங்களைப் பொறுத்தவரை நாசர் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் விவகாரங்களிலேயே விசேட நிபுணத்துவம் கொண்டவர். ஆனால், அவர் நூலில் எழுதியிருக்கிற விடயங்கள் உள்நாட்டு அரசியல் அக்கறைகளின் விளைவாக ஒபாமா சிரியாவில் தலையீடு செய்வதில் இருந்து விலகியிருந்தார் என்ற கருத்துக்கு வலுச்சேர்ப்பவையாக இருக்கின்றன. ஈராக்கில் இருந்து வெளியேறியது பற்றியும் விரைவில் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறப் போவது பற்றியும் பேசுகிற ஒரு சமாதான வேட்பாளராகப் பிரசாரம் செய்த ஒரு ஜனாதிபதி சிரியாவில் எதையும் துணிச்சலாகச் செய்வதற்கு முன்வரமாட்டார். நாடு தவறுகளின் ஓரத்திற்குள் விழுந்து கிடக்கிறது. 'அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை உள்நாட்டு அரசியல் அக்கறைகளுக்கு முற்றுமுழுவதுமாக அடிவருடியாக மாறிவிட்டது. நீண்டநாள்






செல்லப்போவதில்லை' என்று நாசர் எழுதுகிறார்.

சிரியாவில் உள்ள நிலைவரம் துணிச்சலையே வேண்டி நிற்கிறது. கட்டுப்படுத்தப்பட்டிருக்கக்கூடிய ஒரு உள்நாட்டுப் போர்ப் பிராந்தியம் தழுவிய மோதலாக விரிவடைந்து கொண்டிருக்கிறது. கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்களை அனுப்பியிருக்க முடியும். விமானப் பறப்பு தடைவலயத்தைப் பிரகடனப்படுத்தியிருக்க முடியும். எவ்வளவோ காரியங்களைச் செய்திருக்கலாம். ஆனால், ஒபாமாவோ வெறுமனே பஷார் அல் அசாத் அதிகாரத்தைக் கைவிட்டுப் போக வேண்டுமென்று மாத்திரம் கோரிக்கை விடுத்தார். வேறு எதையும் செய்யவில்லை.

இங்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் பெருவாரியானவை. அகதிகளினால் நிரம்பிவழியும் லெபனான் தடுமாறிக் கொண்டிருக்கிறது. ஜோர்தானுக்கும் அகதிகள் படையெடுக்கிறார்கள். சிரியாவில் உள்ள குர்திஷ் இனத்தவர்கள் அருகில் உள்ள ஈராக்கில் செய்ததைப் போன்று ஒரு சுயாட்சி வலயத்தை அமைக்கக்கூடும். இதனால் துருக்கி அதிருப்தியடையும். ஜிஹாடிகள் சிரியாவில் களஞ்சியப்படுத்தப் பட்டிருக்கும் பெருவாரியான இரசாயன ஆயுதங்களில் கண்வைத்துக் கொண்டு அலைந்துதிரிகிறார்கள். இஸ்ரேல் பதற்றத்துடன் அவதானித்துக் கொண்டிருக்கிறது. ஹெஸ்புல்லாக்கள் இரசாயன ஆயுதங்களில் கைவைத்தால் என்ன ஆகும்? நினையாப்பிரகாரம் ஏற்படக்கூடிய விளைவுகளுக்கு பயப்படுகின்ற ஒரு ஒபாமா நிருவாகம் மத்திய கிழக்கை வெடித்துச் சிதற அனுமதித்துவிடக் கூடும்.

டமாஸ்கஸுக்கான சண்டை இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. போர் இந்த மாதம் மூன்றாவது வருடத்திற்குள் பிரவேசிக்கிறது. வெளியுறவுக் கொள்கை யதார்த்தம் என்ற போர்வையில் ஒரு மனிதாபிமான நெருக்கடி புரையோடிப் போவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இன்னொரு யதார்த்தம் இப்போது வெளிப்படையாகிறது. செயற்பாடின்மை அநாதைகளை உற்பத்தி செய்யும் படுகொலையை, பயங்கரத்தை வளர்த்துக்கொண்டிருக்கிறது. உண்மை வாழ்வு திரைப்படத்தைப் போன்று அமைகிறது. லோரன்ஸ் ஒஃப் அரேபியாவில் சகல முகாம்களுமே டமாஸ்கஸில் தான் சின்னாபின்னமாகின. உண்மையிலும் டமாஸ்கஸிலேயே சகலதும் சிதைவுற்றுக் கொண்டிருக்கின்றன. ■

*த வாஷிங்டன் போஸ்ட்*




# சசிபெருமாள்

## காந்தியின் ஆயுதத்திற்கு நேருகின்ற கதி

தனி மனிதராக நின்று தரணியில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறார் சசிபெருமாள். 'மதுவிலக்கை' உடனடியாக தமிழகத்தில் அமுல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து சென்னை மெரினா கடற்கரையில் உள்ள காந்தி சிலை முன்பு உண்ணாவிரதத்தை ஜனவரி மாதம் 30ஆம் திகதி மேற்கொண்டார். அவரை கைது செய்த காவல்துறையினர் ராஜீவ் காந்தி மருத்துவமனையில் சேர்த்தார்கள். ஆனால், அவர் அங்கும் தன் உண்ணாநோன்பைத் தொடர்ந்தார். அவரது பிடிவாதம் அரசு அதிகாரிகளையே திணற வைத்தது. கடந்த இரு மாதங்களில் அடிக்கடி மதுவிலக்கை வலியுறுத்தி வைகோ நடைப்பயணம் மேற்கொண்டிருக்க, சத்தியாக்கிரகியான இந்த சசிபெருமாளின் 'காந்தீய வழி' போராட்டம் கதிகலங்க வைத்தது. அரசு மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் ஆகி வந்த சசிபெருமாள் சென்னை அபிராமபுரத்தில் உள்ள பிரபல சுதந்திர போராட்ட தியாகி நெல்லை ஜெபமணி இல்லத்தில் பெப்ரவரி 25ஆம் திகதியிலிருந்து சாகும்வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டார். நெல்லை ஜெபமணி உயிருடன் இருந்த வரை மதுவிலக்கை தமிழகத்தில் அமுல்படுத்த வேண்டும் என்று போராடிய தியாகி மட்டுமல்ல, காந்தீய வாதியும்கூட. அவரது மகனும் ஓய்வு பெற்ற இன்ஸ்பெக்டருமான மோகன்ராஜ் இந்த சசிபெருமாளுக்கு முழு ஆதரவு கொடுத்தார்.

அந்த உண்ணாவிரதப் பந்தலில் சிறிய கட்டில் ஒன்று போட்டு ஓலைப் பாய் போல் சுருண்டு கிடந்தார் சசி

### சென்னை மெயில்





முத்தையா காசிநாதன்

பெருமாள். சுற்றிலும் அவரது ஆதரவாளர்கள். அந்த தெருவழியாகப் போகும் பொதுமக்கள் கூட, நின்று இதை வேடிக்கை பார்த்துவிட்டு, 'பல குடும்பங்கள் மதுவால் நாசமாகின்றன. மதுவிலக்கை அமுல்படுத்தினால் நல்லதுதான்' என்று ஆதரவு தெரிவித்து விட்டுப்போனார்கள். பந்தலில் 'டாஸ்மாக்கை (மது விற்கும் அரசு நிறுவனம்) மூடி சசிபெருமாள் உயிரைக் காப்பாற்று' என்று இரத்தத்தில் எழுதி வைத்திருந்தார்கள். 'குடியைக் கெடுக்கும் குடியை வேரோடு அறுப்போம்' என்று 'நல்லோர் வட்டம்' சார்பில் போஸ்டர் ஒட்டப்பட்டிருந்தது. 'மதுக்கடை வருமானம் அரசுக்கு அவமானம்' என்ற நோட்டீஸ் உண்ணாவிரத ஸ்பாட்டிற்கு வருவோரை வரவேற்றது. பரபரப்பாக இருந்த அந்த உண்ணாவிரதப் பந்தலில் ஓரமாக நெல்லை ஜெபமணி, ஜனதா கட்சி நடத்திக் கொண்டிருக்கும் மோகன்ராஜும் அமர்ந்திருந்தார்கள். (இவர் முன்பு ராஜீவ் கொலை வழக்கு விசாரணை முறையாக நடைபெறவில்லை என்று வழக்குப் போட்டு பரபரப்பை ஏற்படுத்தியவர்)

'உங்கள் வீட்டை உண்ணாவிரதம் இருக்க அனுமதித்தது ஏன்?' என்று நாம் மோகன்ராஜிடம் கேட்டோம். அதற்கு அவர், 'என் தந்தை கடைசிக் காலகட்டம் வரை மதுவிலக்கை அமுல்படுத்தக் கோரி பல்வேறு போராட்டங்களை நடத்தினார். சசிபெருமாள் உண்ணாவிரதம் இருப்பதற்கு பொலிஸ் இடையூறு செய்கிறது என்பதால் என் வீட்டில் உண்ணாவிரதம் இருக்க அவருக்கு அனுமதி கொடுத்தேன். மதுவிலக்கை அமுல்படுத்த வேண்டும் என்று என் தந்தை உணர்வுபூர்வமாகப் போராடியிருக்கிறார். அதனால்தான் அவரது இல்லம் இப்போது அதே மதுவிலக்கு உண்ணாவிரதம் இருக்க சசிபெருமாளுக்கு உதவிக்கரமாக இருந்திருக்கிறது' என்று பெருமிதப்பட்டார். 'உங்களுக்கு பொலிஸ் அச்சுறுத்தல் இல்லையா?' என்று கேட்டோம். அதற்கு அவர், 'பொலிஸார் முதலில்

## மதுவிலக்கு; அ.தி.மு.க. - தி.மு.க. ஒற்றுமை



தமிழகத்தில் 2003 முதல் அரசே மதுபானக் கடைகளை நடத்தி வருகிறது. சுமார் 6700க்கும் மேற்பட்ட கடைகள் உள்ளன. இவற்றின் மூலம் 2003இல் அரசுக்குக் கிடைத்த வருமானம் 3639 கோடி ரூபாய். ஆனால், கடைசியாக 2011-2012ஆம் வருடத்தில் அரசுக்கு மதுபான விற்பனை மூலம் கிடைத்த வருவாய் 18000 கோடி ரூபாய். மதுபானக் கடைகளை மூடினால், இவ்வளவு பெரிய வருமான இழப்பை எங்கிருந்து சரிக்கட்டுவது என்பதுதான் ஆட்சியாளர்களை திக்குமுக்காட வைக்கிறது. அது மட்டுமன்றி தமிழகத்திலிருந்து கூப்பிடு தொலைவில் உள்ள கர்நாடக, ஆந்திர, கேரள, பாண்டிச்சேரி மாநிலங்களில் எல்லாம் மதுவிலக்கு அமுல்படுத்தப்படவில்லை. அப்படியிருக்கையில், தமிழகத்தில் மட்டும் அமுல்படுத்தினால், 'சுற்றியும் மதுபானக் கடைகள். தமிழகம் மட்டும் தனித் தீவு போல் இருக்கும்' என்ற தயக்கமும் ஆட்சியாளர்களுக்கு இருக்கிறது. இதையெல்லாம் விட அரசே மதுபானக் கடைகளைத் திறந்ததால் கள்ளச்சாராய சாவுகள் நின்று விட்டன. குறிப்பாக அரசே மதுபானக் கடைகளைத் திறக்க வேண்டும் என்று முடிவு எடுத்த 2003ஆம் வருடம் 98 பேர் விஷச்சாராயத்தைக் குடித்து மாண்டார்கள். அதன் பிறகு 2008இல் 49 பேர் இப்படிச் செத்தார்கள். ஆனால், 2010இலிருந்து இன்றுவரை இது மாதிரியான கள்ளச்சாராய சாவுகளோ, விஷச்சாராயச் சாவுகளோ நடைபெறவில்லை. இது மாதிரி சாவுகளை தடுக்க வேண்டியிருப்பதால், மதுவிலக்கை அமுல்படுத்த முடியாது என்பது அரசு தரப்பு வாதமாக இருக்கிறது. அ.தி.மு.க. அரசு என்றில்லை. இதற்கு முன்பு இருந்த தி.மு.க. அரசும் இது மாதிரியான வாதத்தையே எடுத்து வைத்தது. ஆகவே 'மதுவிலக்கு' வேண்டாம் என்பதில் அண்ணன்- தம்பிகளான தி.மு.க.விற்கும், அ.தி.மு.க.விற்கும் ஒரே கொள்கைதான். இதைத்தான் போராட்டம் நடத்துபவர்களும் 'கழகங்கள் குடி குடி' என்று கூறுகிறார்கள். முன்னாள் முதல்வர் காமராஜரோ, 'படி, படி' என்று சொன்னார் என்று விளம்பரத் தட்டிகளை சசிபெருமாள் உண்ணாவிரதப் பந்தலில் எழுதி வைத்துள்ளார்கள். ■

என்னைப் பார்த்து உங்கள் மீது வழக்குப் போடுவோம் என்றார்கள். பிறகு விரைவில் உண்ணாவிரதத்தை முடிக்கச் சொல்லுங்கள் என்றார்கள். ஆனால் அது சசிபெருமாளின் கையில்தானே இருக்கிறது. அவரது போராட்டத்தை மதித்து அரசு அதிகாரிகளோ, அமைச்சரோ வந்து பேசாதது வருத்தமளிக்கிறது' என்றார் உருக்கமாக. இப்படி அவர் பேசிக் கொண்டிருந்த போதே அங்கு பொலிஸ் உதவி கமிஷனர் நந்த குமார் வந்தார். அவர் மோகன்ராஜைச் சந்தித்து, 'நீங்கள் மனது வைத்தால் உண்ணாவிரதத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியும்' என்று பேசிவிட்டுச் சென்றார்.

இப்படிச் சொல்லிவிட்டு அந்த பொலிஸ் உதவி கமிஷனர் சென்ற சில நிமிடங்களில், காந்திப் பேரவையின் தலைவரும், காந்தீயவாதியுமான குமரி அனந்தன் உண்ணாவிரதப் பந்தலுக்கு திடீரென்று வந்தார். அங்கே பேசிய அவர், 'சசிபெருமாள் ஒரு புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறார். தமிழகத்தில் மதுவிலக்கு பற்றி இதுவரை யாரும் செய்யாத விழிப்புணர்வை உருவாக்கியிருக்கிறார். இன்று காந்தீய இயக்கங்கள் எல்லாம் ஒன்றிணைந்து ஒரு கூட்டம் போட்டோம். அதில் முதலில் உள்ளாட்சி அமைப்புகளான ஊராட்சிகள் (இரண்டு, மூன்று கிராமங்கள் அடங்கிய பகுதி), மாநகராட்சிகள் போன்றவற்றில் நாம் பிரசாரம் மேற்கொள்வோம். அவர்களிடம், உங்கள் பகுதியில் மதுபானக் கடைகள் வேண்டாம் என்று தீர்மானம் போடுங்கள் என்று கோரிக்கை வைப்போம். 12,000இற்கும் மேற்பட்ட ஊராட்சி அமைப்புகளும், பத்துக்கும் மேற்பட்ட மாநகராட்சிகளும் தமிழகத்தில் இருக்கின்றன. அவற்றில் எத்தனை இது மாதிரி நம் வேண்டுகோளை ஏற்று தீர்மானம் போடுகின்றன என்று பார்ப்போம். தீர்மானம் போடாத ஊராட்சிகள், மாநகராட்சிகளில் மீண்டும் பிரசாரம் செய்து அவர்களையும் தீர்மானம் போட வைப்போம். அந்தப் பணியை மேற்கொள்வதற்கு ஏதுவாக சசிபெருமாள் இந்த உண்ணா நோன்பை முடித்துக்கொள்ள வேண்டும்' என்று உரத்த குரலில் பேசியவர், 'மதுவிலக்கை அமுல்படுத்த நாங்கள் எல்லாம் போராடினோம். ஆனால் சசிபெருமாளின் போராட்டம் அதையெல்லாம் மிஞ்சிவிட்டது. நாம் எல்லாம் சேர்ந்து மதுவிலக்கு போராட்டத்தை தொடர சசிபெருமாள் உண்ணாவிரதத்தை கைவிட வேண்டும்' என்று வேண்டுகோள் விடுத்த போது பந்தலில் இருந்தவர்கள் சடசடவென கைதட்டினார்கள். அவர் மேலும் பேசும்போது, " இங்கு உண்ணாவிரதம் இருக்க இடம் கொடுத்திருக்கிறார் மோகன்ராஜ். வ.உ.சிதம்பரனாருக்கு வெள்ளைக்காரன் காலத்தில் 40 வருடம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அதில் இருபது வருடம் ஆங்கிலேய அரசை எதிர்த்ததற்கு வழங்கப்பட்டது. இன்னொரு 20 வருடம் சுப்பிரமணி சிவாவை தன் வீட்டில் தங்க வைத்ததற்கு கொடுக்கப்பட்டது. ஆகவே அடைக்கலம் கொடுப்போருக்கு அப்படியொரு தண்டனை உண்டு என்பதை உணர்ந்தும் மோகன்ராஜ் இந்த உண்ணாவிரதத்திற்கு இடம் கொடுத்ததை நான் மனமுவந்து பாராட்டுகிறேன். ஏனென்றால் தியாகி ஜெபமணியின் இல்லம் இந்த உண்ணாவிரதத்திற்கு மிகவும் ஏற்ற இடம்'' என்றதும் 'குபீர்' என்ற கைதட்டல்!



படுத்த படுக்கையாகக் கிடந்த சசிபெருமாளினால் பேச முடியவில்லை. எழுந்து உட்கார முடியவில்லை. 32 நாட்கள் உண்ணா நேன்பு என்பது அவரை வாடிப்போன பயிர் போன்று துவள வைத்தது. யோகா பயிற்சி மேற்கொள்பவர் என்பதால், உடல் நிலை ஒத்துழைத்தாலும், அவரது உடல் நிலைமை நாளுக்கு நாள் சீரியஸாகிக் கொண்டிருந்தது. குமரி அனந்தனின் பேச்சைக் கேட்ட சசிபெருமாள் தன் ஆதரவாளரிடம் 'சைகை' மூலம் ஒரு பேப்பரும், பேனாவும் கேட்டார். அதில், 'உங்கள் கருத்தை மதிக்கிறேன். ஆனால் எனக்கு முடிவு எடுக்க அவகாசம் கொடுங்கள்' என்று எழுதிக் காட்டினார். இதற்கிடையில் அங்கே மனித நேய மக்கள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் ஜவஹிருல்லாவும் வந்து குமரி அனந்தனின் கோரிக்கைக்கு ஆதரவு கேட்டார். ஆனால் சசிபெருமாள் அறவே மறு த்து விட்டார். இந்த உண்ணாநோன்பிற்கு அரவிந்த் கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சியும் ஆதரவளித்து உண்ணாவிரதப் பந்தலில் ஆங்காங்கே போஸ்டர்களை ஒட்டி வைத்திருந்தது. அவர்கள் சார்பில் மதுவிலக்குத்துறை அமைச்சர் நத்தம் விஸ்வநாதனை சந்தித்தார்கள். ஆனால் அமைச்சர் ஏதும் பிடி கொடுக்காமல் பேசவே, 'ஜனநாயக நாட்டில் உண்ணாவிரதம் இருப்ப வரை வந்து பார்க்கக்கூட அரசு அதி

காரிகளும், அமைச்சர்களும் தயங்குகிறார்கள்' என்று 'ஆம் ஆத்மி கட்சியினர்' அப்செட் ஆகிவிட்டார்கள். அமைச்சரிடம் முறையிட்டதற்கு பலனில்லை என்றதும் உண்ணாவிரதப் பந்தலில் இருந்தவர்களும் வேதனைப்பட்டார்கள்.

சாகும் வரை உண்ணாவிரதம் இருந்த சசிபெருமாளின் உடல்நிலை மிகவும் மோசமடைந்ததை முன்னிட்டு கடந்த மூன்றாம் திகதி இரவு அவரை பொலிஸார் தூக்கிச் சென்று ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் சேர்த்தனர். அவரின் ஆதரவாளர்களோ, 'உண்ணாவிரதத்தை திங்கள் கிழமை மாலை முடித்துக் கொள்கிறேன்' என்று பேப்பரில் எழுதிக் கொடுத்த பிறகும் கூட, அவரை குண்டுக்கட்டாக தூக்கிச் சென்றனர் என்று புகார் தெரிவித்துள்ளனர். அவரை உண்ணாவிரதப்பந்தலில் இருந்து அகற்றியதற்கு உடல்நிலை மோசமானதும், உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டு இடத்தைக் காலி செய்ய மாட்டேங்கிறார் சசிபெருமாள் என்று மோகன்ராஜ் கொடுத்த புகாருமே காரணம் என்று பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது. ஆனால் நம்மிடம் பேசிய மோகன்ராஜ் இதை அடியோடு மறுத்தார். 'நான் அப்படி எந்த புகாரும் பொலிஸிடம் கொடுக்கவில்லை. என் தந்தை மதுவிலக்கை அமுல்படுத்த போராடினார். அவரது இலட்சியத்திற்காகவே சசிபெருமாள் உண்ணாவிரதம் இருக்க என் வீட்டை கொடுத்தேன்' என்ற அவர், 'இது மாதிரி பொய் தகவல் கொடுத்த பொலிஸார் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பேன்' என்றார் உறுதியாக. ஏற்கனவே வாக்குறுதி கொடுத்தபடி மார்ச் 4ஆம் திகதி மருத்துவமனையிலிருந்தவாறே தன் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார் சசிபெருமாள். ஆனால் அவர் கிளப்பிய விழிப்புணர்வு தமிழகத்தில் மூலை முடுக்கெல்லாம் கேட்கிறது. ■

# ஸ்டாலினுக்கு வாழ்த்துச் சொல்லாத குஷ்பு





தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலினின் பிறந்த நாள் கொண்டாட்டங்கள் மார்ச் 1ஆம் திகதி சென்னை ராயப்பேட்டையில் உள்ள வை.எம்.சி.ஏ. மைதானத்தில் களை கட்டியது. இங்குதான் முன்பு டெசோ மாநாடு நடைபெற்றது. ஸ்டாலினின் மணிவிழா இது என்பதால் முதல் நாளே அ.தி.மு.க. பாணியில் 'அறுபது ஜோடிகளுக்கு' திருமணம் நடத்தி வைத்து, திருமண சீர் வரிசைகளைக் கொடுத்து கலக்கினார்கள். இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர் தென் சென்னை மாவட்ட தி.மு.க. செயலாளர் அன்பழகன். திருமணங்களை நடத்தி வைத்தவர் தி.மு.க. தலைவர் கருணாநிதி. அவர் தனது பேச்சில் தி.மு.க.வின் 'பொதுக்குழுவில் சில ஸ்டாலின் ஆதரவாளர்கள் கலாட்டா' செய்தது, அதன்பிறகு 'குஷ்பு வீட்டைத் தாக்கியது' போன்றவற்றை மனதில் வைத்து கட்சிக்குள் கட்டுப்பாடு மிக முக்கியம் என்பதை வலியுறுத்திப் பேசினார். அவர் தன் பேச்சில் இரு முக்கிய விடயங்களைக் கோடிட்டுக் காட்டினார். முதலில், 'நம்முடைய இயக்கத்தை இன்னும் கட்டுக்கோப்போடு,



**எனக்கு பிறந்த நாள் வாழ்த்துச்சொல்லவில்லை. நானே அவருக்கு வாழ்த்துச் சொல்ல வேண்டும் என்று சொன்னாராம் அண்ணன் அழகிரி**

கட்டுப்பாட்டோடு நடத்த வேண்டும். பெரியார் சொன்ன கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற இவைகளில் கடமை, கண்ணியம் சிதைந்தாலும் பரவாயில்லை. ஆனால் கட்டுப்பாடு காக்க வேண்டும்' என்றார். இது முழுக்க முழுக்க தி.மு.க.வின் பொதுக்குழுவில் நடந்த கலாட்டா மற்றும் குஷ்பு கலாட்டாவை மனதில் வைத்துப் பேசியது. அது மட்டுமன்றி, 'எனக்குப் பிறகு ஸ்டாலின்' என்ற வார்த்தையைச் சொல்லி விட்டேன் என்பதற்காக, கட்சிக்குள் உள்ள மற்றவர் களையெல்லாம் தூக்கியெறியும் அளவிற்கு ஸ்டாலின் கட்டுப்பாடு இழந்து விடக்கூடாது என்பதும் இப்பேச்சின் மூலம் விடுக்கப்பட்ட எச்சரிக்கை என்றே சொல்ல வேண்டும். அடுத்ததாக இன்னொன்றையும் பேசினார் கலைஞர் கருணாநிதி. அது, 'இந்த இயக்கத்தினுடைய மானத்தைக் காப்பாற்ற வேண்டியது நம்முடைய கடமை என்பதை உணர்ந்து அப்படிச் செய்தால் தான் நீங்கள் இணைந்திருக்கின்ற அணிக்குப் பெருமை' என்று ஸ்டாலின் தலைமையில் உள்ள இளைஞர் அணியினருக்கு 'பாடம்' எடுப்பது போல் பேசிய பேச்சு. ஸ்டாலினுக்கு வாழ்த்துச் சொல்ல நடிகை குஷ்பு வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது!

ஸ்டாலின் பிறந்தநாள் விழாவிற்கு அனைத்துக் கூட்டணிக் கட்சித் தலைவர்களும் வந்தார்கள். வாழ்த்தினார்கள். கட்சிப் பிரமுகர்களும் தவறாது வந்து வாழ்த்தினார்கள். ஆனால் மத்திய அமைச்சர் மு.க. அழகிரி மட்டும் வாழ்த்த வரவில்லை. 'எனக்கு பிறந்த நாள் வாழ்த்துச் சொல்லவில்லை. நான் ஏன் அவருக்கு வாழ்த்துச் சொல்ல வேண்டும்' என்றாராம் அழகிரி. அவரது தீவிர ஆதரவாளரான மதுரை புறநகர் மாவட்ட செயலாளர் மூர்த்தி, மன்னன் ஆகியோர் ஸ்டாலினை வாழ்த்த வந்த போது சிறு சலசலப்பு ஏற்பட்டு விட்டது. ஆகவே, வாழ்த்துச் சொன்ன மாவட்டச் செயலாளர்கள் பெயர்ப் பட்டியலில் மூர்த்தியின் பெயர் மறுநாள் வெளிவந்த தி.மு.க.வின் அதிகார பூர்வ நாளேட்டில் பிரசுரிக்கப்படவில்லை. மாற்றுக் கட்சியின் சார்பில் பா.ஜ.க.வின் மாநிலத்தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன், இல.கணேசன், திருநாவுக்கரசர் போன்றோர் பிறந்த நாள் வாழ்த்துச் சொன்னார்கள். காலை 7 மணிமுதல் 9 மணிவரை வீட்டில் மணிவிழா நடத்தப்பட்டது. அங்கிருந்து புறப்பட்டு பத்து மணிக்கு பிறந்த நாள் வாழ்த்து மேடைக்கு வந்த ஸ்டாலினும், துர்கா ஸ்டாலினும் தொண்டர்களின் வாழ்த்தைப் பெற்றார்கள். 12 மணி வரை நின்று விட்டு புறப்பட்டுச் சென்று விட்டார். ஸ்டாலின் மட்டும் பிறகு 2 மணி வரை நின்று தொண்டர்களின் வாழ்த்தைப் பெற்றுக் கொண்டார். 'சால்வை, தேர்தல் நிதி' மட்டுமே பிறந்த நாள் பரிசுகளாக வந்தன. அன்றைய தினம் ஸ்டாலின் பிறந்த நாள் மூலம் வசூலான தேர்தல் நிதி மட்டும் சுமார் 68.83 இலட்சம் ரூபாய்.

அறுபது வயதைத் தொட்டுவிட்டு ஸ்டாலின் இப்போது இளைஞரணிச் செயலாளர் மற்றும் தி.மு.க. பொருளாளர் என்று 'இரட்டைப் பதவிகளை' ஏற்று செயல்பட்டு வருகிறார். தலைவர் பதவிக்கான அடித்தளம் இந்த வயதில்தான் 'கொங்கிரிட்' போட்டு உருவாக்கப்பட்டுள்ளது. ஆகவே, ''தி.மு.க.விற்கு தலைமையேற்க இப்போதுகூட நமக்கு முழுத்தகுதி வரவில்லையா என்ற ஆதங்கம் ஸ்டாலின் மனதில் பிறந்திருக்கிறது. உத்தரப்பிரதேச முதல்வர் முலாயம்சிங்கிற்கு அகிலேஷ் யாதவ் ஒரே ஒரு மகன். ஆனால் ஸ்டாலினுக்கு அப்படியில்லையே என்பதுதான் அவரது 'தலைமைத் தாகத்திற்கு' முட்டுக்கட்டையாக அமைந்திருக்கிறது'' என்பதே முன்னணி தி.மு.க. தலைவர்களின் கருத்து.

## தமிழகத்தில் தனிமைப்படுத்தப்படும் காங்கிரஸ் கட்சி!

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனைக் கொன்ற 'சனல்-4' காட்சிகள் தமிழகத்தில் பெரும் டென்ஷனை ஏற்படுத்தியுள்ளன. மக்கள் மத்தியில் பெரும் உணர்ச்சிபூர்வமான பிரச்சினையாக இது மாறி வருகிறது. அதை தங்களுக்கு வாக்கு வங்கிகளாக மாற்ற தமிழக அரசியல் கட்சிகள் எல்லாம் முண்டியடித்துக் கொண்டு அரசியல் பண்ணுகின்றன. வைகோ டெல்லியில் போராட்டம் நடத்துகிறார் என்பதால் இந்த முறை டில்லியில் டெசோ கருத்தரங்கை நடத்தியது தி.மு.க. அதற்கு அனைத்துக் கட்சியினரையும் அழைத்துள்ளது. 'சனல்-4 காட்சிகள்' குறித்த கவனஈர்ப்புத் தீர்மானம் ராஜ்ய சபையில் வந்த போது ஆக்ரோஷமாகப் பேசிய பா.ஜ.க. தலைவர் வெங்கையா நாயுடு, தி.மு.க.வின் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. இலங்கை சென்று திரும்பிய பா.ஜ.க. தலைவர் சுஷ்மா சுவராஜ் மற்றும் இடதுசாரிக் கட்சிகள், காங்கிரஸ் கட்சி அனைத்திற்கும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. இதற்கிடையில் மார்ச் 8ஆம் திகதி வைகோ சென்னையிலுள்ள இலங்கைத் தூதரக முற்றுகைப் போராட்டத்தை அறிவித்திருந்தார். ஆனால் அதைக் கவுண்டர் பண்ணும் விதத்தில் அதே தூதரகத்தை 5ஆம் திகதியே முற்றுகையிடப் போவதாக தி.மு.க. சார்பில் நடத்தப்பட்ட டெசோ கூட்டம் முடிவு

செய்தது. இதில் அப்செட்டான வைகோ பாதயாத்திரை சென்ற இடத்திலேயே தன் கட்சிப் பிரமுகர் வேளச்சேரி மணிமாறனை விட்டு, தி.மு.க.வை கடுமையாக அட்டாக் பண்ணி பேச வைத்தார். அத்துடன் நில்லாமல், வைகோ, நல்லகண்ணு, பழ. நெடுமாறன் உள்ளிட்டோர் எல்லாம் சேர்ந்து மார்ச் 4ஆம் திகதியே இலங்கைத் தூதரகத்தை முற்றுகையிட முடிவு செய்தனர். இதைப் பொறுக்காத 'நாம் தமிழர் கட்சி' யைச் சேர்ந்த சீமான், 'தமிழகத்தில் இலங்கைத் தூதரகமே தேவையில்லை. அவர்கள் இங்கு வேவு பார்க்கும் வேலையைத் தவிர வேறு எதுவும் செய்வதில்லை' என்று அறிக்கை விடுத்தார்.

ஆனால் இந்தப் போராட்டங்கள் எதைப் பற்றியும் மத்திய அரசு கவலைப்படுவதாகத் தெரியவில்லை. தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. பாராளுமன்றத்தில் கொண்டு வந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு பதிலளித்துப் பேசிய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், 'இலங்கைத் தமிழர் பிரச்சினை தொன்மை வாய்ந்த பிரச்சினை. இதை நான்கு வருடம், ஐந்து வருடம், ஆறு வருடம் என்று கூறி, அதற்குள் தீர்த்து விடுங்கள் என்று இலங்கை அரசுக்கு இந்திய அரசு கெடு விதிக்க முடியாது. வெளியாகியுள்ள படங்கள் (பாலச்சந்திரன் தொடர்பான காட்சிகள்) துயரமாகத் தெரிகிறது. கவலையளிக்கிறது. ஆனால் அந்தப் படங்களின் உண்மைத் தன்மைக்கு இந்தியா உத்தரவாதம் அளிக்க முடியாது. இலங்கையும், அமெரிக்காவும் பேசிக் கொள்ளட்டும். அதன் பிறகு இந்த தீர்மான விடயத்தில் இந்தியா என்ன முடிவு எடுப்பது என்பதை முடிவு செய்யும். இலங்கை நட்பு நாடு. அதை பகை நாடு என்று சொல்வதை ஏற்றுக் கொள்ள மாட்டேன். தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்கும் 13 ஆவது அரசியல் சட்ட திருத்தம் செயல்படுத்தப்படும் என்று இலங்கை அரசு நம்மிடம் தொடர்ந்து சொல்லி வருகிறது. ஆனால், இலங்கை அரசுக்காக நான் உத்தரவாதம் கொடுக்க முடியாது' என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லி விட்டார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை 'விஸ்வரூபம்' எடுப்பதால், அடுத்த பாராளுமன்றத் தேர்தல் கூட்டணிகள் தமிழகத்தில் இதை மையமாக வைத்தே உருவாகும். அ.தி.மு.க. 'காங்கிரஸ் எதிர்ப்பில்' கடுமையாக இருக்கிறது. அதற்கு ஈடு கொடுப்பது போல் இப்போதுதான் 'பிப்டி-பிப்டி' என்ற அடிப்படையில் தி.மு.க. களத்திற்கு வருகிறது. ஏற்கனவே நடைபெற்றுள்ள பிரசாரம், இப்போது புதிதாக வந்துள்ள இலங்கைத் தமிழர் கொல்லப்பட்டது குறித்த சனல்-4 காட்சிகள் தமிழகத்தில் பெரும் தாக்கத்தை உருவாக்கியிருக்கின்றன. இதனால், 'ராஜீவ் காந்தி கொலைக்கு பழிக்குப் பழி வாங்கவே காங்கிரஸ் அரசு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மௌனம் சாதிக்கிறது' என்ற எண்ணம் தமிழக மக்கள் மனதில் வேரூன்றி வருகிறது. இதே நிலைமை இன்னும் சில மாதங்கள் நீடித்தால், காங்கிரஸுடன் கூட்டணி வைத்துள்ள கட்சிக்கு வாக்கு இல்லை என்ற நிலை தமிழகத்தில் உருவாகும். அதனாலேயே காங்கிரஸ் கட்சி தமிழகத்தில் தனிமைப்பட்டு விடும். இதைப் புரிந்து கொண்டுதான் அகில இந்திய பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத் சிங் கூட, 'இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு ஏன் மௌனம் சாதிக்கிறது?' என்று கேள்வி எழுப்பியிருக்கிறார். ■

---

*(07ஆம் பக்கத்தொடர்ச்சி)*

பாராளுமன்றத் தெரிவுக்குழுவையே அரசாங்கம் காட்டி நிற்கிறது என்பது தெரிந்ததே.

அந்தப் பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பங்கேற்காவிட்டால் இனப்பிரச்சினைத் தீர்வை நோக்கி முன்னோக்கிச் செல்ல முடியாது என்று ஜனாதிபதி இந்துவுக்குக் கூறியிருக்கிறார்.

"தெரிவுக்குழுவில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இல்லாமல் என்னால் எதையும் செய்ய இயலாது. முன்னர் சகல தலைவர்களுமே உயர் மட்டத்தில் இருந்து தங்கள் தீர்வுகளைக் கொடுத்தார்கள். அது பயனளிக்கவில்லை. அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தம் தோல்விகண்டுவிட்டது. சகலதுமே, சகல முயற்சிகளுமே தோல்விகண்டுவிட்டன" என்று ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் நிகழ்ச்சி நிரலை பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த எம்.பிக்கள் தங்கள் போக்கில் "கடத்திச் சென்றுவிடுவார்கள்" என்று தெரிவிக்கப்பட்டிருக்கக்கூடிய அச்சங்கள் குறித்து இந்துவுக்கு தனது கருத்தை வெளியிட்ட ஜனாதிபதி ராஜபக்ஷ "அரசாங்கத்தில் இருக்கும் சில தனிப்பட்டவர்களும் கட்சிகளும் அது இடம்பெறுவதற்கு அனுமதிக்க மாட்டார்கள்" என்று கூறியிருக்கிறார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்காத பட்சத்தில் தன்னால், எதையும் செய்துவிடமுடியாது என்று கூறுகின்ற நாட்டின் தலைவர் ஏனைய எட்டு மாகாணங்களும் அனுபவிக்கிற அதிகாரங்களையும் விட கூடுதலாகவோ குறைவாகவோ வட மாகாணம் அதிகாரங்களைக் கொண்டிருக்கப் போவதில்லை என்று அதே மூச்சில் தெரிவித்திருக்கும் நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடமிருந்து எதிர்பார்ப்பதற்கு மேலதிகமாக என்னதான் இருக்கப்போகிறது என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது.

ஜனாதிபதி தெரிவித்திருக்கக்கூடிய கருத்துகள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்காமல் இருப்பதற்கு இதுகாலவரை முன்வைத்து வந்திருக்கக்கூடிய அச்சங்களையும் நியாயப்பாடுகளையும் வலுப்படுத்துபவையாகவே அமைகின்றன என்பதில் சந்தேகமில்லை. ■



# முடிவுக்கு வரப்போகிறது காஸ்ட்ரோக்கள் யுகம்...!

மார்க் பிராங்க்

**தனது இரண்டாவது பதவிக்காலத்தின் முடிவில் 2018இல் அதிகாரத்திலிருந்து இறங்கப்போவதாக ராவுல் காஸ்ட்ரோ அறிவித்த பாராளுமன்றத்தின் கூட்டத்திலேயே டயஸ் கானெலை முதலாவது உபஜனாதிபதியாக நியமிக்கும் தீர்மானமும் அறிவிக்கப்பட்டது. ராவுலினால் அவரது பதவிக்காலத்தை பூர்த்தி செய்ய முடியாமல் போகும் பட்சத்தில் டயஸ் கானெல் ஜனாதிபதியாக பதவிக்கு வருவார்**

கியூபாவின் ஜனாதிபதி ராவுல் காஸ்ட்ரோ தனது முதலாவது உப ஜனாதிபதியாக முன்னாள் பொறியியல் பேராசிரியரும் கம்யூனிஸ்ட் கட்சியின் நீண்டகால உறுப்பினருமான மிகுவெல் டயஸ் கானெலை நியமித்தபோது அவரது முகாமைத்துவ ஆற்றலை மாத்திரமே முக்கிய கவனத்தில் எடுத்திருந்தார். 52 வயதான டயஸ் கானெல் பெப்ரவரி 24ஆம் திகதி உப ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டதையடுத்து, அரை நூற்றாண்டுக்கும் அதிகமான காலத்துக்கு முன்னர் காஸ்ட்ரோ சகோதரர்கள் அதிகாரத்திற்கு வந்ததற்குப் பிறகு கியூபாவில் அதிகாரத்தின் உச்சிக்கு மிக நெருக்கமாக வந்திருக்கக் கூடிய இராணுவம் சாரா இளந் தலைவர் என்ற பெருமைக்குரியவராகிறார்.

ஜனாதிபதி என்ற வகையில் தனது இரண்டாவது ஐந்து வருட பதவிக் காலத்தின் முடிவில் 2018 ஆம் ஆண்டு பதவியில் இருந்து இறங்கப் போவதாக ராவுல் காஸ்ட்ரோ அறிவித்த தேசிய சட்டசபை (பாராளுமன்றம்) யின் கூட்டத்திலேயே டயஸ் கானெலை முதலாவது உப ஜனாதிபதியாக நியமிக்கும் தீர்மானமும் அறிவிக்கப்பட்டது. ராவுல் காஸ்ட்ரோவினால் அவரது பதவிக் காலத்தைப் பூர்த்தி செய்ய முடியாமற் போகும் பட்சத்தில் டயஸ் கானெல் ஜனாதிபதியாக அதிகாரத்துக்கு வருவார். தலைநகர் ஹவானாவுக்கு வெளியே முக்கிய பதவிகள் உட்பட ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் அணிகளுக்கூடாக உயர்ந்த இடத்துக்கு வந்த டயஸ் கானெல் உள்நாட்டில் கணிசமானளவுக்கு அங்கீகாரத்தைக் கொண்டவராக இருக்கின்ற போதிலும் வெளியுலகினால் பெரிதாக அறியப்படாதவர்.

கிரமமான இராணுவ சேவையில் இரு வருட அனுபவத்தை மாத்திரம் கொண்டவராக இருக்கின்ற போதிலும், கம்யூனிஸ்ட் கட்சியின் மாகாண அணிகளுக்கூடாக வளர்ந்து வந்தவர் என்பதால் இராணுவத்துடன் பலமான உறவுகளை டயஸ் கானெல் பேணி வந்திருக்கிறார். கடந்த காலத்தில் செய்யப்பட்டிருக்கக்கூடிய மாற்றங்களின் போது ஓரங்கட்டப்பட்ட கம்யூனிஸ்ட் முக்கியஸ்தர்கள் பலருக்கு இராணுவத்துடன் இத்தகைய உறவுகள் இருந்ததில்லை.

'இது கியூபாவில் ஒரு பெரிய மாற்றமாகும். தலைமுறை மாற்றமாக மாத்திரம் பார்த்தலாகாது. கியூபாவின் உயர்குழாம் முன்னேற்றப்படுகின்ற முறையில் கடைப்பிடிக்கப்படுகின்ற ஒரு நிறுவன ரீதியான மாற்றத்தின் ஒரு அங்கமாகவே டயஸ் கானெலில் உயர்வை நோக்க வேண்டும்' என்று புலனாய்வு விவகாரங்கள் மற்றும் அமெரிக்க உறவுகள் சம்பந்தப்பட்ட விடயங்களில் கியூபாவின் உள்துறை அமைச்சுக்காக பணியாற்றியவரான டென்வர் பல்கலைக்கழக ஆய்வாளரான ஆர்ரூரோ லொபெஸ்-லீவி கூறியிருக்கிறார்.

ஹவானாவில் அரசாங்கத்தில் இணைவதற்கு முன்னதாக விலா கிலாரா, ஹோல்குயின் ஆகிய இரு முக்கிய மாகாணங்களில் கம்யூனிஸ்ட் கட்சியின் உயர் பதவிகளை வகித்தவர் டயஸ் கானெல், இவ்விரு மாகாணங்களும் ராவுல் காஸ்ட்ரோவினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற பொருளாதார சீர்திருத்த செயன்முறைகளின் முக்கிய அம்சங்களான உல்லாசப் பிரயாணத்துறை மற்றும் புதிய தனியார்துறை நடவடிக்கைகளின் நிலையங்களாக விளங்குகின்றன. கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் கட்டுப்பாட்டை தளர்த்தாத வகையில், பொருளாதாரத்தை கூடுதலான அளவுக்கு பயனுறுதியுடையதாகவும் துடிப்பானதாகவும் வளர்த்தெடுப்பதற்கும் கூடுதல் வெளிநாட்டு செலாவணியைக் கொண்டு வருவதற்குமெனத் தீட்டப்பட்டவையே இந்தப் பொருளாதாரச் சீர்திருத்தத் திட்டங்கள்.

டயஸ் கானெல் அங்கு பெற்ற அனுபவங்கள் சீர்திருத்தங்களை முன்னெடுப்பதில் ராவுல் காஸ்ட்ரோவுக்கு உதவுவதற்கு கைகொடுக்கின்றன.

'கம்யூனிஸ்ட் கட்சியின் மாகாண உயர்மட்டத் தலைவர்களுடன் டயஸ் கானெலுக்கு நெருக்கமான உறவுகள் இருக்கின்றன. அந்தத் தலைவர்கள் மிகவும் முக்கியமானவர்கள். அவர்கள் சர்வதேச ஊடகங்கள் முன் வருவதில்லை. ஆனால், கியூபாவில் அவர்களுக்கு மிகவும் உறுதியான அதிகாரம் இருக்கிறது. தங்களது சொந்த மாகாணங்களில் அவர்கள் மன்னர்கள்' என்று லொபெஸ் - லீவி கூறுகிறார்.

கியூபாவில் அரசியல் பிரசாரங்கள் இடம்பெறுவதில்லை. அதனால், ஊடகங்கள் மத்தியில் பிரபல்யமாக இருக்கிற பாணியைக் காட்டிலும், கட்சிக்கு விசுவாசமாக இருப்பதை நிரூபிப்பதும் கட்சிக்குள்ளும் இராணுவத்துக்குள்ளும் பலமான தொடர்புகளைக் கொண்டிருப்பதும் கூடுதல் பெறுமதியானது.

'தேவைப்படுகிற நேரங்களைத் தவிர, நான் அடிக்கடி பகிரங்கத்தில் தோன்றுவதில்லை. நான் எப்போதுமே வேண்டாதபோது பேசாமல், காலமறிந்து காரியமாற்றுகிற போக்கையே கடைப்பிடிக்கின்றேன். இதுதான் என்வழி. தொடர்ந்தும் அந்த வழியிலே செல்வதே எனது

திட்டம்' என்று 2006 ஆம் ஆண்டு பிடல் சகோதரர் பிடல் காஸ்ட்ரோ சுகவீனமுற்றதையடுத்து அதிகாரத்தைப் பொறுப்பேற்ற பிறகு முதன் முதலாக ராவுல் காஸ்ட்ரோ விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

டயஸ் கானெலின் குணாதிசயத்தை வர்ணிக்கும் போது காலமறிந்து செயற்படுகிறவர் என்றும் முன் விழிப்புடன் நடந்து கொள்கிறவர் என்றும் குறிப்பிடுவது அவரைக் குறை த்து மதிப்பிடுவதாகவே அமையும். ஏனென்றால், ஏனைய இளம் உறுப்பினர்கள் பலர் உயர்ந்த பதவிகளுக்கு வந்து பின்னர் வீழ்ச்சி கண்ட அதேவேளை, அவரோ 30 வருடங்களுக் கும் கூடுதலான காலமாக கம்யூனி ஸ்ட் கட்சியினூடாக பயணித்து உப ஜனாதிபதியாகியிருக்கிறார். அதனால் அவரிடம் சிறப்பான ஆற்றல்கள் இல்லாமல் இருக்க முடியாது.

ராவூல் காஸ்ட்ரோவைப் போன்று டயஸ் கானெல் ஒரு ஒழுங்குமுறையான பேச்சாளர் என்று கருதப்படுகிறார். ஆனால், பிடல் காஸ்ட்ரோவைப் போன்று வசீகரம் கொண்டவரல்ல.

உயர்கல்வி அமைச்சர் பொறுப்பு வழங்கப்படுவதற்காக டயஸ் கானெல் 2009 ஆம் ஆண்டு ஹவானாவுக்கு அழைக்கப்பட்டார். பிறகு அமைச்சர்கள் கவுன்சிலின் உபதலைவராகவும் பதவிவகித்தார்.

பிடல் காஸ்ட்ரோவின் நெருங்கிய விசுவாசிகளாக இருந்த பலர் குறிப்பாக, அமைச்சர்கள் கவுன்சிலின் முன்னாள் செயலாளர் கால்லோஸ் லேஜ், வெளியுறவு அமைச்சர் பிலிப்பே பெரஸ் றோக் போன்றவர்கள் கட்சி மட்டத்தில் டயஸ் கானெலைப் போன்று நிருவாக அனுபவத்தைக் கொண்டவர்களாக இருக்கவில்லை. அவர்களை ராவுல் காஸ்ட்ரோ பதவி நீக்கம் செய்ததையடுத்து டயஸ் கானெல் விரைவாகவே உயர் நிலைக்கு வரக்கூடியதாக இருந்தது.

கட்சியின் பல்வேறு மட்டங்களினால் 'ஒரு விசுவாசமான, ஊழலற்ற, உறுதியான கம்யூனிஸ்டாக' டயஸ் கானெல் நோக்கப்படுகிறார் என்று கம்யூனிஸ்ட் கட்சி வட்டாரமொன்று கூறியது. காஸ்ட்ரோக்களின் புரட்சிகர நோக்கிற்கு மிகவும் இதயசுத்தியான விசுவாசம் கொண்ட தேசியவாதியாகவும் டயஸ்கானெல் நோக்கப்படுகிறார். இவர் ஆற்றல் மிக்க நிருவாகி என்பதற்கு அப்பால், ராவுல் காஸ்ட்ரோவின் சீர்திருத்த நிகழ்ச்சி நிரலுக்கும் மாற்றங்களை எதிர்க்கும் மாகாணங்களின் கட்சி உறுப்பினர்களின் கோட்பாட்டு ரீதியான அணுகுமுறைகளுக்கும் இடையே இருக்கக்கூடிய நுட்ப வேறுபாடுகள் தொடர்பில் இணக்கப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதிலும் பெயரெடுத்தவர்.

டயஸ் கானெல் பழைய பாணி அரசியலுக்கு விசுவாசியாக இருக்கிற போதிலும், சீர்திருத்தங்கள் என்று வரும்போது ஒரு இளம் சீர்திருத்தவாதியாகவே செயற்படுகிறார். பிடலுக்கோ, அல்லது ராவுலுக்கோ அவர் அச்சுறுத்தலாக ஒருபோதும் நோக்கப்பட்டதில்லை, தனிமைப்படுத்தப்பட்டதில்லை என்று கனடாவின் றோயல் இராணுவ கல்லூரியின் சரித்திரவியல் பேராசிரியரான ஹால் கிளெபாக் கூறுகிறார்.

ராவுல் காஸ்ட்ரோவின் கீழ் கியூப இராணுவம் பற்றி நூலொன்றை எழுதியவர் கிளெபாக். எந்தவொரு பதவிக்கும் பணிக்கும் சிறந்த ஆளைத் தெரிவுசெய்வதில் பெயரெடுத்தவர் ஜனாதிபதி ராவுல் காஸ்ட்ரோ என்று கிளெபாக் குறிப்பிட்டார்.

புரட்சியை நிறுவனமயப்படுத்தி அதைத் தொடர்ந்து முன்னெடுக்க வல்ல ஒருவரையே ராவுல் தேடிக் கொண்டிருந்தார். தன்னைப் போன்று அரசாங்கத்தை நவீனமயப்படுத்துவதில் ஆர்வம் கொண்டவரை ராவுல் தேடிக் கொண்டிருந்தார். அதற்குப் பொருத்தமானவராக டயஸ் கானெல் அமைந்துவிட்டார் என்று கிளெபாக் கூறினார்.

சுகவீனம் காரணமாக 2008 ஆம் ஆண்டு அதிகாரத்தில் இருந்து இறங்கிய பிடல் காஸ்ட்ரோவும் கடந்த மாதம் 24 ஆம் திகதி டயஸ் கானெல் முதலாவது உப ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டபோது பாராளுமன்றக் கூட்டத்தில் பிரசன்னமாகியிருந்தார். இது அந்த நியமனத்துக்கான ஒரு அங்கீகாரமாக அமைந்தது. ■

***(ராய்ட்டர்ஸ்)***

---

***(கடைசிப் பக்கத்தொடர்ச்சி)***

- இன்று ஏற்பட்டுவரும் பூகோளமயமாக்கலும் இணையத்தின் எழுச்சியும் கல்வியில் ஏற்படுத்தும் தாக்கங்கள்
- கல்வி (அறிவு) வணிகமயமாகுதல் பற்றிய பிரச்சினைகள்
- தனியார் கல்வி நிலையங்களின் இலாப நோக்கச் செயற்பாடும் அதனால் தோன்றும் பிரச்சினைகளும்
- சமகாலக்கல்வியில் தொழில் வழங்குநர்களின் கரங்கள் உயர்ந்துள்ளமையால் ஏற்படும் பிரச்சினைகள். அதாவது தமக்கு வேண்டியவர்களைத் தெரிவு செய்துவிட்டு ஏனையவர்களை விலக்குவதால் அவர்கள் விரக்திக்குள்ளாகி சம நிலையற்ற மனிதர்களாக மாறுவதால் சமூகம் பாதிப்பிற்கு உள்ளாகின்றது.
- அனேகபாடசாலைகள் அளவு ரீதியான மாற்றங்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் பண்பு ரீதியான மாற்றங்களுக்குக் கொடுப்பதில்லை.
- இலங்கையில் எழுத்தறிவு மட்டம் உயர்ந்துள்ளது எனக்கூறப்பட்ட போதும் அங்கு பண்பு ரீதியான பலவீனங்களையும் குறைபாடுகளையும் கண்டு கொள்ளலாம்.
- தாய்மொழி தொடர்பாக பத்தாம் ஆண்டு மாணவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு
- ஆசிரியர்களின் கணினி அறிவு- மொத்த ஆசிரிய ஆளணியினரிடையே 2% மானவர்களே கணினி அறிவு உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர்.
- இவை எல்லாவற்றுக்கும் மேலாக அண்மையில் சுட்டிக்காட்டப்பட்ட பிரச்சினை, அரசு கல்விக்கான நிதி ஒதுக்கீட்டைக் குறைத்து விட்டது என்பதாகும். ■



ராஜாராம் பண்டா

சர்வதேச அரசியல்



# தென்கொரியாவின் புதிய ஜனாதிபதி எதிர்நோக்கும் சவால்கள்

**நாட்டின் தேசிய பாதுகாப்பு இலட்சியத்தையும் தனது குடும்பத்தின் பெயரையும் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்துகின்ற ஒரு விசுவாசமான மகளாக பார்க் கியுன் -ஹையை தென் கொரிய மக்கள் காண்கிறார்கள்**

புதிதாக தெரிவு செய்யப்பட்ட தென்கொரிய ஜனாதிபதி பார்க் கியுன் -ஹைய் கடந்த மாத இறுதியில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். முன்னாள் ஜனாதிபதி பார்க் ஷுங் ஹீயின் மூத்த பிள்ளையான 61 வயதான செல்வி பார்க் பாரிய சவால்களை எதிர்நோக்குகின்றார். உலகின் மிகவும் கடுமையான ஆணாதிக்க அரசியல் சமுதாயங்களில் ஒன்றுக்கு தலைமை தாங்கும் முதலாவது பெண்மணியாக விளங்கும் அவர், நீண்டகாலம் ஆட்சிசெய்த ஒரு சர்வாதிகாரியான தந்தையாரின் சர்ச்சைக்குரிய மரபைச் சமாளிக்க வேண்டியவராக இருக்கிறார். தந்தையார் எதிரணியை மிகக் கொடூரமாக ஒடுக்கியவர் என்ற அபகீர்த்தியைப் பெற்ற போதிலும் தென்கொரியாவின் பொருளாதார அதிசயத்தின் உந்து சக்தியாக விளங்கியவர் என்று மதிக்கப்படுகிறார்.

அதிகரித்துவரும் பிராந்தியப் பதற்றம் மற்றும் நிதித்துறை நெருக்கடிக்கு மத்தியில் தனது நாட்டை பாதுகாப்பானதாகவும் சுபிட்சம் மிகுந்ததாகவும் வைத்திருக்க வேண்டிய கடுமையான பணியொன்றையும் செல்வி பார்க் எதிர்நோக்குகிறார். இந்தப் பணியில் அவர் தோல்வி காண்பாரேயானால், மன்னிக்கும் சுபாவத்தைக் கொண்டிராதது என்று பெயரெடுத்த ஒரு அரசியல் கலாசாரத்துடன் பொருந்த வேண்டியிருக்கும். செல்வி பார்க்கிற்கு முன்னர் தென்கொரியாவின் அதிகாரத்திலிருந்த (ஜனநாயக ரீதியில் மக்களினால் தெரிவுசெய்யப்பட்டிருந்த) 4 ஜனாதிபதிகளில் எவருமே மக்கள் மத்தியில் செல்வாக்குடன் பதவியிலிருந்து இறங்கிச்செல்லவில்லை என்ற உண்மையும் அவரின் முன்னால் விரிந்து கிடக்கிறது. தான் பதவியிலிருந்து விலகிச் செல்லும் போது அந்த ஜனாதிபதிகளினதை ஒத்த மரபை விட்டுச் செல்லக்கூடாது என்பதில் செல்வி பார்க் கவனமாகயிருப்பார் என்பதில் சந்தேகமில்லை. அவரது அரசியல் உள்ளூரம் கடுமையான சோதனைக் குட்படுத்தப்படும் என்பதிலும் சந்தேகமில்லை. ஆனால் அவர் சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடியதான சூழ்நிலைகளை வேண்டி நிற்பதற்கேற்ப தன்னைத் தயார் செய்துகொள்வார் என்று நம்பலாம்.

உள்நாட்டு அரசியல் அரங்கில் இந்த ஆற்றல்களை செல்வி பார்க் ஏற்கனவே வெளிக்காட்டியிருக்கிறார். கிராண்ட் நஷனலிஸ்ட் கட்சி என்று முதலில் அறியப்பட்ட ஆளும் சீனூரி கட்சியை எதிராளிகளின் கடுமையான போட்டிக்கு மத்தியில் சாமர்த்தியமாக வழிநடத்தி அதன் தலைமைப்பதவிக்கு உயர்ந்தவர் இவர். பார்க்கின் கட்சி மோசமான ஊழல்களில் சிக்கியதை அடுத்து எதிர்க்கட்சியினர் அந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு ஏற்பட்ட போது தேர்தல்களில் அதிர்ச்சி தரக்கூடிய வெற்றிகளை அடைவதற்கு கடுமையாக அவர் பாடுபட்டார். இதனால் தொடர்ந்தும் பழைமைவாதிகள் அதிகாரத்தை தக்க வைக்கக்கூடியதாய் இருந்தது.

செல்வி பார்க் மிகவும் நெருக்கடியான சிறுபராயத்தைக் கொண்டவர். தந்தையார் 1979 ஒக்டோபரில் அவரது சொந்த புலனாய்வுப் பிரிவுத் தலைவரினாலேயே கொலை செய்யப்பட்டார். அதற்கு 4 வருடங்கள் முன்ன தாக தாயார் வடகொரிய ஆதரவு துப்பாக்கி மனிதனால் கொல்லப்பட்டார். பார்க் ஒருபோதும் திருமணம் செய்யவில்லை. நாட்டின் தேசிய பாதுகாப்பு இலட்சியத்தையும் தனது குடும்பத்தின் பெயரையும் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்துகின்ற ஒரு விசுவாசமான மகளாக பார்க்கை தென்கொரிய மக்கள் காண்கிறார்கள். அவர் ஒரு துணிச்சலான பெண்மணி. தந்தையார் கொல்லப்பட்ட போது இந்த மகள் அழவில்லை. ஆனால் எல்லையோரத்தில் நிலைவரங்கள் நன்றாக இருக்கின்றனவா என்று தான் கேட்டார். தனது குடும்பத்திற்கு இழப்பு ஏற்பட்டாலும் கூட நாட்டின் பாதுகாப்பே அதியுயர்வானது என்று கருதியதினால்தான் அந்தக் கேள்வியை அந்தச் சந்தர்ப்பத்தில் பார்க் கேட்டார். இது இந்தப் பெண்மணியின் வல்லமையைப் பறைசாற்றுகிறது.

பார்க் ஷுங் ஹீ ஒரு கடுமையான கம்யூனிஸ்ட் விரோதி. சியோலில் உள்ள ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ வாசஸ்தலமான நீல மாளிகையைத் தாக்குவதற்கு வடகொரியத் தலைவர் கிம் இல் சுங் 31 கொமாண்டர்களை அனுப்பிய போது அவர் கொலை முயற்சியில் இருந்து உயிர் தப்பினார். வடகொரிய அரசின் ஸ்தாபகரின் பேரன் கிம் யொங் உன் அந்த நாட்டின் தலைவராக இருக்கிறார். பொருளாதார ரீதியில் செழித்திருக்கும் தென்கொரியாவிடம் இழந்த செல்வாக்கை மீட்டெடுக்கும் நோக்கில் அவர் தனது நாட்டை அணுவாயுத நாடாக்கும் முயற்சிகளில் இறங்கியிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

சிறுமியாக தான் வாழ்ந்த நீல மாளிகைக்கு செல்வி பார்க் மீண்டும் வந்திருக்கும் இச்சந்தர்ப்பம் அவரைப் பொறுத்தவரை ஒரு குதூகலிப்புக்குரியதேயாகும். அவரது தந்தையாருக்கு விசுவாசமான பழைய தென்கொரிய முதியவர்களுக்கும் கூட இது மகிழ்ச்சிக்குரியது. தந்தையார் 18 வருட காலம் தென்கொரியாவை இரும்புக் கரம் கொண்டு ஆட்சிசெய்தவர். அவரது ஆட்சிக்காலத்தில் நாடு ஜனநாயகத்திற்காகப் போராடியது. ஆனால் முன்னென்றுமில்லாத பொருளாதார வளர்ச்சியைக் கண்

டது. செல்வி பார்க் தனது 5 வருட பதவிக்காலத்தில் தந்தையார் காலத்தைய பொருளாதார வளர்ச்சியை மீண்டும் ஏற்படுத்திக்காட்டுவது என்பது சிக்கலாக இருக்கக்கூடும்.

ஆனால் வெளிப்படையாகப் பேசுவதற்கு அஞ்சாத இளம் தென்கொரியர்கள் மற்றும் தாராள சிந்தையுடைய தென்கொரியர்களிடமிருந்து கடுமையான விசனங்களை செல்வி பார்க் எதிர்நோக்கவேண்டி ஏற்படலாம். தான் பின்பற்றக்கூடிய முன்மாதிரியானவராக பிரிட்டனின் முதலாவது எலிசபெத் மகாராணியை செல்வி பார்க் குறிப்பிட்டபோது மேற்குறிப்பிட்ட இந்தப் பிரிவினர் அவரின் தேர்தல் வெற்றியை பழைய காலத்திற்கு திரும்பும் ஒரு நிகழ்வு என்று வர்ணித்தனர். தந்தையாரின் காலத்தில் இருந்து குடும்பத்தின் ஆதிக்கத்தினால் தொழில் நிறுவனங்களில் மட்டுமீறிய செல்வாக்கு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதற்கான விதைகள் தூவப்படுகின்றன என்றும் இந்தப் பிரிவினர் வாதிட்டனர்.

2002ஆம் ஆண்டில் வடகொரிய தலைநகர் யொங்யாங்கிற்கு மேற்கொண்ட விஜயத்தின் போது செல்வி பார்க் அன்றைய வடகொரியத் தலைவரான கிம் யொங் - இல்லுடன் பாலியல் உறவு வைத்துக்கொண்டதாகக் கூறுவதற்கு 76 வயதான கிறிஸ்தவ போதகர் ஒருவர் தயங்கவில்லை. இந்தப் போதகர் அத்தகைய இழிவான குற்றச்சாட்டை முன்வைத்ததற்காக கைதுசெய்யப்பட்ட போதிலும், பார்க் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால் மேலும் கடுமையான குற்றச்சாட்டுகளுக்கு முகம்கொடுக்க தன்னை தயார்படுத்த வேண்டியிருக்கும்.

நாட்டு மக்களுக்கு ஆற்றிய முதலாவது உரையில் பார்க் தனது தந்தையார் காலத்தைய பொருளாதார சுபீட்சத்தை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்று அறைகூவல் விடுத்ததுடன், வடகொரியா அதன் அணுவாயுதத் திட்டத்தை கைவிடவேண்டும் என்று வலியுறுத்தினார். பார்க் ஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்வதற்கு இருவாரங்களுக்கு முன்பதாக வடகொரியா நிலத்தின் அடியில் அணுச்சோதனை ஒன்றை செய்து பார்த்தது. வடகொரியாவுடனான 5 வருட கால இராஜதந்திர மௌனத்தை முடிவிற்கு கொண்டுவருவதற்கு தென்கொரியாவை அணுகப்போவதாக தேர்தல் காலத்தில் பார்க் அளித்த உறுதிமொழிக்கு ஒரு பரீட்சையாக இந்த அணுவெடிப்புச் சோதனை அமைந்திருக்கிறது. அத்துடன் தனக்கு முன்னர் ஜனாதிபதியாக இருந்த தனது கட்சியைச் சேர்ந்த லீ மியுங் - பாக்கின் ஆட்சியின் கீழ் கொரியக் குடாவில் அதிகரித்திருந்த பதற்ற நிலையை ஒரு முடிவிற்கு கொண்டுவர முயற்சிக்கப்போவதாகவும் செல்வி பார்க் நாட்டு மக்களிடம் கூறியிருந்தார்.

தனது தந்தையாரின் யுகத்தை நினைவுமீட்டிப் பார்க்கும் செல்வி பார்க் 'கான் ஆற்றின் மீது இரண்டாவது அதிசயத்தை' செய்துகாட்ட முன்வருமாறு அழைப்பு விடுத்தார். 1950 - 1953 கொரிய யுத்தத்தின் இடிபாடுகளில் இருந்து தென்கொரியாவை ஒரு கைத்தொழில்மய நாடாக மாற்றியமைத்தவராக பார்க்கின் தந்தையாரை வடகொரியர்கள் நினைவு கூருகிறார்கள். ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தின் இயந்திரமாக சம்சுங்,ஹியுன்டாய் போன்ற தனது குடும்பத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தொழில் நிறுவனங்களை தந்தையார் வளர்த்தெடுத்தார். இந்தக் கம்பனிகள் உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பெருமுதலாளித்துவ நிறுவனங்களாக வளர்ச்சிகண்டன. இப்போது அவரின் மகள் நாட்டின் பொருளாதாரத்துக்கு இளமையூட்டப்போவதாக சூளுரைத்திருப்பதைக் காண்கிறோம்.

எவ்வாறெனினும் அவர் விரிவடைந்து வருகின்ற பொருளாதார சமத்துவமின்மையையும் சிறிய தொழில் முயற்சிகளை வளர விடாமல் செய்து பெருமுதலாளித்துவ நிறுவனங்களின் ஆதிக்கத்தை விரிவுபடுத்தும் போக்கையும் எதிர்த்துச் சமாளிக்க வேண்டியிருக்கும். அதனால் அவரின் இரண்டாவது கான் ஆற்று அதிசயம் பொருளாதார ஜனநாயக மயமாக்கலை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டியிருக்கிறது.

2012 டிசம்பரில் வடகொரியா ஒரு செய்மதியை விண்ணுக்கு வெற்றிகரமாக ஏவியதை அடுத்தும் பிறகு கடந்த மாதம் 12 ஆம் திகதி அணுப்பரிசோதனையை செய்துபார்த்ததையடுத்தும் பிராந்தியத்தில் பதற்றநிலை அதிகரித்தது. அத்துடன் வாஷிங்டனாலும் அதன் நேச அணிகளினாலும் ஆறு தரப்பு பேச்சுவார்த்தைகளினூடாக முன்னெடுக்கப்பட்ட தொடர்ச்சியான முயற்சிகள் தோல்வி கண்டுவிட்டன என்பதையும் இந்த நிகழ்வுகள் உணர்த்தி நிற்கின்றன. வடகொரியாவும் அணுவாயுத அபிலாசைகளை கட்டுப்படுத்துவதற்கு வேறுவழிகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய முயற்சிகளும் கூட தோல்வியையே தழுவியிருப்பதாக கருதவேண்டியிருக்கிறது. செல்வி பார்க் பதவிப் பிரமாணம் செய்வதற்கு முன்பதாக அணுச்சோதனையை செய்வதற்கு நேரத்தை தெரிவு செய்த வடகொரிய இளம் தலைவரின் செயல் அவரது பேரம் பேசும் நிலைப்பாட்டை வலுப்படுத்தியிருப்பதாக அவதானிகள் கருதுகிறார்கள்.

வடகொரியாவின் ஆத்திரமூட்டல்களுக்கு எதிராக வலிமையான பாதுகாப்பு நிலைப்பாட்டை செல்வி பார்க் எடுப்பது சாத்தியம் என்கிற அதே வேளை, தனக்கு முன்னர் பதவியில் இருந்தவரால் வளர்க்கப்பட்ட பகைமையைத் தணிப்பதற்கும் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கும் அவர் கதவுகளைத் திறந்து வைத்திருக்கக் கூடும். ■

***(கலாநிதி ராஜாராம் பண்டா புதுடில்லியிலுள்ள பாதுகாப்பு கற்கைகள் மற்றும் ஆய்வுகளுக்கான நிறுவனத்தின் முன்னாள் சிரேஷ்ட ஆய்வாளர், கிழக்கு ஆசிய விவகாரங்கள் நிபுணத்துவம் வாய்ந்தவர்)***

# இத்தாலியில் முட்டுக்கட்டை

**யூரோ வலய பொருளாதார மீட்சி நம்பிக்கைகள் சிதைவு**


இத்தாலியில் அண்மையில் நடைபெற்ற பொதுத்தேர்தல் பாரதூரமான முட்டுக் கட்டை நிலையைத் தோற்றுவித்திருக்கிறது. அது யூரோ வலய நாடுகளில் அண்மைய எதிர் காலத்தில் பொருளாதார மீட்சி ஏற்படும் என்ற நம்பிக்கைகளைச் சிதறடித்திருக்கிறது. தேர்தல் முடிவுகள் முற்றிலும் எதிர்பாராத வகையில் அமைந் திருக்கின்றன. ஐரோப்பிய ஒன்றியத் தின் ஏனைய அரசாங்கங்களுக்கு சிலவகை யான நம்பிக்கை கொடுத்துவந்த பிரதமர் மரியோ மொன்ரியின் மத்திய போக்கு அர சாங்கத்தின் கொள்கைகளையே இத்தாலியின் அடுத்த அரசாங்கமும் தொடர்ந்து பின்பற்றும் என்று நம்பப்பட்ட நிலையில், சூழ்நிலை இவ் வாறாக மாறியிருக்கிறது. அரசியல் உறுதிப்பா டின்மை என்பது இத்தாலிக்கு ஒன்றும் புதிய தல்ல. கடந்த பல தசாப்தங்களில் பல அரசாங்கங்கள் வந்துபோயிருக் கின்றன.

ஆனால், தற்போது வந்திருப்பதைப்போன்று எந்தவொரு கட்சிக்கும் அறுதிப்பெரும் பான்மை இல்லாத 'தொங்கு பாராளுமன்றம்' முன்னொருபோதும் அமைந்ததில்லை. அர சாங்கத்தை அமைப்பதென்பதே மிகவும் பாரதூ ரமான சவாலாகப் போயிருக்கிறது. ஒரு உருப் படியான அரசாங்கத்தை அமைப்பதற்கு பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் பெரும் பான்மை அவசியமானதாகும். ஆனால், எந்த வொரு கட்சியுமோ அல்லது கூட்டணியுமோ இப்போது அத்தகைய பெரும்பான்மையைப் பெறவில்லை.

லுயிகி பெர்சானி தலைமையிலான மத்திய இடது ஜனநாயகக் கட்சி கூட்டணியே ஆட்சிய மைக்கக்கூடிய பெரும்பான்மையைப் பெறும் என்று தேர்தலுக்கு முன்னர் பரவலாக எதிர் பார்க்கப்பட்டது. ஆனால், அந்த கூட்டணிக்கு 29.54 % வாக்குகள் மாத்திரமே கிடைத்திருக்கி றது. அதற்கு பாராளுமன்றத்தின் கீழ் சபையில் மாத்திரம் ஒரு பெரும்பான்மை கிடைத்திருக்கி றது.

பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனியின் மத் திய - வலது மக்கள் சுதந்திரக் கூட்டணி 29.18% வாக்குகளைப் பெற்றிருக்கிறது. அதற்கு பாரா ளுமன்றத்தின் மேல் சபையில் ஒரு பெரும் பான்மை கிடைத்திருக்கக்கூடும். நகைச்சுவை


பிரதமர் மரியோ மொன்ரி


லுயிகி பெர்சானி



சில்வியோ பெர்லுஸ்கோனி


பெப்பே கிரில்லோ

நடிகர் பெப்பே கிரில்லோ தலைமையிலான ஐந்து நட்சத்திர இயக்கம் என்ற ஒரு புதிய கட்சி எவருமே எதிர்பார்க்காத அளவிற்கு தேர்தலில் சிறப்பான செயற்பாட்டை வெளிக்காட்டியிருக் கிறது. அதற்கு 25.5% வாக்குகள் கிடைத்திருக் கின்றன. இந்தக் கட்சி தற்போதைய பொருளா தார தாழ்வு நிலையில் இருந்து இத்தாலியை மீட்டெடுப்பதற்கு அத்தியாவசியமானதென்று கருதப்படுகின்ற சிக்கன நடவடிக்கைகளுக்கு எதிரானது. ஐரோப்பிய ஒன்றியத் தலைமைத் துவத்தினால் விதந்துரைக்கப்பட்டு மரியோ மொன்ரி அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத் தப்பட்ட சிக்கனக் கொள்கைகளுக்கு எதிராக மக்கள் மத்தியில் உருவாகியிருக்கும் வெறுப்பு ணர்வை புதிய கட்சி தனக்கு அனுகூலமாக பயன்படுத்திக் கொண்டது.

மூன்று பிரதான அரசியல் அணிகளினதும் வாக்குறுதிகளிலும் கொள்கைகளிலும் காணப் படக்கூடியதாக இருக்கின்ற பரந்த வேறுபாடு களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது ஒரு அரசாங்கமொன்று அமைக்கப்படு வது மிகவும் கஷ்டமானதாக இருக்கும் என்று தெரிகிறது.

தேர்தல் மூலம் இத்தாலிய வாக்காளர்கள் வெளிப்படுத்தியிருக்கும் செய்தி சிக்கன நட வடிக்கைகளுக்கு எதிரானது என்று கருதப்படு வதால் புதிய அரசாங்கத்தினால் எந்தவொரு பயனுறுதியுடைய சீர்திருத்த நடவடிக்கைக ளையும் மேற்கொள்ள இயலாமல் போகும். ஐரோப்பாவில் மூன்றாவது பெரிய பொருளா தாரத்தை இத்தாலி கொண்டிருக்கிறது. பொரு ளாதாரச் சரிவு நிலையை இத்தாலியினால் தடுத்து நிறுத்த முடியாவிட்டால் ஐரோப்பா மீதும் அதன் தாக்கங்கள் பாரதூரமானவையாக இருக்கும். இது மறுபுறத்தில் உலக பொருளா தாரத்தில் தாக்கத்தைக் கொண்டிருக்கும். தேர் தல் முடிவுகள் குறித்து உலகச்சந்தைகளின் பிரதிபலிப்புகள் யூரோ வலய மீட்சி குறித்து நம்பிக்கையின்மையையே அதிகரித்த வகை யில் வெளிக்காட்டியிருக்கின்றன. இடர் நிலை யில் இருந்து விடுபடுவதற்கு மார்க்கம் இல்லாத நிலையில் இந்த நம்பிக்கையின்மை மேலும் அதிகரிக்கும் சூழ்நிலையே காணப்படுகிறது. ■



# மேதாவியின் மின்னஞ்சல்



## ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு இஸ்லாமியச் சகோதரர்களுக்கு,

பேரன்புடையீர்,
வணக்கம்.
நலம் வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.
நலம் வேண்டுவது - இத்தேசத்தில் உங்கள் நல்வாழ்வு நிலைப்பதற்காக,
ஈழத்தமிழினத்தின் இன்னல்கள், இன்று இஸ்லாமியர்களையும் எட்டிப்பார்க்கத் தொடங்கிவிட்டன.
மதத்தின் பெயரால் விளைந்த ஒற்றுமையாலும்,
இயற்கை தந்த எரிபொருள் கொடையினாலும்,
உலகளாவி எழுச்சி பெற்றிருந்த உங்கள் இனத்தின் மேல்,
யார் கண்பட்டதோ தெரியவில்லை. இடர் தொடங்கிற்று.
செல்வமிகுதியால் செருக்குற்று,
ஆசையைப் பேராசையாக்கி,
உட்பகை விளைக்க அரேபியத் தலைவர்கள் ஆயத்தம் செய்ய,
அவர்களின் பெற்றோலியக் கிணறுகள் மேல் பதிந்திருந்த 'கழுகு'க் கண்கள்,
அவ் உட்பகையை உணர்ந்து உட்புகுந்து மித்திர பேத விளையாட்டை ஆரம்பித்தன.
இஸ்லாமியர்களிடம் இருந்த செல்வமும், மதத்தின் பெயரால் விளைந்திருந்த மனஉறுதியும் ஒன்றுபட்டால்,
உலகம் இஸ்லாத்தின் கைவயப்பட்டுவிடும் என்பதை உணர்ந்த எதிரிகள்,
தம் நலம் நோக்கி உங்கள் பலம் குறைக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தனர்.
உங்கள் இனத்தாரால் சூழப்பட்டிருந்த இஸ்ரேலைத் தம் செல்லக் குழந்தையாக்கி,
அதனைப் பலம் பெறச் செய்து, அதனூடு அரபுத்தேசத்தாரின் கண்களில் விரல்விட்டு ஆட்டத்தொடங்கினர்.
ஒற்றுமையோடு அக்காலத்தில் இஸ்ரேலின் மேல் அரபுத்தேசத்தவர் செய்த போர் முயற்சி,
வல்லரசுகளின் பின்புல வலிமையால் தோற்கடிக்கப்பட்டது.
சூழ இருந்த அரபுத்தேசங்களை தனித்து இருந்து இஸ்ரேல் மிரட்ட,
அதனைச் சமப்படுத்தும் முயற்சியில்,
அரபுத்தலைவர்களில் சிலர் அமெரிக்காவின் காலில் விழுந்தனர்.
அவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி, அத்தேசங்களின் பெற்றோலியப் பலத்தை
அமெரிக்கா மெல்ல உறிஞ்சத்தொடங்கியது.

அது மட்டுமல்லாமல் அரேபிய நாடுகளுக்குள் மித்திரபேதம் செய்வித்து,
அவற்றை ஒன்றோடொன்று பகைக்கும்படியும் செய்தது.
எதிர்ப்புத்தெரிவித்த தேசங்களின் மேல், வஞ்சக வலை வீசிப் போரால் அவற்றை வீழ்த்தியது.
ஆண்மையோடு தனித்துவம் பேணிய ஈராக் அதிபர் சதாம் ஹுசைன், லிபியத் தலைவர் கடாபி போன்றோர்
அநியாயமாய்ப் படுகொலை செய்யப்பட்டு வீழ்ந்தனர்.
சுயநலம் நோக்கி, பிரிந்து நின்ற இனநாடுகள் பார்த்திருக்க,
அவர்தம் உடன்பாட்டோடு இக்காரியங்கள் அரங்கேறின.
வல்லரசுப்பலத்தை வீழ்த்த வஞ்சகமே வழியென்று முடிவு செய்த,
சில இஸ்லாமிய அணிகள், தீவிரவாதத்தைத் தம் கையில் எடுத்தனர்.
தம் தேவை நோக்கி அக்குழுக்களை வளர்க்கவும், தேய்க்கவும் வழி செய்த வல்லரசுகள்,
தம் கொடூர முகங்களை ஜனநாயக முகமூடி கொண்டு மறைத்து விட்டு,
இன்று தம் வஞ்சகத்தால் இஸ்லாமியச் சகோதரர்களை, உலகத் தீவிரவாதிகளாய் வர்ணித்து
உலகை நம்பச் செய்துள்ளன.
இச் செய்தி உலகளாவி 'விஸ்வரூபம்' எடுத்து,
இஸ்லாத்தின் மேலும்,
இஸ்லாமியரின் மேலும் தீராப் பழி சுமத்தி நிற்கிறது.
இவை முடிந்த கதைகள்.

இலங்கையைப் பொறுத்தவரை,
இஸ்லாமியர்களும், தமிழர்களும் சகோதரர்களாய்

ஒன்றுபட்டு வாழ்ந்ததே வரலாறு.
'தமிழ் எங்கள் மொழி, இஸ்லாம் எங்கள் வழி' என,
இஸ்லாமியர் தம் கொள்கையில் தெளிவுபட்டிருந்தனர்.
ஆரம்பகாலத்தில் தமிழ்க் கட்சிகளில்
இஸ்லாமியர்களின் பலமும், பங்கும்
நிறையவே இருந்தன.
தந்தை செல்வாவின் தோளோடு தோள் நின்றவர்களில்,
முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின்
ஸ்தாபகரான,
அமரர் அஷ்ரப் அவர்களும் ஒருவராய் இருந்தார்.
நம் தேசத்தில், சில தசாப்தங்களின் முன்னர்,
சிறுபான்மை இனத்தின் உரிமை வேண்டித்
தமிழர்கள் போராடத் தொடங்கினர்.
உலகளாவிய இஸ்லாமியரின் போராட்டத்தைப் போல
வே, ஈழத்தமிழர் தம் போராட்டத்தையும்,
பேரினவாதிகள் வஞ்சகத்தாலும், வலிமையாலும்
அடக்க முயல, இங்கும் தமிழ்க் குழுக்கள்,
வேறுவழியின்றி தீவிரவாதத்தைத் தம் ஆயுதமாய்க்
கொள்ளத்தொடங்கின.
இன்று உரிமை காக்க இஸ்லாமியர் தொடங்கிய
தீவிரவாதப் போரினை, முழுமனதாய் அங்கீகரிக்கும்
நீங்கள்,
அன்று தமிழர் உரிமைக்காய்த் தொடங்கிய
தீவிரவாதப் போரினை, முழுமனதாய்
அங்கீகரிக்கத் தயங்கினீர்கள்.
போர் முறை பற்றி மட்டுமல்லாமல்,
போர் நோக்கம் பற்றியும் உங்களில்
பலபேர் மாறுபட்டார்கள்.
இம் மாறுபாட்டில் ஏற்பட்ட கசப்பு மெல்ல மெல்ல
வளர்ந்து,
எதிரிகளால் மேலும் வளர்க்கப்பட்டு,
பெரும் பகையாய் விரிந்தது.
பின்னர் புலிகள் எடுத்த சில முரட்டுத்தனமான
முடிவுகளால்,
'புட்டும், தேங்காய்ப்பூவும்' என்று உறவிறுக்கம்
உரைக்கப்பட்ட இவ்விரு இனமும்,
நிரந்தரமாய்ப் பிரிந்து போனது வரலாற்றுத் துயரம்.
இப்பிரிவினையைப் பேரினவாதிகள்
நன்கு பயன்படுத்திக்கொண்டனர்.

உட்பகையும், மித்திர பேதமும் ஒன்று சேர்ந்து
பிளவைப் பெருப்பிக்க,
அப்பிளவு நீங்கி ஒருமை நிகழாமல் சுயநல
அரசியல்வாதிகள் பார்த்துக்கொள்ள,
இதயத்தால் ஒன்றுபட்டிருந்த இரு இனங்களும்
பகையால் இரண்டுபட்டன.
பேரினவாதிகள் தமிழர் மேல் கடும் போர்
தொடுத்தபோதும்,
அப்போரில் இலட்சக்கணக்கான தமிழர்கள்
அழிக்கப்பட்ட போதும்,
இன்று வல்லரசுகளுக்கு ஆட்பட்டு உலக நாடுகள் பல,
இஸ்லாமியர்களைத் தீவிரவாதிகளாய்ப் பார்த்து
நிற்பதைப் போல,
அன்று தமிழர்கள் விடயத்தில் நீங்களும் நடந்து
கொண்டீர்கள்.
போரின் முடிவில் புலிகளோடு அப்பாவித் தமிழர்கள்
ஒருசேர அழிக்கப்பட்டார்கள்,
ஒரு சிறு போராளிக் குழுவின் தவறை மனதில் வைத்து
நீண்டகாலம் உறவாய் இருந்த
தமிழரைத் தீர்க்க தரிசனமின்றிப் பகைத்தீர்கள்.

சிறுபான்மையினரின் உரிமைகள் பறிக்கப்பட்ட போது,
நாளை நமக்கும் இதுதானே கதி என்பதை,
உங்கள் தலைவர்கள் ஏனோ உணரத் தவறினர்.
சிறுபான்மையினருக்குச் சிறுபான்மையினர்தான்
துணை எனும் உண்மையை மறந்து,
அவர்கள் பேரின அரசுகளின் கைப்பொம்மை
ஆனார்கள்.
கண்முன்னே நடந்த தமிழர் படுகொலைகளை,
உலகம் கண்டிக்க முற்பட்ட போது,
தமது மத உறவால் இஸ்லாமிய நாடுகளைத்
தமிழர்க்குச் சார்பாக,
வாக்களிக்க விடாமல் தடுப்பதில்
வெற்றியும் கண்டார்கள்.
தமிழர்க்கு எதிராக இஸ்லாமிய நாடுகளைத்
திரட்டிய அத்தலைவர்கள்,
பாவம்! அதே நாடுகளிடம் தம் செல்வாக்கைச்
செலுத்தி,
ஏழை இஸ்லாமியப் பெண்ணான ரிஸானாவின்
உயிர் காக்க முடியாமல் பின்னர்
கைபிசைந்து நின்றார்கள்.
உறவுகளை எதிர்ப்பதில் வெற்றி கண்டவர்கள்,
உறவினைக் காப்பதில் தோல்வி கண்டார்கள்.
அங்ஙனம் இயங்கிய அத்தலைவர்களின் செயலால்,
உங்களில் பலரே மனம் நொந்து போயினர்.

கிழக்கு மாகாணத் தேர்தலில் தமிழர்கள் ஆட்சி
அமைக்கும் வாய்ப்பு வந்தது.
'பழைமை மறந்து ஒன்றிணைவோம்' என,
கை நீட்டிக் கூட்டமைப்பினர் உறவை யாசித்து வர,
தமிழர்களுடன் ஒன்றிணைந்து இயங்கப் போவது
போல், அறிக்கைகள் பல விட்டு,
பின் அவர்தம் உறவைக் கையுதறி நிராகரித்து,
ஆளுங்கட்சியுடன் இணைந்து அரசமைத்தார்கள்
உங்கள் தலைவர்கள்.
இப்படியெல்லாம் தீர்க்கதரிசனமற்றுச் செயல்பட்ட,
அத்தலைவர்களின் குளறுபடியால்,
இன்று இஸ்லாமியர்களின் அடிப்படை உரிமைகளே
ஆட்டங்காணத் தொடங்கியிருக்கின்றன.

புலிகளின் அழிவோடு தமிழர்களைச் செல்லாக்கா
சாக்கி விட்டதாய், முடிவு செய்த பேரினவாதப் பூதம்,

இன்று இஸ்லாமியர்களை நோக்கித் தம் கொடிய
கரத்தை நீட்டத் தொடங்கியிருக்கிறது.
பொது பல சேனா அமைப்பு,
இஸ்லாமியர்களுக்கெதிரான தமது முதற் செயற்பாடாக,
'ஹலால்' பிரச்சினையை இன்று
கையிலெடுத்திருக்கிறது.
அப்பிரச்சினையில் சரி, பிழை எதுவாகவும்
இருக்கட்டும்,
கவனிக்கப்படவேண்டிய முக்கியமான விடயம்,
இஸ்லாமியர்களுக்கும் இறகு வெட்டத்
தொடங்கப்பட்டுவிட்டதென்பது தான்.
சலுகைகளில் மயங்கியிருந்த உங்களில் பலர்,
இன்று தான் உரிமையின் அவசியத்தை
உணரத்தொடங்கியிருக்கின்றனர்.
உங்களின் முக்கிய கட்சி அங்கம் வகிக்கும்
ஆட்சித்தலைவரிடம்,
உங்கள் மதத்தலைவர்கள் சென்று முறையிட்ட பின்னர்,
'ஜனாதிபதியிடம் கோள்மூட்டுவதை விட்டுவிட்டு,
எங்களுடன் பேச வாருங்கள்' என்று,
மறுநாளே அவர்கள் துணிந்து அறிக்கை விடுகின்றனர்.
பள்ளிவாசல்கள் பல தாக்கப்பட்டதாய் வந்த
செய்தியை முன் வைத்து,
எதிர்க்கட்சித்தலைவர் பாராளுமன்றத்தில் வாதிட,
உங்கள் அமைச்சர்கள் வாய் மூடி
மௌனித்திருக்கின்றனர்.
இஸ்லாத்திற்கு வழங்கப்படும் சலுகைகள்,
சனத்தொகை விகிதாசாரத்தில்
இஸ்லாமியர்களின் வளர்ச்சி,
நாட்டின் பொருளாதாரத்தில் அவர்களின் பலம்,
என்பவற்றை முன் நிறுத்தி,
இன்று இஸ்லாமியர்களுக்கெதிரான குரல்,
பேரினவாதிகளிடமிருந்து மெல்ல மெல்ல
ஓங்கி ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது.
இந்தியாவிற்கு எதிராகச் சீனச் சார்புபற்றி இயங்கத்
தொடங்கியிருக்கும் அரசை,
அமெரிக்க வல்லரசு பலவிதத்தாலும்
நெருக்கத்தொடங்கியிருக்கும் இந்நிலையில்,
உலக அரங்கில் தத்தளிக்கும் இலங்கை அரசு,
அமெரிக்கா தன் முதல் எதிரியாய் இன்று
இனங்காட்டி நிற்கும் இஸ்லாமியர்களை,
களப்பலியாக்கி அமெரிக்க உறவை நீடிக்க
முன்வராது என்பதற்கான முகாந்திரம் எதனையும்,
எவரும் இன்று துணிந்து முன் வைக்க இயலாத நிலை.
இஸ்லாத்திற்கெதிரான செயல்பாடுகள்
தொடங்கிவிட்ட இந்நிலையிலும்,
உங்கள் தலைவர்கள் அரசின் மௌன சாட்சிகளாய்
தம் பதவிகளையும், சலுகைகளையும் பாதுகாத்தபடி,
இனம் பற்றிய எவ்விதக் கவலையுமின்றி
இருக்கின்றனர்.
ஒருவேளை இம் மௌனத்திற்கும்
அவர்கள் 'இராஜதந்திர முலாம்' பூசக்கூடும்.
இப்படித்தான் அன்று சுயநலத்தலைவர்களின்
வார்த்தைகளை நம்பி, தமிழர்கள் எண்ணிலா
இடருற்றனர்.
இன்று கால சக்கரத்தில் நீங்கள் ஏற்றப்பட்டுள்ளீர்கள்.

அன்புச் சகோதரர்களே,
தமிழர் அடைந்த துன்பங்களை நீங்களும்
அடைந்து விடக்கூடாது.
சுயநலத் தலைவர்கள் தம் குரலையே
இனத்தின் குரலாய் அறிவிக்க,
மௌனித்து அதனை அங்கீகரித்ததால்,
பேரிழப்புகளைச் சந்தித்துத் தமிழர்கள்
இன்று செயலற்று நிற்கிறார்கள்.
அதுபோல் நீங்களும் நின்று விடாமல்
பார்த்துக்கொள்ளுங்கள்.
தொன்று தொட்டு இம்மண்ணில் வாழ்ந்து வரும்
பெருமையால்,
இத்தேசத்தில் வாழ்வுரிமைகோரும்
தகுதி பெற்றவர்கள் நீங்கள்.
சலுகைகளுக்காக விலைபோன அரசியலை
முடித்துக்கொண்டு,
இனியேனும் உரிமைக்கான அரசியலை
தைரியத்துடன் ஆரம்பிக்க,
உங்கள் தலைவர்களைத் தூண்டுங்கள்.
'இனம் இனத்தையே சாரும்' எனும்
உண்மையை உணர்ந்து,
சிறுபான்மையினரோடு கைகோர்த்து வலிமை பெறும்
வழியைத் திறவுங்கள்.

மூவினமும் ஒன்றுபட்டு வாழ்ந்த மண் இது.
இன்று பகை விதை விதைத்து அது வேறுபட்டுக்
கிடக்கிறது.
பகைக்காகத் தேசத்தை விற்கவும் தயாராக இன்று சில
தலைவர்கள்,
அவரவர் உரிமையை விட்டுக்கொடுக்காமல், அதே
நேரத்தில் உறவு பேணி ஒன்றுபட்டு வாழும் வாழ்வே,
இனி அனைத்து இன அரசியல் தலைமைகளின்,
வேரோட்டக் கொள்கையாய் அமையவேண்டும்.
கூடி வாழும் ஒவ்வொருவரும், மற்றவரின் உரி
மைகளை அங்கீகரிக்கும் மனநிலையைக் கொள்ள
வேண்டும்.
ஆயிரம் வேறுபாடுகள் இருந்தாலும், 'இம் மண் எமது'
எனும் உரிமையை எவரும் இழத்தலாகாது.
'ஆயிரம் உண்டிங்கு ஜாதி எனில் அந்நியர் வந்து புகல்
என்ன நீதி' என்ற பாரதியின் கவிதையை,
இலங்கையர் அனைவரும் தம் உளத்திருத்தத் தவறின்,
தமிழர், சிங்களவர், இஸ்லாமியர் என்றில்லாமல்,
அனைவரும் பேரிடர்களைச் சந்திக்கப் போவது நிஜம்.
உறவான இனங்கள் மோதிய போது விளைந்த
அழிவுகளையே தாங்கமுடியவில்லை.
உறவற்ற இனங்கள் வந்து இத்தேசத்தை மோதினால்
என்னாகும்?
இது பற்றி யாரும் சிந்திக்கிறார்கள் இல்லை.

மற்றவர்கள் உரிமையைப்
பறிப்பதிலேயே தம்
உரிமை நிலைப்பதாய்க்
கருதும்,
பேரினவாதிகளின் மனநிலை
சிறிதும் மாறவே இல்லை.
தேசிய கீதத்தை சிங்களத்
திலேயே பாடவேண்டும்
என்ற வலியுறுத்தல் போர்
முடிந்த கையோடு
புறப்பட்டது.
தேசிய கீதம் இசைக்கப்படும்
போது, ‘இது என் தேசம்’
எனும் உணர்வு வராத
பட்சத்தில்
அதனை, தமிழில்
இசைத்தால் என்ன?
சிங்களத்தில் இசைத்தால்
என்ன?
எண்ணத்தைச் சிதைத்து
வார்த்தைகளை
எதிர்பார்க்கிறார்கள்
என்றுதான் இப்புன்மை
தொலையுமோ தெரிய
வில்லை.
நாங்கள் பலியாகி விட்டோம்.
பலிக்களம் நோக்கி உங்களை
நகர்த்தத்
தொடங்கிவிட்டார்கள்.
தீர்க்கதரிசனமாய் சிந்தித்து
செயற்படாவிட்டால்,
நாளை உங்கள் கதியும் எங்
கள் கதிதான்.
அனைவரின் நலம் நோக்கி
யும் முதலில் சிற்றினங்கள்
ஒன்றுபடுவோம்.
பின்னர், பேரினத்தார்க்கு
அவர்தம் பிழை உணர்த்தி
ஒன்றுபட நேசக்கரம் நீட்டு
வோம்.
இவை, எதிர்காலம் பற்றிய
இனிய கனவுகள்.
இக்கனவுகள் நனவானால்
இத்தேசம் உருப்படும்.
அன்றேல் வேற்றெதிரிகளால்,
இந்து சமுத்திரம் மூவின
இரத்தத்தாலும்
சிவப்பாகப் போவது உறுதி.

**அன்புடன்**
**மேதாவி** ■



*(31ஆம் பக்கத்தொடர்ச்சி)*

3 வருடங்களுக்கும் 3 மாதங்களுக்கும் முன்னதாக சுதந்திரத்திற்கான மேடை என்ற அமைப்பு உருவாக்கப்பட்ட போது ‘மாற்றத்திற்கான உறுதிப்பாடு’ என்ற தலைப்பின் கீழ் 5 கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டன. ஐக்கியத்திற்கான கூட்டணி என்பதை எதிர்க்கட்சிகள் எவ்வாறு விளங்கிக்கொண்டுள்ளன என்பதிலேயே அடிப்படையான தவறு இருக்கிறது. அதுவே பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் ராஜபக்ஷ ஆட்சியை நீடித்து நிலைப்பதற்கு வசதியை செய்துகொடுக்கிறது.

பல கட்சிகளைக் கொண்ட கூட்டணி ஒன்றில் ஐக்கியம் என்பது தலைவர்களின் எண்ணிக்கையில் அல்ல தரத்திலேயே கணிக்கப்படுகிறது. மேடையில் அமர்ந்திருக்கக்கூடிய அரசியல் தலைவர்களின் எண்ணிக்கையிலோ அல்லது அவர்களினால் நிகழ்த்தப்படக்கூடிய உரத்த உரைகளிலோ ஒரு கூட்டணியின் தரம் தீர்மானிக்கப்படுவதில்லை. அரசியல் தரம் இல்லாத தலைவர்கள் பெருமளவு மேடையில் ஏறி அமர்ந்து விட்டால் கூட்ட அரங்கிற்கு பெருவாரியாக மக்கள் வந்து குவிவார்கள் என்றில்லை. மேடையில் இருக்கக்கூடிய தலைவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு கூட்டத்தில் கலந்துகொள்ளும் மக்கள் மத்தியில் ராஜபக்ஷ விரோத உணர்வு ஏற்பட உந்துதல் அளிக்குமென்று கருத முடியாது. ராஜபக்ஷ ஆட்சிக்கு மாற்றீடாக அமையக்கூடிய திட்டமாக சமூகத்தினால் எளிதாக நோக்கக்கூடிய ஒரு தெளிவான திட்டமே மாற்றத்திற்கு அவசியமாகும். அந்தத் திட்டத்தை செயல் உறுதிப்பாட்டுடன் முன்னெடுக்கக்கூடிய அங்கத்துவ அணிகளை கூட்டணி கொண்டிருக்க வேண்டும். இன்று முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியது ஐக்கிய தேசியக் கட்சியினால் சென்றடையக்கூடியதாக இருக்கும் தென்னிலங்கை வாக்காளர்கள் எத்தகைய தன்மையானவர்களாக இருக்கிறார்கள் என்பதேயாகும். ஆட்சிமுறையின் சகல அம்சங்களிலும் ராஜபக்ஷாக்களுக்கு வேறுபட்ட அணுகுமுறையைக் கொண்ட ஒரு அரசியலே இன்று தேவையாகும். எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பியக்கம் அதன் வடிவத்திலும் அதன் உள்ளடக்கத்திலும் ராஜபக்ஷ விரோதமானது என்று தென்பகுதியில் நோக்கப்படக்கூடியதாக இருக்க வேண்டும். இனவெறி எதிர்ப்புக் கொண்டதாகவும் ஜனநாயகச் சார்பானதாகவும் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டதாகவும் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பியக்கங்களின் உள்ளடக்கம் அமைந்திருக்க வேண்டும். தெல்லிப்பழையில் தமிழ் மக்களுக்காக விக்கிரமசிங்க உரையாற்றுகின்றார் என்றால் அதில் இருக்கக்கூடிய பன்முகத் தன்மையும் சகலரையும் அரவணைத்துச் செல்லும் போக்கும் அதே தொனியில் மஹரகமையிலும் கூட விளங்கிக் கொள்ளக்கூடியதாகவும் இருக்க வேண்டும். அத்தகைய ஒரு உண ர்வே ராஜபக்ஷக்களுக்கு மாற்றீடான ஒரு அரசியல் செயற்திட்டத்தை வகுப்பதற்கு உதவக்கூடியதாக இருக்கும். ஆனால் ஐ.தே.க.வினால் அது முடியுமா? விக்கிரமசிங்கவினால் அதைச் செய்ய முடியாது. இங்கு தான் இந்தக் கூட்டணிகள் எப்போதும் தோல்வியடைகின்றது. ■

## மொழி - இலக்கண ஆய்வில்

# வடமராட்சிப் புலமையாளர்களின் பங்களிப்பு

யாழ்ப்பாண பண்பு வட்டத்தினுள் வடமராட்சி தனித்துவமான சில பண்புகளைக் கொண்டுள்ளது. பாரம்பரியத்தை பழைமையைப் பேணும் உணர்வுடன் பாதுகாக்கின்ற அதேவேளை மேலோங்குவதற்கான வாய்ப்புகளைத்தரும் புதுமையை ஒதுக்காது பயன்படுத்தும் ஒரு கருத்து நிலையும் விடாமுயற்சிப் பண்பும் கொண்டது வடமராட்சி

இலங்கைத் தீவிலே பூர்வீக காலம்தொட்டு இற்றை வரையிலே தமிழ்பேசும் மக்களது வாழ்விடமாக யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம் ஆகிய பிராந்தியங்களை உள்ளடக்கிய நிலப்பரப்பு அமைந்து விளங்குகின்றது. அந்நிலப்பரப்புள் அடங்குகின்ற பிராந்தியம் ஒவ்வொன்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தனவும் தனித்துவம் உடையனவுமான சிறப்புக் கூறுகளை உட்கொண்ட பாரம்பரியங்களுக்கு உரித்துடையதாக விளங்குகின்றது. எனினும் தமிழ்க் கல்விப் பாரம்பரியம், இலக்கியப் பாரம்பரியம் என்பவற்றைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணப் பிராந்தியம் தொன்மையும் முக்கியத்துவமும் உடையதாக அமைகின்றமை வெளிப்படையானது. யாழ்ப்பாணம், புவியியல் ரீதியாக தமிழகத்துக்கு அண்மையில் அமைந்தமையும் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட தமிழரசு ஒன்று நிலைபெற்றிருந்தமையும், அதற்கான முக்கிய காரணங்களாகலாம். இலங்கையைக் கைப்பற்றிய ஐரோப்பிய



க.இரகுபரன்

அரசுகளும் அவர்கள் ஆதரவில் இயங்கிய மிசனறிகளும் கல்வி விடயத்தில் யாழ்ப்பாணத்திலேயே அதிக அக்கறை காட்டின. ஒல்லாந்தர் தம்முடைய நிருவாகத் தேவையின் நிமித்தமும் பிற காரணங்களுக்காகவும் படித்தவர்களைத் தமிழகத்திலிருந்து தருவித்ததன் மூலமும் அப்படியானவர்கள் தொழில் தேடித் தாமாகவே வந்ததன் நிமித்தமும் யாழ்ப்பாணப் புலமைப் பாரம்பரியம் துலக்கம் பெறுவதாயிற்று. யாழ்ப்பாண இலக்கணக் கல்வியின் மூலவராக (நன்னூலுக்கு முதன்முதல் காண்டிகை உரை எழுதியவர் என்ற வகையிலும் யாழ்ப்பாணத்தவரான புலவர் பலருக்கு ஆசிரியராக விளங்கியவர் என்ற வகையிலும்) கொள்ளத்தக்க கூழங்கைத் தம்பிரானும் கொச்சிக் கணேசையர் போன்ற பிறரும் அவ்வாறாக வந்தவர்களே. இவ்வாறாகத் துலக்கம் பெற்ற ஈழத்து மொழிப் புலமை - இலக்கணப் புலமைப் பாரம்பரியம் பற்றிய ஆராய்ச்சி இன்றும் ஆரம்ப நிலையிலேயே உள்ளது. அவ்வகையில் ஈழத்து மொழிப் புலமைப் பாரம்பரியத்தை, அதன் ஆழ அகலத்தைக் கண்டு கொள்வதற்கான பகுதி நிலைப்பட்ட ஆய்வாக வடமராட்சியை மையப்படுத்தியதான இந்த ஆராய்ச்சி அமைதல் கூடும்.

யாழ்ப்பாணப் பண்பாட்டு வட்டத்தினுள் வடமராட்சிப் பிரிவுக்குச் சில தனித்துவமான பண்புகள் உள்ளன. மற்றைய பிரிவுகளுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது இப்பிரதேசத்தில் பாரம்பரியத்தைப் பழைமைபேண் உணர்வுடன் பேணும் அதேவேளையில் மேலோங்குவதற்கான வாய்ப்புகளைத் தரும் புதுமையை ஒதுக்காது பயன்படுத்தும் ஒரு கருத்து நிலையும் விடாமுயற்சிப் பண்பும் நிலவுவதைச் சுட்டிக்காட்டுவர். வடமராட்சியின் பிரதேச முக்கியத்துவம் கல்வித் துறையிலும் அதுகாரணமாக உத்தி


யோகத்துறையிலும் உணரப்பட்டது. வல்லை ஒரு புறத்திலும் உப்புக்கடல் மறுபுறத்திலுமாக இப்பிரதேசத்துக் குக் கிடைத்த புவியியல் ஒதுக்கற்பாடு சில தனித்துவமான சமூகப்பண்புகள் தொடர்ந்து பேணப்படுவதற்குக் கார ணமாக இருந்திருக்கலாம்.

எது எவ்வாறாயினும் தமிழியல் சார் ஈழத்தவர் பணிகளுள் கணிசமா னவை - முக்கியமானவை - முன் னோடியானவை. வடமராட்சியைச் சார்ந்த புலமையாளர்களால் மேற் கொள்ளப்பட்டவை மொழிப் புலமை விருத்திக்கான வடமராட்சிப் புலமை யாளர் களின் பங்களிப்புகள் இலக் கண நூலாக்கம், இலக்கண நூல் உரைகள், இலக்கண நூற் பதிப்பு கள், நிகண்டு - அகராதிப் பணிகள், மொழியாராய்ச்சி, மொழிக்கல்விப் பாரம்பரியம் என்னும் தலைப்புகளில் நோக்கத்தக்கன. எனினும் அவர்கள் மொழி, இலக்கண ஆய்வுத்துறைக ளுக்கு ஆற்றிய பங்களிப்பே இங்கு நோக்கப் பெறுகின்றன.

தமிழ் மொழி, இலக்கியம் என்பன தொடர்பான நவீன ஆய்வினைப் பொறுத்தவரையில் ஈழத்தவர்களு க்கு மிகுந்த முக்கியத்துவம் உண்டு. பலவகையில் அவர்கள் முன்னோ டிகளாக விளங்கியிருக்கிறார்கள். மொழி ஆராய்ச்சியைப் பொறுத்த வரையிலும் அவ்வாறே. அவ்வா றான ஈழத்தவர்களுள் கணிசமான வர்கள் வடமராட்சிப் பிரதேசத்தைச் சார்ந்தவர்கள்.

## பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை ஆய்வுகள்

பேராசிரியர் கணபதிப்பிள்ளை (தும்பளை:1903-1968) தமிழ்ப் பேராசிரியர்கள் வரிசையிலே தனித் துவமானவர். பிற்காலத்தில் சர்வ தேசப் புகழ்பெற்ற பேராசிரியர்களாக விளங்கிய மாணவர்களை உருவாக் கியவர். தமிழ், ஆங்கிலம், சமஸ் கிருதம், பாளி, சிங்களம் ஆகிய மொழிகளிலே தேர்ச்சி பெற்றவர். மரபுவழி அறிஞர்களிடமும் பல் கலைக்கழகங்களில் கீழைத்தேய



மேலைத்தேயப் பேராசிரியர்களிட மும் பயின்றவர்.

கலைமாணிப் பரீட்சையில் முதல் தரத்தில் விசேட சித்தி பெற்றமை கார ணமாகக் கிடைத்த புலமைப்பரிசில் மூலம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்கும் பின் இலண்டன் பல் கலைக்கழகத்துக்கும் சென்றவர்.அண் ணாமலைப் பல்கலைக்கழகத்திலே வித்துவான் பட்டத்தையும் (1932) லண்டன் பல்கலைக்கழகத்திலே கலா நிதிப் பட்டத்தையும் பெற்றவர்.

லண்டன் பல்கலைக்கழகத்தின் கீழைத்தேய ஆய்வுப் பள்ளியில் பேராசிரியர் ஆர்.எல்.ரேணர் (R.L. Turner) மேற்பார்வையின் கீழ் கலா நிதிப் பட்ட ஆய்வுக்கு இவர் எடுத் துக் கொண்ட விடயம் கி.பி.7ஆம், 8ஆம் நூற்றாண்டுக் காலகட்டத் தமிழ்ச் சாசனங்கள் பற்றியதாகும். இந்த ஆய்வானது பல்வகைப்பட்ட முக்கியத்துவம் கொண்டது. குறித்த ஒரு காலப்பகுதியில் தமிழ்மொழி எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறியும் நோக்குடன் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகள் அனைத் திலும் இதுவே முற்பட்டது. சங்க இலக்கியங்கள் மீள் கண்டுபிடிப்புக் குள்ளான அன்றைய நிலையில், அவ ற்றின் காலத்தை நிருணயம் செய் யும் அவசிய நிலையில், அக்கால கட்டத்து மொழிப் பயன்பாட்டின் உண்மை நிலை பற்றி ஆராயும் முய ற்சி, மரபுவழிக் கல்விக்கு அப்பாற் பட்டதாகவே அமைந்தது.

வரலாற்றைக் கண்டறிவதற்குச் சாசனங்களைப் பயன்படுத்தும் முறைமை ஏற்கனவே வழக்குக்கு வந்துவிட்டதாயினும் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் மொழி எவ் வாறு பயன்படுத்தப்பட்டது என்பதை சாசன மொழி வழக்கைக் கொண்டு நிலை நாட்டும் ஆராய்ச்சி எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வகையிலும் இந்த ஆய்வு ஒரு மைல்கல்லாக அமைந்தது.


கணபதிப்பிள்ளை தமிழ் இலக்க ணத்தை நன்கு உள்வாங்கிக் கொண் டார் என்பதை அதனை அவர் தமது ஆய்வுக்குக் கையாண்ட முறைமை யிலிருந்து விளங்கிக் கொள்ளலாம். மொழியிலே மாற்றங்கள் தோன் றிய காலத்தை - இடத்தை அவரால் தெளிவாக எடுத்துக்காட்ட முடிந்தது. அவருக்கிருந்த இலக்கண அறிவி னாலேயேயாகும். மொழியையும் இலக்கணக் கோட்பாடுகளையும் நவீன அணுகு முறையில் நோக் குகின்ற மொழியியல் துறையைத் தமிழ்மொழி தொடர்பில் கையாண்ட வகையில் அவர் தமிழ் மொழியியல் துறையின் முன்னோடியாகிறார்.

திராவிட மொழியியற் கழகம் தனது வெள்ளி விழாவினைக் கொண் டாடியபோது (1997) இரண்டு அறிஞர்களை திராவிட மொழியி யல் துறையின் முன்னோடிகளாகக் கௌரவித்தது. அவர்களுள் ஒருவர் வடமராட்சியைச் சார்ந்த தும்பளை யிற் பிறந்த பேராசிரியர் கந்தசாமிப் பிள்ளை கணபதிப்பிள்ளை என்பது ஈழத்தவர் யாவருக்கும் பெருமை தருவது.

## பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை ஆய்வுகள்

பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை அவர்களின் மாணவர்களுள் ஒரு வர் ஆள்வாப்பிள்ளை வேலுப் பிள்ளை(புலோலி:1936). அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்திலே தமிழைச் சிறப்புப் பாடமாகப் படித்து முதலாந் தரத்திலே சித்தி எய்தியவர் (1959). அவர் அங்கே சிங்களம், சமஸ்கிருதம், பாளி ஆகிய மொழிக

ளையும் பயின்றார். அப்பல்கலைக் கழகத்திலேயே கலாநிதிப் பட்டத்தையும்(1962) பெற்றார். இலங்கைப் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து தமிழ்த் துறையில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்ற முதலாமவர் இவரே. அவர் கலாநிதிப் பட்டத்துக்காகத் தேர்ந்தெடுத்த தலைப்பு சடாவர்மன் சுந்தரபாண்டியனதும் மாறவர்மன் குலசேகரனதும் (கி.பி.1251-1350) தமிழ்ச் சாசனங்களின் மொழியமைப்புப் பற்றியதாக அமைந்தது. பின் பிரித்தானியா ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் இணைந்து அங்கும் ஒரு கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார் (1964). உலகப் புகழ்பெற்ற பேராசிரியர் தோமஸ் பரோவின் மேற்பார்வையில் மேற்




கொண்ட அக்கலாநிதிப் பட்டத்துக்கான ஆய்வும் சாசனவியல் சார்ந்ததாக, கி.பி.800 தொடக்கம் 920 வரையிலான காலப்பகுதிக்குரிய சாசனங்களிற் பயின்றுள்ள தமிழ் பற்றியதாக அமைந்தது. இலங்கைத் தமிழ்ச் சூழலிலுள்ள ஒரேயொரு இரட்டைக் கலாநிதியான அவர் தனது கலாநிதிப் பட்டம் இரண்டையும் 28 வயதுக்குள் பெற்றுக் கொண்டார் என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டியது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இணைந்து, தமிழ்த்துறைத் தலைவராகவும் விளங்கி, பின் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையில் பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் விளங்கியவர். பின்னர் உப்சாலா பல்கலைக்கழகம், அரிசோனாப் பல்கலைக்கழகம், வேர்ஜினியா பல்கலைக்கழகம் என்பவற்றிலும் கடமையாற்றியவர். பல்வேறு சர்வதேச கருத்தரங்குகளிலும் ஆய்வுச் சஞ்சிகைகளிலும் தமிழ்மொழி, சாசன வழக்காறுகள் என்பன தொடர்பான கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார். இலங்கைத் தமிழ்ச் சாசனங்களைத் தொகுத்து இரண்டு தொகுதிகளாக வெளியிட்டமையே சாசனத்துறை சார்ந்த இவரது பணிகளுள் தலையாயது. அதுபோலவே அவரது சாசனமும் தமிழும் (1971) என்ற நூலும் அமைகின்றது.

இலக்கிய வழக்கிலும் பேச்சு வழக்கிலும் அமைந்த தமிழிலக்கணம் தொடர்பாக வேலுப்பிள்ளை கணிசமான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். இலக்கண நூல்கள், ஆய்வுகள் தொடர்பாகவும் ஆராய்ந்துள்ளார். தமிழில் பெயரடைகள் (1966), இலங்கைத் தமிழும் செட்டிநாட்டுத் தமிழும் (1972), யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் இலக்கங்கள் (1982), தமிழில் வாக்கிய இணைப்பு (1986), திராவிட மொழிகளில் தமிழின் இடம்(1995), இலக்கணக் கொள்கைக் கட்டுரைகளில் கணேசையரின் அணுகுமுறை (1984) முதலான கட்டுரைகளை வகை மாதிரிக்குக் குறிப்பிடலாம். தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்ட இத்தகைய ஏராளமான கட்டுரைகளை விட இலக்கண ஆய்வுலகில் அவரது பெயரை நிலை நிறுத்துவதாக அமைந்தது, அவரால் எழுதப்பட்ட "தமிழ் வரலாற்றிலக்கணம்" (1966) என்னும் நூலே.

"தமிழ் வரலாற்றிலக்கணம்" என்பது தமிழ் இலக்கண நூல்களின் வரலாறு கூறும் நூல் அல்ல. அது தமிழ் இலக்கணக் கூறுகளில் காலந்தோறும் உண்டான அகநிலைப்பட்ட வளர்ச்சிகளைக் கண்டறிந்து கூறும் ஒரு நூலாகும். தமிழ் வரலாற்றிலக்கணத்தை ஆராய்ந்து கூறும் தனி நூல் எதுவும் வராத நிலையில் அத்துறையில் முதன்முதலில் வந்த நூல் என்ற வரலாற்றுச் சிறப்பு இதற்கு உண்டு. அந்நூல் அதற்கு முன்னர் வெளிவந்துள்ள நூல்களின் விளக்கங்களையும் பங்களிப்புகளையும் நூலாசிரியரின் சாசனவியல் அறிவுடன் இணைத்தும் தொகுத்தும் தருகின்றது.

## பேராசிரியர் சண்முகதாஸ் ஆய்வுகள்



தாய், தந்தை வழியாலும் சம்பந்த வழியாலும் வடமராட்சியைச் சார்ந்தவரான பேராசிரியர் சண்முகதாஸ், தனது ஆசிரியரான பேராசிரியர் கணபதிப்பிள்ளை வழியில் மொழியியலைத் தனது சிறப்பாராய்ச்சித் துறையாக வரித்துக் கொண்டவர். ஏடின்பரோ பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ஆஷர் அவர்களின் மேற்பார்வையில் The Phonology of the Verbal forms in Colloquial Ceylon Tamil என்ற தலைப்பில் ஆய்வு செய்து கலாநிதிப் பட்டம் பெற்றவர். தமிழ்மொழிக்கும் ஜப்பானிய மொழிக்கும் இடையிலான தொடர்பு குறித்து ஆராயும் வாய்ப்பு 1980களில் இவருக்கு வாய்த்தது. இவரது துணைவியார் மனோன்மணி சண்முகதாஸ் அவர்களுக்கும் ஜப்பானிய மொழிப் பரிச்சயத்தினைப் பெறும் வாய்ப்புக் கிட்டியது. இருவரும் ஜப்பானியப் பேராசிரியர் சுசுமு ஒனோ அவர்களுடன் இணைந்து தமிழ் - ஜப்பானிய மொழி ஒப்பியலாய்வில் ஈடுபட்டார்கள். பேராசிரியராகப் பதவிநிலை அடைந்த போது

இவரால் நிகழ்த்தப்பட்ட தொடக்கப் பேருரை "திராவிட மொழி ஆய்வின் இன்றைய நிலையில் தமிழ் - ஜப் பானிய ஒப்பீடு" என்னும் தலைப் பிலே அமைந்தமை குறிப்பிடத்தக் கது.

பேராசிரியர் சண்முகதாஸ் மொழி, இலக்கணம் என்பன தொடர்பாக பல கட்டுரைகளை எழுதி, சர்வதேச, உள் மாநாடுகள், கருத்தரங்குகள், சஞ்சிகைகளில் வெளிப்படுத்தி னார். மொழி, இலக்கணம் என்பன தொடர்பாக இவரால் எழுதப்பட்ட நூல்களாக "நமது மொழியின் இயல் புகள்", "தமிழ்மொழி இலக்கண இயல்புகள்", என்பன அமைகின் றன. இவற்றுள் "தமிழ் மொழி இலக் கண இயல்புகள்" (1982) நூல் பல் கலைக்கழகத் தமிழ்க் கல்வி மட்டத் தில் பரவலான பயன்பாட்டைத் தந் தமை குறிப்பிடப்பட வேண்டியது.

மொழியின் இயல்பைக் கூறுவன இலக்கண நூல்கள். இந்நூல் தமிழ் மொழி இலக்கண நூல்களின் இயல் பைக் கூறுவதாக அமைகின்றது. முதலாவது இயலிலே தமிழ் ஒரு திராவிட மொழி என்ற அடிப்படைச் செய்தி விளக்கப்படுகின்றது. அவ் வகையில் திராவிட மொழிகளின் - தமிழின் - அடிப்படைப் பண்புகள் விளக்கப்பட்டுள்ளன. இரண்டாவது இயலில் இலக்கணம் என்ற அறிவுத் துறை பற்றிய நமது மரபு நிலைப் பட்ட நோக்கும் நவீன நோக்கும் எப்படி அமைந்துள்ளன என்பது உணர்த்தப்படுகின்றது. மூன்றாவது இயலில் தமிழ் இலக்கணக் கோட்பா டுகளில் சமயம், சமூகம், அரசியல் என்பன எவ்வெவ் வகையிற் செல் வாக்குச் செலுத்தியுள்ளன என்பது பற்றி ஆராயப்பட்டுள்ளது. ஏனைய இயல்களில் இலக்கணக் கூறுகள் ஒவ் வொன்றும் தனித்தனியே ஆராயப் பெற்று தமிழ்மொழி இலக்கணத்தின் இயல்பு எடுத்துரைக்கப்படுகின்றது.

ஆசிரியர் கூறியவற்றைத் தொகுத்து நோக்குமிடத்து, தமிழ் இலக்கணம் பற்றி அறிய வேண்டிய வற்றை மரபுவழி நின்று மொழியியல் நோக்கில் ஆசிரியர் ஆராய்ந்துள்ளார் எனக் கூறலாம். கலாநிதி சண்முகதா ஸின் இலக்கண ஞானமும் மொழியி யல் அறிவும் நூல் முழுவதும் இழை யோடுவதைக் காணலாம். இந்நூல் இத்துறையிற் கன்னி முயற்சியாகும்.

பல பதிப்புகளைக் கண்ட இந்நூல் அவ்வப்போது துறைசார் அறிஞர் களால் முன்வைக்கப்பட்ட கருத்துக ளையும் உள்வாங்கி, திருத்தப்பட்ட பதிப்பாகவும் வந்துள்ளமை பாராட் டத்தக்க அம்சமாகும்.

தமிழ் - ஜப்பானிய மொழியின் ஒப்பியலாய்வில் பேராசிரியர் சண் முகதாஸ் அவர்களுக்கு வழிசமைத் தவரான ஜப்பானியப் பேராசிரியர் சுசுமு ஒனோவினுடைய "தமிழ் மொழியும் ஜப்பானிய மொழியும் - இலக்கண ஒப்புமை" என்னும் நூலை பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களும் அவர்தம் துணைவியார் மனோன்மணி சண்முகதாஸ் அவர்க ளும் இணைந்து தமிழாக்கம் செய்த பணியும் இங்கு மனங்கொள்ளப்பட வேண்டியது. மொழி ஆய்வு ஒன் றின் மொழி பெயர்ப்பு முயற்சி என்ற வகையிலே வடமராட்சி சார்ந்த புலமையாளர்களின் முக்கியமான பங்களிப்பாக இது அமைகின்றது. தமிழ் ஜப்பானிய மொழிகளின் ஒப் புமை இடைச்சொல், துணை வினை என்பவற்றின் அடிப்படையிலே இந் நூலில் ஆராயப்பட்டுள்ளது என்பது அறியத்தக்கது.

## பண்டிதர் வீரகத்தியின் ஆய்வுகள்



இலக்கண ஆராய்ச்சி மொழி ஆரா ய்ச்சி என்ற வகையிலே அடுத்து நோக்கத்தக்க ஒருவர் பண்டிதர் க.வீர கத்தி. அவர் தான் கற்ற காலத்தும் மாணவர்க்குக் கற்பித்த காலத்தும் இலக்கணம் தொடர்பாக உண்டான சந்தேக விபரீதங்கள் பற்றிச் சிந்தித் துத் தெளிந்தவற்றை ஆராய்ச்சிக் கட் டுரைகளாக அவ்வப்போது சுவைபட எழுதியுள்ளார். பின் அவற்றையெல் லாம் தொகுத்து நூல் வடிவிலும் தந் துள்ளார். அவ்வாறான ஆராய்ச்சிக் கட்டுரைகளின் தொகுதியாக இரண்டு நூல்கள் வெளிவந்தன. ஒன்று "கட லும் படகும்" மற்றையது "இலக்கண விதி மூலங்களும் விதிகளும்".

### கடலும் படகும்

இந்நூல் மொழி, இலக்கணம் என் பன தொடர்பான ஆறு கட்டுரைக ளைக் கொண்டது. முதலாவதான கடலும் படகும் என்ற கட்டுரை இலக் கணத்தின் தோற்றம், பயன் என்ப வற்றைக் கூறுவதோடு, இலக்கணம் எவ்வாறு மொழிச் சிக்கனத்துக்கும் பழைய இலக்கியங்களை இலகுவா கக் கற்றுக்கொள்வதற்கும் பயன்படும் என்பதைக் கூறுகின்றது. சொற்படு விற்பனம் என்ற கட்டுரை முன்னோ ரின் சொல்லாக்கத் திறனை வெளிப் படுத்துவதாகும். "பாட்டைத் திறப் பது பண்ணாலே" என்ற கட்டுரை ஓசைக்கும் கவிதைக்கும் இடையி லான இயைபினைத் தமிழ் யாப்பி யலின் அடிப்படையில் விளக்குவ தாகும். "உவமை" என்ற கட்டுரை சாதாரண மொழிப் பிரயோகத்திலும் இலக்கியப் படைப்பிலும் உவமை யின் வகிபாகத்தை விளக்குவதாகி றது. சிலேடையின் தன்மை, வகை மை, பயன் என்பவற்றை விளக்குவ தாக அமைவது "சிலேடை" என்ற கட்டுரை. ஆறாவது "அன்பின் ஐந் திணை" பற்றிய தெளிந்த விளக்க மாக அமைகிறது. பண்டிதர் வீரகத்தி அவர்களின் இலக்கிய உள்ளமும், இலக்கண ஞானமும், உலகியல் அறி வும், கருத்துரை வன்மையும், மனித அனுதாபமும் நூல் முழுவதிலும் இழையோடுவதை நாம் காணலாம்.

## இலக்கண விதி மூலங்களும் விதிகளும்

தமிழ் இலக்கணம் தொடர்பான பண்டிதர் வீரகத்தியின் நுண்ணறிவை நன்கு துலக்கி நிற்பது அவரது "இலக்கண விதி மூலங்களும் விதிகளும்" என்னும் நூல். அது,

1. வீரசோழியம்
2. எழுத்துப் பேறும் உடன்படு(த்து) மெய்யும்
3. மூலபாடத் திறனாய்வில் தொல்காப்பியத்து இரு நூற்பாக்கள்
4. தொல்காப்பியமும் நிகழ்கால இடைநிலையும்
5. சொல்லிலக்கணத்தில் யாப்பின் செல்வாக்கு
6. குறிப்பு வினை
7. தன்வினை, இயக்குவினை, பிறவினை
8. ஆய்தம் ஒரு முதலெழுத்தும் ஆகும்

என்னும் கட்டுரைகளை உட்கொண்டது. இக்கட்டுரைகள் "புத்தம் புதிய பார்வை" கொண்டவை. எடுத்துக்காட்டாக "ஆய்தம் ஒரு முதலெழுத்தும் ஆகும்" என்ற கட்டுரையைக் கொள்ளலாம்.

சார்பெழுத்தும் முதலெழுத்தும் ஒன்றுக்கொன்று முரணான தன்மையைக் கொண்டவை அல்ல என்பதும், ஆய்தம் திரிபொலி அன்று, இயல்பான தனி ஒலி என்பதும், அஃதோர் அடிப்படை ஒலி என்பதும் இக்கட்டுரை மூலம் பெற்றுக் கொள்ளக் கூடியனவாம்.

என்பதைத் தக்க சான்றுகளோடு நிரூபிக்கும் முறை நுட்பமானது.

## பிற்கால இலக்கண மாற்றங்கள்

பண்டிதர் வீரகத்தியின் இலக்கண ஆய்வுகள் யாவற்றிலும் மேலானதாகக் கொள்ளத்தக்கது. அவரது "பிற்கால இலக்கண மாற்றங்கள் (எழுத்து)" என்னும் ஆய்வாகும். அது தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சிறப்பாய்வாளராகக் கடமையாற்றிய நிலையில் பண்டிதரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வாகும். அக்காலத்தில் அப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக விளங்கியவர் தலைசிறந்த மொழியியல் அறிஞரான பேராசிரியர் வ.அய்.சுப்பிரமணியம் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி ஆய்வுக்கான மூலங்களாக அமைந்தவை கி.பி.11ஆம் நூற்றாண்டு முதல் 19ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் தோன்றிய வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், பிரயோக விவேகம், இலக்கணக்கொத்து, தொன்னூல் விளக்கம், முத்து வீரியம், சுவாமிநாதம், அறுவகை இலக்கணம் என்னும் பத்து இலக்கண நூல்களுமாம். இந்தப் பத்து நூல்களுள்ளும் வீரசோழியம், நன்னூல், இலக்கணக் கொத்து, அறுவகை இலக்கணம் என்னும் நான்கும் புதிய இலக்கணம் வகுத்தலிலும் காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்தலிலும் ஈடுபட்டு தற்புதுமை உடையனவாய், கல்வி மரபில் பயன்பாட்டிலும் உள்ளனவாய், அமைகின்றமையும் ஏனையவை புதுமை எதுவும் அற்றனவாயும் வடமொழிக்கு அதீத முக்கியத்துவம் கொடுப்பனவாயும் அமைகின்றமையும், பிற்கால இலக்கண நூல்களுக்கிடையிலான ஒற்றுமை - வேற்றுமைகள், இலக்கண மாற்றங்களுக்கான காரணங்கள் என்பனவும் பண்டிதர் வீரகத்தியால் நன்கு இனங் காணப்பட்டுள்ளன. அவரின் மரபிலக்கணப் புலமையும் மொழியியல் அறிவும் ஆய்வைத் துலங்கச் செய்துள்ளன. மொழி பற்றியும் இலக்கணம் பற்றியும் பண்டிதர் வீரகத்திக்குள்ள தெளிவே அவரது ஆய்வின் சிறப்பிற்குக் காரணமாகிறது. மேல் வரும் அவரது கூற்றுகள் அத்தெளிவினை உணர்த்துவனவாயமையும்.

ஒவ்வொரு மொழியும் ஒரு புனித கங்கை போன்றது. கங்கை நாட்டைச் செழுமைப்படுத்துவது, கங்கை உடலை வளர்ப்பது, அதற்கு ஒளியூட்டுவது, அதீத மழை வீழ்ச்சிப் பெருக்கில் கங்கை கரை கடப்பதும் உண்டு, கரை உடைப்பதும் உண்டு. அது பற்றிய கவலை அதிகம் வேண்டியதில்லை. பெருக்கு வடிந்துவிட, முன்போல் கரைக்குள் கட்டுண்டு பாயும். அதுபோல் மொழியிலும் புதிய புதிய துறைகளில் அறிவுப் பெருக்கு ஏற்படும்போது மொழி வரம்பு நொடிதலும் உண்டு, உடைதலும் உண்டு. ஆனாலும் அந்த வேகம் தணிந்ததும் பழமை போல் வரம்புக்குள் அடங்கி வளரும். மொழி வளர்ச்சியின் வேகம் என்றும் ஒரே மாதிரியாக அமைய முடியாது. வளர்ச்சி வேகமும் மந்தமும் சமூக அரசியல் பொருளாதார கலாசார காரணங்களால் அமைவன.

வளர்ச்சியோ, தேக்கமோ, மொழிக்கு வரம்புதான் என்ன? இலக்கணம் என்பதே இவ்வினாவுக்கான ஒரே பதில். இலக்கண வரம்பு மொழியின் தனித்துவத்தைப் பேணுவது, மொழியை அழிவுப் பாதைக்குச் செல்லவிடாமல் தடுத்து நிறுத்துவது. அதே நேரம் அதன் எளிமையான வளமான வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிப்பதாயும் இருத்தல் கூடாது.

மரபுவழிப் பண்டிதர் ஒருவர் மொழியியல் துறைசார்ந்த விற்பன்னர் ஒருவரின் தலைமையில் இயங்கிய பல்கலைக்கழக மொன்றில் சிறப்பாய்வாளராக வெற்றிகரமாகப் பணியாற்ற முடிந்தது அவரிடம் காணப்பட்ட இத்தகைய தெளிவினாலேயே.

## இராமநாதபிள்ளை ஆய்வுகள்

பெரிய அளவில் இல்லையென்றாலும் சிறு அளவிலேனும் இலக்கண ஆய்வில் ஈடுபட்டார் என்ற வகையில் அவதானிப்புக்கு உள்ளானவர். புலோலி இந்துக் கல்லூரியிலே அதிபராக விளங்கிய த.இராமநாதபிள்ளை B.A.(Lond) அவர் இலக்கணம் சார்ந்த சில ஆய்வுக் கட்டுரைகளை எழுதி செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப் பொழில் என்னும் தமிழியற் சஞ்சிகைகளில் வெளியிட்டுள்ளார். அவற்றுள் "இரட்டையுயிர் (கலப்புயிர்)" என்ற கட்டுரை செந்தமிழ்ச் செல்வி சஞ்சிகையில் வெளிவந்தது (1960). அது ஐகார ஔகார எழுத்துகள் பற்றிய தொல்காப்பியர் கோட்பாட்டையும் நன்னூலார், உரையாசிரியரான

சிவஞான முனிவர் ஆகியோர் கருத்துகளையும் ஒப்பிட்டு தொல்காப்பியர் கோட்பாடே சரியானதென்றும் வடநூல் மரபுபற்றி முன்வைக்கப்பட்ட நன்னூலார் முதலானோர் கருத்துத் தவறானதென்றும் தக்க காரணம் காட்டி நிறுவுகின்றது. த.இராமநாத பிள்ளை இலக்கணம் சார்பாக எழுதிய ஏனைய கட்டுரைகள் "தமிழ்ப் பொழில்" சஞ்சிகையில் வெளிவந்தவை. அவற்றுள் "ஒன்பதுபத்து தொன்னூறாகுமா? (1952)" என்ற கட்டுரை ஒன்பது என்ற எண்ணுப் பெயர் பிற எண்ணுப் பெயர்களோடு புணரும் முறைமை பற்றிய விதியைத் தரும் தொல்காப்பிய நூற்பா பொருத்தமற்றது - அது இடைச்செருகலாக இருக்க வேண்டும் என்னும் கருத்தினை வலியுறுத்துவதாய் அமைகிறது. ஏனைய கட்டுரைகள் யாவும் ஜசிறுபொழுது, முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை, வேண்டிய கல்வி யாண்டு மூன்று இறவாது(1960) ஸ பொருளிலக்கணம் சம்பந்தமானவையாக தொல்காப்பியச் சூத்திரங்கள் சிலவற்றுக்கு நச்சினார்க்கினியர் கொண்ட பொருள் பொருத்தமற்றது என்ற கருத்தை முன்வைப்பவையாக அமைகின்றன. இராமநாதபிள்ளை அவர்களின் கட்டுரைகள் தெளிவும், சுருக்கமும், தர்க்க நுட்பமும் பொருந்தியனவாக, அவரது பன்னூலறிவையும் பன்மொழிப் புலமையையும் தமிழ் மரபில் அவருக்குள்ள ஈடுபாட்டையும் தெரிவிப்பனவாய் அமைகின்றன. தமது அறிவுத் திறம் புலப்படும் படியான வேறு சில நூல்களையும் இயற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பேராசிரியர் சிவத்தம்பியின் ஆய்வு

இலக்கண ஆய்வாகக் கொள்ளத்தக்கது அல்ல எனினும் இலக்கணத்தைச் சமூகவியல் ஆய்வுக்குக் கருவியாகக் கையாண்டது என்ற வகையில் பேராசிரியர் கா.சிவத்தம்பியின் (கரவெட்டி:1932-2011) "இலக்கணமும் சமூக உறவுகளும்" (1982)



என்ற ஆய்வு இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகிறது. சிவத்தம்பியவர்கள் தமிழ் இலக்கியம், தமிழ்ச் சமூகத்தின் வரலாறு, தமிழ் நாடகம் முதலானவற்றையே பிரதான ஆராய்ச்சித் துறையாகக் கொண்டவர். ஆனால் இங்கு தமிழ் இலக்கணத்தைத் தளமாகக் கொண்டு அதற்கும் சமூகத்துக்கும் இடையிலான உறவினை வரலாற்றுப் பொருள்முதல்வாத அணுகுமுறையில் வெளிப்படுத்த முனைந்துள்ளார். தமிழ்ச் சொல்லிலக்கணத்தை சமூக வரலாற்றுச் சான்றாகக் கொள்ளும் நேரடி ஆய்வுகள் எதுவும் மேற்கொள்ளப்படாத நிலையில் இது ஒரு முன்னோடி முயற்சி என்ற பெருமைக்கு உரியது. பேராசிரியர் நா.வானமாமலையின் மணிவிழா மலரிலே இந்த ஆய்வு முதன்முதலில் வெளிவந்தபோது எழுதப்பட்ட அம் மலரின் ஆசிரியர்குழுவின் குறிப்புரையை இங்கு தருதல் பொருத்தமானது.

இக்கட்டுரை ஆராய்ச்சித் துறையில் ஒரு புதுவழி வகுக்கிறது. மொழியியலில் சமூக மானிடவியல் பிரச்சினைகளை ஆராய்கின்ற முறையியல் புதிதாகப் பிறந்துள்ளதை நாம் அறிவோம். மொழியியல் மாற்றங்கள், சமூகவியல் மாற்றங்களுக்கேற்ப உள்ளன என்பதை விளக்குகிற சில கட்டுரைகள் வந்துள்ளன. ஆனால் நமது பழைமையான இலக்கண மரபுகள் புதிய நூல்களில் மாற்றம் பெறுவதற்கான காரணங்களை நமது ஆய்வாளர் சிவத்தம்பிக்கு முன் ஆய்ந்தவர் எவருமிலர்.

அடிக்குறிப்புகள்

1. எஸ்.சிவலிங்கராஜா, வடமராட்சியின் கல்விப்பாரம்பரியமும் இலக்கிய வளமும், திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1984 (மேற்படி நூலுக்கு பேராசிரியர் கா.சிவத்தம்பி வழங்கிய முன்னுரையில்)
2. அ.சண்முகதாஸ், தமிழ்மொழி இலக்கண இயல்புகள், -N-C-B-H, சென்னை, 2008, பக்.VII
3. க.வீரகத்தி, கடலும் படகும், ஆசீர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம், 1971 (அணிந்துரை)
4. க.வீரகத்தி, இலக்கண விதி மூலங்களும் விதிகளும், தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1984, பக்.91, 92
5. க.வீரகத்தி, பிற்கால இலக்கண மாற்றங்கள் (எழுத்து) குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 201, £.H
6. கார்த்திகேசு சிவத்தம்பி, இலக்கணமும் சமூக உறவுகளும், N-C-B-H, சென்னை, 1982, பக்.66


*(இரகுபரன் தென்கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறை விரிவுரையாளர்)*

# அரை மனதுடன் ஒரு ஒப்பந்தம்...?

ரி.எஸ்.கணேசன்

**இலங்கை கிரிக்கெட்டில் அரசியல் தலையீடுகள் அதிகம். அணித் தேர்வு முதல் அதன் நிருவாகம் வரை இத்தலையீடுகளினால் பாதிக்கப்படுவதாக இடையறாது குற்றச்சாட்டுகள்**

விளையாட்டில் கிரிக்கெட் ஒன்றுதான் இலங்கையின் பெயரை வெளியுலகுக்கு சொல்கிறது. பிரிட்டனில் உருவாகிய கிரிக்கெட் பிரிட்டிஷ் காலனித்துவ நாடுகளில் கொடிகட்டிப் பறக்கிறது. கிரிக்கெட் தோன்றி நூறு வருடங்கள் கழிந்துவிட்ட பின்னரும் பிரிட்டிஷ் காலனித்துவ நாடுகளை விட வேறு நாடுகளால் கிரிக்கெட்டில் பேரார்வம் காட்ட முடியவில்லை. காலனித்துவ நாடுகள் அல்லாத பல நாடுகளில் கிரிக்கெட் விளையாட்டை பிரசித்தப் படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப் பட்ட போதும், சாணேற முழம் சறுக்கிய கதையாகவே அந்த நாடுகளில் கிரிக்கெட் உள்ளது. இதனால் பிரிட்டிஷ் காலனித்துவ நாடுகளுக்குள்ளேயே கிரிக்கெட் தொடர்ந்தும் சுற்றிச் சுழன்று வருகிறது.




ஆனாலும், கால ஓட்டத்திற்கேற்ப கிரிக்கெட்டின் வடிவங்களுமே மாற்றமடைந்து வருகின்றன. 5 நாள் ஆடும் டெஸ்ட் போட்டிகள் சோபை இழந்துவிட்டதால் இன்று 5 மணிநேரத்திற்கும் குறைவான "ருவென்ரி -20" போட்டிகள் ஆதிக்கம் செலுத்துகிறது. டெஸ்ட் மற்றும் சர்வதேச ஒரு நாள் போட்டிகளை விட ருவென்ரி- 20 போட்டியின் மவுசு அதிகரித்து விட்டதால் கிரிக்கெட் இன்று பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து வருகிறது. சர்வதேச கிரிக்கெட் சபையான ஐ.சி.சி.நடத்தும் போட்டிகளை விட மிகவும் பணம் படைத்த இந்திய கிரிக்கெட் சபை ஆரம்பித்துள்ள இந்தியன் பிறிமியர் லீக் (ஐ.பி.எல்.) போன்ற போட்டிகளுக்கு மவுசு அதிகரித்து விட்டது. இதனால் பாரம்பரிய கிரிக்கெட்டான டெஸ்ட் மற்றும் சர்வதேச ஒரு நாள் போட்டிகளை விடுத்து பல்வேறு நாடுகளும் நடத்துகின்ற, ஐ.பி.எல். போன்ற சில மணிநேர திருவிழாவில் சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் ஆர்வம் செலுத்துகின்றனர்.

உலகப் புகழ்பெற்ற திரைப்பட நடிகர்கள், நடிகைகள் போல் விளையாட்டு வீரர்களும் இன்று சர்வதேச ரீதியில் பார்க்கப்படுகின்றனர். இளமையும் நல்ல திறமையும் இருந்து விட்டால் எப்படியும் எவ்வளவும் சம்பாதித்து விடலாமென்ற நிலை இன்று உருவாகிவிட்டது. பாரம்பரிய கிரிக்கெட்டில் தோல்வியடைந்த நாடுகள் கூட இன்று ஐ.பி.எல். போன்ற பரபரப்பான கிரிக்கெட்டுகள் நுழைய முற்படுகின்றன. இதனால் மிகவும் திறமையான வீரர்களின் மவுசு வானளாவ உயர்ந்துவிட்டது. தங்கள் நாடுகளை விடுத்து சர்வதேச ரீதியில் இவ்வாறான போட்டிகளில் பங்கேற்கும் வீரர்களின் புகழ் உலகெங்கும் சில நிமிடநேரத்தில் பரவி விடுவதுடன், அவர்களின் கிராக்கி வெகுவாக அதிகரித்து விடுகின்றது. அவர்களுக்கு கோடிக்கணக்கான ரூபாவை கொட்டிக் கொடுத்து தங்கள் தங்கள் அணிகளில் சேர்த்து விட எத்தனையோ அணிகளின் உரிமையாளர்கள் மைதானத்திற்கு வெளியே அல்ல பவுண்டரி எல்லைக்கு வெளியிலேயே தயாராக நிற்கின்றனர்.

சர்வதேச ரீதியில் இன்று இலங்கை வீரர்களின் புகழ் ஓங்கியுள்ளது. இந்த வருடம் ஏப்ரலில் இந்தியாவில் நடைபெறவுள்ள, ஐ.பி.எல். "ருவென்ரி -20" தொடரில் கூட இலங்கை வீரர்களில் 15 இற்கும் மேற்பட்டோர் ஐ.பி.எல். அணிகளால் பங்கேற்கவுள்ளனர். இதற்காக கடந்த மாதம் நடைபெற்ற ஏலத்தில் கூட இலங்கை வீரர்கள் பலர் போட்டிபோடப்பட்டு அந்தந்த அணிகளில் வாங்கப்பட்டுள்ளதால் இலங்கை வீரர்களின் மவுசு பெருமளவில் அதிகரித்துவிட்டது. உலக கிரிக்கெட்டை சர்வதேச

கிரிக்கெட் சபையே கட்டுப்படுத்துகின்ற போதிலும் கிரிக்கெட் உலகில் மிகவும் பணபலம் படைத்த இந்திய கிரிக்கெட் சபையே உத்தியோகப்பற்றற்ற வகையில் கிரிக்கெட் உலகை கட்டுப்படுத்துகிறது. கிரிக்கெட் விளையாட்டு உருவான இங்கிலாந்தால் கூட இதனைக் கட்டுப்படுத்த முடியாது. இதனால் தான் இந்திய கிரிக்கெட் சபை நடத்தும் ஐ.பி.எல். "ருவென்ரி-20" தொடர்களில் மிகவும் புகழ்பெற்று விளங்கும் இலங்கை அணிவீரர்கள், தங்கள் நாட்டு கிரிக்கெட் சபைக்கெதிராக போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

ஆனால் இலங்கை கிரிக்கெட் சபையோ பணபலம் படைத்ததல்ல. அன்றாடம் கூலிவேலை செய்து உழைப்பவர்கள் போல் அவ்வப்போது இலங்கையில் நடைபெறும் சர்வதேச போட்டிகள் மூலம் எப்படியோ சில லட்சங்களை சம்பாதித்து வருகிறது. ஆனாலும் கடந்த சில வருடங்களாக இலங்கை கிரிக்கெட்டின் நிலைமை மிக மோசமாகவே உள்ளது. உள்நாட்டு அரச வங்கிகளில் கடன்களைப் பெற்றே நிலைமையை சமாளிக்கும் நிலையுள்ளது. இதனை கிரிக்கெட் வீரர்களும் நன்கறிவர். ஆனால் அவர்களோ அதுபற்றி கவலைப்படுவதாயில்லை. தங்களின் வருமானத்தை எந்தளவுக்கு அதிகரிக்க முடியுமோ அந்தளவுக்கு அதிகரிப்பதிலேயே குறியாக உள்ளனர். இந்த ஆண்டுக்கான கிரிக்கெட் சபையின் புதிய ஊதிய ஒப்பந்தத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. கிரிக்கெட் சபைக்கு கிடைக்கும் வருமானத்தில் 75 சதவீதத்தை வீரர்களுக்கு சம்பளமாக வழங்க வேண்டும். ஐ.சி.சி. நடத்தும் போட்டிகளில் இலங்கை அணி பங்கேற்கும் போது அதிலிருந்து கிடைக்கும் பணத்தில் 25 சதவீதத்தை வீரர்களுக்கு வழங்க வேண்டும் என்பது உட்பட சில கோரிக்கைகளை கிரிக்கெட் வீரர்கள் கிரிக்கெட்சபையிடம் முன்வைத்தனர்.

ஆனால் கிரிக்கெட் சபையோ இதற்கு உடன்படவில்லை. தங்களுக்கு கிடைக்கும் வருமானத்தில் 67 வீதத்தையே வீரர்களுக்கு வழங்க முடியுமெனவும், அதற்கு மேல் எதனையும் வழங்க முடியாதெனவும் கூறிவிட்டது. இந்த ஆண்டுக்கான ஒப்பந்தத்தில் அணி வீரர்களும் கிரிக்கெட் சபையும் கைச்சாத்திடவிருந்த நேரத்தில் இந்தப் பிரச்சினை பூதாகரமாகியது. ஒரு புறம் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்ய வேண்டும். மறுபுறம், இலங்கைக்கு வந்துவிட்ட பங்களாதேஷ் அணியுடனான டெஸ்ட் போட்டிக்கான அணியை அறிவித்து விட வேண்டுமென்ற நிலையில் இலங்கை கிரிக்கெட் சபைக்கு இருந்தது. ஆகக் கூடுதலாக மொத்த வருவாயில் 69 வீதத்தை வழங்கலாமெனவும் கிரிக்கெட் சபை கூறியபோதும் 75 வீதத்தை வழங்காவிடில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப் போவதில்லையென முன்னணி வீரர்கள் ஒருமித்த கருத்தாக கூறிவிட்டனர். மொத்த வருமானத்தில் 75 வீதத்தை தேசிய அணி வீரர்களுக்கு வழங்கிவிட்டால் மிகுதி 25வீதப் பணத்தில் உள்நாட்டில் கிரிக்கெட்டை வளர்க்க முடியாதென விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே கூறி






யதுடன், சிரேஷ்ட வீரர்கள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாவிடின் பங்களாதேஷ் தொடருக்கு புதிய அணியை தயார் செய்யுமாறும் கிரிக்கெட் சபைக்கு பணிப்புரை விடுத்தார்.

மேலும் கிரிக்கெட் சபையின் சில கட்டுப்பாடுகள் வீரர்களை சீற்றமடையச் செய்தது. வீரர்கள் ஐ.பி.எல் தொடரில் பங்குகொள்ளும் காலப் பகுதிக்கான ஊதியம் அவர்களது வருடாந்த சம்பளத்திலிருந்து கழிக்கப்படும், ஐ.சி.சி.தொடர்களில் பங்குபற்றுவதற்காக கிரிக்கெட் சபைக்கு ஐ.சி.சி வழங்கும் தொகையில் 25 வீதம் வீரர்களுக்கும் வழங்கப்படுவது நிறுத்தப்படும் வீரர்களின் மனைவிமாருக்கு வருடமொருமுறை வெளிநாட்டுத் தொடர்களுக்கு வழங்கப்படும் வெளிநாட்டுச் சுற்றுலாவுக்கான டிக்கெட் நீக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டதால் சிரேஷ்டவீரர்கள் 23 பேர் உட்பட 60 வீரர்கள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட மறுத்தனர். ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கான காலக்கெடு கடந்த 3ஆம் திகதியாகும். எனினும், அன்று காலை இது தொடர்பாக நடந்த பேச்சுவார்த்தை கூட தோல்வியடைந்த நிலையில், சிரேஷ்ட வீரர்களை அன்று மாலை தேசிய கிரிக்கெட் அணியின் தெரிவுக் குழுத்தலைவரும் முன்னாள் கப்டனும் பாராளுமன்ற உறுப்பினருமான சனத்ஜயசூரிய சந்தித்தார். நீண்ட நேரம் இது தொடர்பாக பேச்சுகள் நடந்தது. தேர்வுக் குழுத்தலைவரென்பதால் சனத்ஜெயசூரியவின் சில மிரட்டல்கள் பலித்தன. கிரிக்கெட் சபைக்கு மிரளாத வீரர்கள் கூட தேர்வுக்குழுத் தலைவருக்கு சற்று மிரண்டனர். ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாவிடில் அணியில் இடமில்லாது போகும். அதேநேரம் அடுத்த மாதம் தொடங்கவுள்ள ஐ.பி.எல். போட்டியையும் இது பாதிக்கும் என்பதை அணி வீரர்கள் நன்கு தெரிந்து கொண்டனர்.


கிரிக்கெட் சபையின் தடையற்ற சான்றிதழைப் பெற்றால் மட்டுமே ஐ.பி.எல்.இல் இலங்கை வீரர்கள் பங்குபற்ற முடியும். இலங்கை கிரிக்கெட் சபையுடன் ஒரு தொகை பணத்திற்காக மோதி ஐ.பி.எல். வாய்ப்பை இழக்க இலங்கை வீரர்கள் எவரும் தயாரில்லை. இதனை நன்கு புரிந்து வைத்திருந்த சனத்ஜெயசூரிய சிரேஷ்ட வீரர்களுக்கு இவை பற்றியெல்லாம் எடுத்துக்கூறவே இறுதியில் கிரிக்கெட் சபையுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட சிரேஷ்ட வீரர்கள் உட்பட அனைவரும் சம்மதித்தனர். இதற்கமைய அணிவீரர்கள் ஐந்து தராதரங்களில் நிர்ணயிக்கப்பட்டு மறுநாள் 4 ஆம் திகதி அணி வீரர்களும் கிரிக்கெட் சபையும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன. எனினும் இந்த உடன்பாட்டின்படி அணி வீரர்களுக்கு கிடைக்கப்போவதென்ன என்பது குறித்து எதுவும் பகிரங்கப்படுத்தப்படாததால் ஐ.பி.எல். தொடர் முடிந்ததும் மீண்டும் இந்தப்பிரச்சினை வெடிக்கலாமென்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. இந்த ஒப்பந்தப்படி ஐ.சி.சியால் நடத்தப்படும் உலகக் கிண்ண ஒருநாள் போட்டி மற்றும் ருவென்ரி-20 போட்டிகள் போன்றவற்றில் இலங்கை பங்கேற்கும் போது அந்தந்த கிரிக்கெட் சபைகளுக்கு வழங்கப்படும்போது அதில் 25 வீதம் வீரர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்தது. அது இனிமேல் இலங்கை வீரர்களுக்கு கிடையாது.

எனினும், இந்த புதிய ஒப்பந்தத்தில் அணி வீரர்களுக்கு எவ்வித உடன்பாடுமில்லை. இந்தப் பணம் வீரர்களுக்கு வழங்கப்படவேண்டியுள்ளது. எனினும் இலங்கை கிரிக்கெட் சபை பெரும் நிதி நெருக்கடியைச் சந்திப்பதால் இதனைக் கருத்தில் கொண்டு தங்களுக்கு பெரிதும் சாதகமில்லாத உடன்பாட்டில் அவர்கள் கைச்சாத்திட்டுள்ளனர். அதேநேரம் டெஸ்ட், ஒருநாள் போட்டி, ருவென்ரி-20 போட்டிக்கான ஊதியத்தை அதிகரிப்பது தொடர்பில் தற்காலிக உடன்பாடொன்றுக்கு வந்துள்ளதாகவும் தெரியவருகிறது. சனத்ஜயசூரிய மூலம் தற்போது எட்டப்பட்டுள்ள உடன்பாடு அணி வீரர்களுக்குச் சாதகமற்றதுடன், கிரிக்கெட் சபைக்குச் சாதகமானதென்பது வெளிப்படை. இதுவரை காலமும், சனத்ஜயசூரிய அணியிலிருந்த போது அவரும் சக வீரர்களும் அனுபவித்த சில சலுகைகள் கூட (கொடுப்பனவுகள்) இந்த உடன்பாட்டில் கிட்டாது போய்விட்டதாகக் கூறப்படுகிறது. கடும் அழுத்தங்களுக்கு மத்தியிலேயே வீரர்கள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர். ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாவிடின் மாற்று அணியொன்று தயாராயிருப்பதாகவும் வீரர்களிடம் கூறப்பட்டுள்ளது. இதையடுத்தே அவர்கள் அந்த உடன்பாட்டில் வேண்டாவெறுப்பாக கைச்சாத்திட்டுள்ளனர். இதன் வெளிப்பாடே, இந்த உடன்பாட்டில் கைச்சாத்திட்டுவிட்டு வெளியே வந்த சிரேஷ்ட வீரர்கள் சிலர் ஊடகவியலாளர்களுடன் சீறிப்பாய்ந்ததற்கு காரணமாகும்.

இலங்கை கிரிக்கெட்டில் அரசியல் தலையீடு அதிகமாகும். அணித் தேர்வு முதல் அதன் நிர்வாகம் வரை அரசியல் தலையீட்டால் பாதிக்கப்படுவதாக பல தடவைகள் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. தற்போது கூட அணித்தேர்வுக்குழுத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் சனத்ஜயசூரியா கூட ஆளும் தரப்பு எம்.பி. யாவார். இவரது நியமனம் கூட அரசியல் நோக்கம் கொண்டதென விமர்சிக்கப்பட்டு வந்த நிலையில் இலங்கை அணி வீரர்கள் கடும் அழுத்தங்கள் நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே புதிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர். எனினும், பலர் இதில் அதிருப்தி கொண்டுள்ளனர். இதனால், இந்த ஒப்பந்த விவகாரம் நீறுபூத்த நெருப்பாகவே இருக்கப் போகிறது. எப்போது இது விஸ்வரூபம் எடுக்குமோ தெரியாது. ■

**பனுவல் பார்வை**

# திறனாய்வின் புதிய திசைகள்




ஆதிசேனன்

ஈழத்து நவீன தமிழ் இலக்கியச் சூழலில் 1960களில் இருந்து கவிதை, சிறுகதை, நாவல், விமர்சனம், மொழிபெயர்ப்பு, இதழாசிரியர் எனப் பல்வேறு தளங்களில் பன்முக ரீதியில் தீவிரமாக இயங்கி அந்தந்த துறைக்கு வளம் சேர்த்திருப்பவர் இந்தத் தருணம் வரை படைப்பாக்கச் செழுமையுடன் தொழிற்பட்டுவருபவர் மு.பொன்னம்பலம். இன்று வரை பல்வேறு பாராட்டுகளுக்கும் கௌரவங்களுக்கும் பரிசுகளுக்கும் தகுதிப்பாடு கொண்டவராகவும் விளங்குகின்றார்.

தற்போது மு.பொ. 'திறனாய்வின் புதிய திசைகள்' என்னும் தலைப்பில் நூலொன்றை தந்துள்ளார். இந்நூல் ஈழத்து தமிழ் விமர்சன மரபில் புதுவளம் என்றே குறிப்பிடலாம். தமிழில் திறனாய்வுச் செல்நெறியின் புதிய திசைகளை இனங்காட்டும் - ஆற்றுப்படுத்தும் தொடர்ச்சியும் மீளுருவாக்கப் பின்புலத்திற்கான அறிகை மரபை இந்நூல் முன்வைக்கிறது. மு.தளையசிங்கம் தமிழில் தொடக்கி வளர்த்து வந்த மெய்யியல் விசாரம் கலை இலக்கியப் பரப்பில் எவ்வாறு மையம் கொண்டு வெளிவரும் என்பதற்கான படைப்பாக்கத் தரிசனமாகவும் இந்நூல் ஆக்கம் பெற்றுள்ளது.

இந்நூலில் அறிமுக விமர்சனம், விமர்சனம், ஆய்வு நிலை சார்ந்த விமர்சனம், எதிர்வினை விமர்சனம் என்று நான்கு பகுதிகளாக வகுக்கப்பட்டு கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றின் தர்க்கம், உரையாடல்தான் திறனாய்வின் புதிய திசைகளை அடையாளப்படுத்தும் இருப்பாகவும் இயக்கமாகவும் அமைகின்றது. கலைத்துவ இலக்கிய அழகியல் வெளிப்பாட்டின் சில அடிப்படையான கூறுகளை நுணுக்கமாக விளக்கும் -விவாதிக்கும் பண்பு இந்நூலில் மையஇழையோட்டமாக உள்ளது.




அறிமுக விமர்சனம் பகுதியில் 19 கட்டுரைகள் உள்ளன. இங்கு பெரும்பாலும் கவிதைகள் - கவிஞர்கள் பற்றிய பதிவாகவும், சில உரைநடை மொழிபெயர்ப்பு முதலான நூல்கள் பற்றிய அறிமுகமாகவும் உள்ளன. எடுத்துக்காட்டாக 'தா.பாலகணேசனின் வர்ணங்கள் கரைந்தவெளி தனித்துவமான கவிதைத் தொகுப்பென்பதில் ஐயமில்லை. இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழின் முப்பிரிவுகளையும் தன் கவிதைகள் மூலம் மீட்டியும் கோடிட்டுக் காட்டியும் சொல்வதன் மூலம் அத்தொகுப்பிற்கு ஆழத்தையும் தனித்துவத்தையும் ஏற்படுத்துகிறார். பல கவிதைகள் நாடகத் தன்மை கொண்டு நிற்கின்றன. வண்ணத்துப்பூச்சிகளின் நடனப்பாடல், நாடகம், கும்மிப்பாட்டு, அகதிக் குழந்தைகளும் சூரியனும், ரயில் பயணம் போன்ற கவிதைகள் இதற்கு உதாரணம்'.

இதுபோல் அகிலனின் கவிதைகள் பற்றிக் குறிப்பிடும் மு.பொ. "எல்லாக் கவிதைகளும் ஒரே பின்னணியில் துயரம் சுமந்து வருவனவாயிருப்பதால் அவை தமது தனித்தன்மையைப் பேண முடியாதிருப்பதால் ஒரு நெடுங்கவிதையாக நிற்கின்றன எனலாம். ஆனால், இன்னொரு கேள்வி. அதுவே முக்கியமான ஒரு கேள்வி. இவை மட்டும் தான் கவிதையா? மனித வாழ்வில் பல தளங்

கள் உள்ளன. அத்தளங்களில் முனைப்பொருள் உணர்வு மாற்றங்கள் கோரும் ஆத்மார்த்த வெளிப்பாட்டுக்கான அறிதல் இவரிடம் உள்ளதா என்ற சமிக்ஞைகள் இதில் இல்லை. ஆனால், 'பதுங்குகுழி நாட்கள்' அண்மைக்கால கவிதைகளில் தனக்கென ஓர் இடத்தைப் பெறும் என்பதில் சந்தேகம் இல்லை''. இவ்வாறு பல்வேறு கவிஞர்கள் பற்றிய கணிப்புகளை மு.பொ. முன்வைக்கின்றார்.

விமர்சனம் என்ற 2ஆம் பகுதியில் 14 கட்டுரைகள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையிலானவை. கடந்த நூற்றாண்டுக் கவிதை, ஒரே வகைகொண்ட தமிழ்க் கவிதை, போரின் முகங்களும் இன்றைய தமிழ்க் கவிதைகளும், பாரதி, ஆத்மா முதலான கவிஞர்கள், மறுமலர்ச்சிக் கவிதைகள் என்று கவிதை சார்ந்த பார்வையும் பதிவும் விமர்சனமாகவும் கவிதை சார்ந்த உரையாடலாகவும் விரிவாக்கம் பெறுகின்றது. கவிதை - கவிஞர்பற்றிய சில அடிப்படையான மெய்யியல் அழகியல் சார்ந்த பிரச்சினைப்பாடுகளையும் அறிவியல் விசாரணைகளையும் போகிற போக்கில் எடுத்துரைக்கும் நுட்பமும் தெளிவும் ஆங்காங்கு மையம் கொண்டு இழையோடுகிறது.

இது போல் புனை கதை சார்ந்த விடயப்பரப்பிலும் கவனக்குவிப்பு கொண்ட கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. உதாரணமாக 'ஈழத்து தமிழ் சிறுகதைகளில் உருவகத் தன்மை கொண்ட கதைகளைத் தந்தவர்களில் இருவர் முக்கியமானவர்கள். ஒருவர் எம்.ஏ.ரஹ்மான், மற்றவர் சு.வே. 'ரஹ்மானின் மரபு' தொகுதியில் காணப்படும் உருவகக் கதைகளை விட சு.வே.யின் கதைகள் கலைத்துவமிக்கவை. 'மணற்கோவில், உப்பங்கழி' போன்ற கதைகள் மிகச் சிறப்பானவை. உருவகக் கதைகளை எழுதுவதில் அக்கறை கொண்ட ராஜாஜி இவரது ஆற்றலைப் பாராட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.'' (பக்.135)

மு.தளையசிங்கம் 1965இல் வெளியிட்ட 'புதுயுகம் பிறக்கிறது' சிறுகதைத் தொகுப்புடனேயே ஈழத்து சிறுகதை உலகில் பரிசோதனைப் பாங்கான முயற்சிகள் தலைதூக்கின எனலாம். இப்போக்கைத் தொடர்ந்து மு.தா. மேலும் இன்றைய நமது சிறுகதைகளையும் ஏனைய இலக்கிய வகைகளையும் கேள்விக்குள்ளாக்கும் வகையில் புதுக்குரல்கள் (போர்ப்பறை), மெய்யும் உள்ளும் மெய், அண்டை வீடுகள், கலைஞனின் தாகம் ( மெய்யுள்) ஆகிய புதுவகை சிறுகதைகள் எழுதி அவற்றை ''இலக்கியத்தை அழிக்கும் இலக்கியமாக மெய்யுளாக அழைத்தமை உலக இலக்கியப்போக்கில் ஏற்பட்ட நவீன மாற்றங்களுக்கு சமாந்தரமாக ஈடு கொடுப்பது போல்பட்டது. ஆகவே நாம் தமிழ் நாட்டிடமும் இல்லாத இலக்கியப் போக்கோடு போட்டிபோடக்கூடிய படைப்பாற்றல், சிந்தனை வளம் உள்ளவர்களாகவே இருக்கிறோம் என்பது பெருமைக்குரியதே. இதை 60-80 இடைப்பட்ட கால ஈழத்துச் சிறுகதைகள் காட்டி நிற்கின்றன என்றால் மிகையாகாது''. இவ்வாறு பல்வேறு நிலைப்பட்ட விமர்சனப்பார்வை களை மு.பொ. இந் நூலில் விரித்துச் செல்கிறார்.

ஆய்வு நிலை விமர்சனப் பகுதியில் 11 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. மு.பொ.வின் வாசிப்பு, தேடல், ஆய்வு, விமர்சனம் முதலானவை மையம் கொள்ளும் ஆக்க மரபாக இக்கட்டுரைகள் உள்ளன. மேலைத்தேச, கீழைத்தேச இந்திய சிந்தனை மெய்யியல் சார்ந்த உரையாடலுக்கான வெளிகளில் தத்துவச் சேகரம் கொள்பவையாக இக்கட்டுரைகள் உள்ளன.

உதாரணமாக 'கவிதைத் தமிழ் தோன்றிய காலத்தில் இருந்து 20 ஆம் நூற்றாண்டின் நடுக்கூர் வரை செய்யுள் என வரையறுக்கப்பட்ட ஓர் இலக்கண அமைப்பு வரைவிற்குள் தன்னைப் புகுத்தி வெளிப்படுத்தி வந்தது. வசன நடை தமிழில் இல்லாத காரணத்தால் மருத்துவம், சாஸ்திரம், சமயச் சிந்தனை என்ற ஏனைய துறைகள் யாவும் செய்யுளிலேயே வெளிக்காட்டப்படலாயின. ஆனால் அச்செய்யுள்களில் கூட கவிதை இருந்தது. மருத்துவ வாகனங்களில் மூலிகையையும் வாழ்க்கையையும் இணைத்து யாக்கப்பட்ட சிலேடை செய்யுள்களில் கவிதைகளையும் காணலாம். உதாரணமாக வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் ஆவதென்ன? என்றும் வாகட வரிகளைக் காட்டலாம். அப்படியானால் கவிதை என்பது சொல்லும் பாணியில் வந்தமைகிறது. இதனால் கவிதை என்பது தனியொரு ஊடகமாக இயங்கும் அதேவேளையில், ஏனைய ஊடகங்களான சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை என்பனவற்றை சிறப்புற வைக்கும் ஊட்டப் பொருளாகவும் அதாவது ஏனைய ஊடகங்களுக்கும் தன் கவிதைத் தன்மைகளைப் பாய்ச்சுவதன் மூலம் அவற்றிற்கு அழகியல் செறிவையும் ஏற்படுத்தும் ஊட்டப்பொருளாகவும் அமைகிறது'.

இவ்வாறு இலக்கிய வடிவங்கள் தொடர்பில் பல்வேறு புதிய சிந்தனைகளை முன்வைக்கின்றார். அது மட்டுமல்ல நவீன இலக்கியத்தில் பன்முகப்பாட்டுக்கான விரிவாக்கக் களங்களை திறந்து விடுவதிலும் தாராளச் சிந்தனை கொண்டவராகவும் மு.பொ. தொழிற்படுகின்றார். நவீனத்துவம், பின்நவீனத்துவம், சமூகவியல், குறியீட்டியல், படிமவியல், தொன்மவியல், உளவியல் முதலான அறிவுப் புலன்களிலும் ஊடாட்டம் கொண்டு அவற்றின் சேகரிப்பு படைப்பாக்க வெளியில் புத்தாக்கமான படைப்பு மனக்கட்டமைப்பிற்கான சட்டகத்தை உருவாக்குவதிலும் தீவிர அக்கறை கொண்டு இயங்கும் பண்பை இந்தக் கட்டுரைகள் வெளிப்படுத்துகின்றன.

தமிழ்க் கவிதையியலும் தமிழ்க் கவிதையும், முருகையன், சில்லையூர், தர்மு சிவராம் கவிதைகள்: ஒரு நோக்கு ஆகிய இரு கட்டுரைகளும் கவிதையியல் பற்றிய ஆழமான தேடலுக்கும் நுணுக்கமான ஆய்விற்கும் சில அடிப்படையான விளக்கங்களை கேள்விகளை தர்க்கபூர்வமாக

முன்வைக்கிறது. தான் வரித்துக் கொண்ட அல்லது மு.பொ. இயக்கும் மெய்யுள் கருத்து நிலை கவிதையிய லில் எவ்வாறு தாக்கம் பெறும் என்ப தற்கான சிந்தனைத் தெறிப்புகள் தொகுக்கப்பட்டுள்ளன. கவிதையின் உள்ளீடு, உயிர்ப்பு மற்றும் மொழிகள் பற்றிய ஆய்வு ஆத்ம விசாரமாகவும் விமர்சன சிரத்தையாகவும் இயங்கு வதற்கான களங்களை அடையாளப் படுத்துகின்றது. அவற்றின் அவசியப் பாட்டை முன்நிபந்தனையாக்குகிறது.

'தமிழ் இலக்கிய விமர்சனம்: மு.த.வின் சிந்தனை ஒரு திருப்பு முனையா'? என்ற கட்டுரை ஈழத்து விமர்சன மரபு பற்றிய வரலாற்று விமர்சன அணுகுமுறைக்கான மாற் றுக் கருத்தாடல்களை வழங்குகின் றது. இதன் மூலம் ஈழத்து தமிழ் விமர் சனம் பற்றிய மீள் சிந்தனைக்கும் புதிய பார்வைக்கும் வழிகாட்டுகிறது. விமர்சனமும் படைப்புக்கலை என்ப தற்கான தெளிவையும் அதற்கான காத்திரமான உழைப்பு ஒவ்வொருவ ருக்கும் வேண்டும் என்பதையும் இந் நூல் உறுதிப்படுத்துகின்றது.

எதிர்வினை விமர்சனப்பகுதியில் 12 கட்டுரைகள் உள்ளன. மு.பொ. வரித்துக்கொண்ட இலக்கியப்பார் வைகள், கருத்துகள் தொடர்பில் பல் வேறு சந்தர்ப்பங்களில் சிலர் வெளிப் படுத்திய மாற்றுக்கருத்துகளுக்கான பதில் அல்லது விளக்கம் அல்லது எதிர்வினை என்பதாக இந்தப்பகுதி அமைந்துள்ளது. இங்கு இடம்பெற் றுள்ள கட்டுரைகள் யாவும் முன் னைய பகுதிகளில் இடம்பெற்ற கட் டுரை விடயங்களுக்கு மேலதிகமான அல்லது அவற்றை இன்றும் தெளிவு படுத்துபவை என்று கூறலாம்.

திறனாய்வின் புதிய திசைகள் மு.பொ.வின் திறனாய்வுப் பார் வையை புரிந்துகொள்வதற்கான ஆக் கம். அதுமட்டுமல்ல ஈழத்து தமிழ்ப் பரப்பில் மு.தளைய சிங்கம், மு. பொன்னம்பலம் வழிவந்த சிந்த னைப் பள்ளி ஏற்படுத்திய தாக்கம் மற்றும் புதிய திசைகள் என்ன என் பதை மதிப்பிடுவதற்கான நூலாகவும் அமைந்துள்ளது. தமிழில் பிரயோக விமர்சனம் சார்ந்த அணுகுமுறைக் கான சிறந்த எடுத்துக்காட்டாகவும் இந்நூலைக் குறிப்பிடலாம். மு.பொ. வின் திறனாய்வின் ஆளுமையை, திறனாய்வுப் புலமைத்துவத்தை கணிப்பதற்கான ஒரு படைப்பாக்கம் என்றும் இந்நூலைக் குறிப்பிடலாம். இதுவரை திறனாய்வின் புதிய திசை களை அடையாளப்படுத்தும் இப்படி யொரு நூல் சமகால ஈழத்து தமிழ்ச் சூழலில் வெளிவரவில்லை.

இன்று விமர்சன தொழிற்பாட்டில் இயங்கும் அல்லது புது அவதாரம் எடுக்கும் விமர்சனக் கோமாளிகள் நிச்சயம் இந்நூலை வாசிக்க வேண் டும். தம் தகுதிப்பாடு, படைப்பாக்க உந்துதல், சுயதேடல் தொடர்பில் தமக்குள்ளே சுயவிசாரணையில் ஈடு படுவதைத் தூண்டும் நூலாகவும் இது விளங்குகின்றது. ■


**GET சமகாலம் DELIVERED TO YOUR HOME**

3 months 600/-

6 months 1200/-

1 Year 2,400/-

Please complete the form given below, along with your Cheque/Money Order written in favour of 'Express Newspapers (Ceylon) (Pvt) Limited' and send it to our Head Office at No185,Grandpass Road, Colombo 14,Sri Lanka.
Tel:+94-11-7322700 / 7738046 Fax:+94-11-7767700

***For more details, please contact :***
Overseas & Local Subscriptions
**S.Surainie** - E-mail : subscription@kalaikesari.lk
Tel:+94 11 7322783

Subscription rates (inclusive postage) and delivery within Colombo.

**ORDER FORM :**

சமகாலம்

**Manager Subscriptions**
**Samakalam**
**No. 185, Grandpass Road, Colombo - 14,**
**Sri Lanka.**
**Tel : +94-11-7322783 / +94-11-7322741**
**Fax : +94-11-4614371**

FOLD HERE

**SUBSCRIBER INFORMATION :**

Title :.................... Last Name :........................................

First Name :..........................................................

Organization :........................................................

Address :.............................................................

.......................................................................

Phone :............................. Mobile :............................

Fax :................................. E-mail :............................

Payment : Amount Rs.........................

☐ Cash ☐ Cheque

Payable to : **Express Newspapers (Cey.) (Pvt) Ltd.**

Bank :................................ Cheque No :.........................

Signature :............................

# கடைசிப் பக்கம்



# பாடசாலைக்கல்வி எதிர்நோக்கும் பிரச்சினைகள்

த.இராஜரத்தினம்

இன்று கல்வி என்பது மிகப்பரந்த கருதுகோளாக மாற்றமடைந்து செல்கின்றது. நிலம், உழைப்பு, முயற்சி, மூலதனம் என்பவற்றை விட கல்வி அறிவே இன்றைய பிரதான உற்பத்திக் காரணியாக உள்ளது. இன்றைய நிறுவனங்கள் அறிவுசார் நிறுவனங்கள் என்றும் ஊழியர்கள் அறிவுசார் ஊழியர்கள் எனவும் கருதப்படுகின்றனர். முகாமைத்துவம் என்பது கீழ்மட்ட ஊழியர்கள் எவ்வாறு வேலை செய்கின்றார்கள் என்பதை மேற்பார்வை செய்வதும் கட்டுப்படுத்துவதும் அல்ல. மாறாக நவீன அறிவைப் பயன்படுத்தி உற்பத்தியை மேம்படுத்தும் முகாமைத்துவமாகும். கற்காதவர்கள் சமூகத்திற்குச் சுமையாக உள்ளனர். இன்றைய சமூகத்தின் உண்மையான செல்வம் கற்றோர் குழாமே என்ற இன்றைய சிந்தனைகளுக்கு முன்பே எமது முன்னோர்கள், 'கல்வியே அழகு', 'கல்வியே மக்கள் கண்' 'பிச்சை புகினும் கற்கை நன்றே', 'கல்வி கொடுத்தோர் கண்கொடுத்தோர்', 'எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்' போன்ற செய்திகளைப் பதிவு செய்துள்ளனர்.

மேற்கூறப்பட்ட செய்திகள் அறிவின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றன. இவ் அறிவை வழங்கும் நிறுவனமாக பாடசாலைகள் விளங்குகின்றன. பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுப்பவேண்டியது பெற்றோரின் கடமை. அதனை உறுதிப்படுத்தவேண்டியது அரசின் கடமை. இன்றைய உலக சிறுவர் நிலையை நோக்கும்போது 150 மில்லியன் போதிய போசாக்கின்றியும், 100 மில்லியன் ஆரம்பக்கல்வியின்றியும், 50 மில்லியன் போதிய சுகாதார வசதியின்றியும், 50 மில்லியன் சாலையோரத்தில் வாழ்பவர்களாகவும் 12 மில்லியன் நிர்க்கதிக்கு உள்ளானவர்களாகவும், 70 இலட்சம் பேர் அகதிகளாகவும், 3 1/2 இலட்சம் பேர் போர் வீரர்களாகவும் உள்ளனர் என யுனிசேவ் மதிப்பீடு கூறுகின்றது. பெற்றோர்களே இந்தத் தொகுதிக்கு உங்கள் பிள்ளைகள் அடங்கி விடக்கூடாது.

இலங்கையின் பாடசாலைக் கல்விப் புலத்தில் ஏறத்தாழ 10,350க்கு மேற்பட்ட பாடசாலைகள் உள்ளன. இவற்றில் 45 இலட்சம் மாணவர்களுக்கு மேல் கல்வி கற்கின்றனர்.187,000க்கு மேல் ஆசிரியர்கள் தொழிற்படுகின்றனர். இவர்களை விட அலுவலக ஊழியர்கள், சிற்றூழியர்களும் உள்ளனர். பாடசாலைகளுக்கு வேண்டிய கட்டிடங்கள், பராமரிப்புச் செலவுகள், புதிய தளபாடங்கள், நூல்நிலையத் தேவைகள், ஆய்வு கூடங்கள், ஏனையதேவைகளை அரசும், சமூக நிறுவனங்களும், நலன்விரும்பிகளும் தந்துதவுகின்றனர். ஆசிரியர் வேதனம், ஊழியர் வேதனம், பராமரிப்புச் செலவு, மேற்பார்வை, கணிப்பீடு பயிற்சிகள் ஆகியவற்றின் செலவு, மாணவர்களுக்கான இலவச பாடநூல் சீருடை ஆகியவற்றுக்கான செலவையும் அரசு தருகின்றது. இவற்றை விட மீண்டும் பெறமுடியாத இளமைக்காலத்தின் பெறுமதி என்பவற்றை நோக்கும் போது கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள், கல்விமான்கள், பெற்றோர்கள் என்ற வகையில் நாம் எமது கடமைகளை சரிவரச் செய்துள்ளோமா? எமது அக்கறை போதுமானதா? பெற்றோர்கள் தாம் விரும்பிய பாடசாலைகளில் தமது பிள்ளைகளை இணைக்க முடிகின்றதா? பெரிய பாடசாலைகள் சிறிய பாடசாலைகளின் வளர்ச்சியை பாதிக்கின்றனவா? என்பவை பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

மாற்றம் அடையும் இன்றைய உலகிற்கு ஏற்றவகையில் எமது கல்வி முறை உள்ளதா? அவ்வாறான கல்விக் கொள்கைகளை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா? என்பது பற்றி சிந்திக்கும் போது எமது கல்விமுறையும், பாடசாலைகளும் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன.

அவற்றை கீழ்வருமாறு அடையாளப்படுத்தலாம்.

- பாடசாலை அனுமதி தொடர்பான பிரச்சினைகள்
- மாணவர் இடைவிலகல் தொடர்பான பிரச்சினைகள்
- மாணவர் தேவைகளை நிறைவேற்றுவதில் பாடசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்
- பாடசாலைகளின் பௌதீக வளப் பிரச்சினைகள்
- மாணவர், ஆசிரியர் ஒழுக்கப்பிரச்சினைகள்
- ஆசிரியர் நியமனம், ஆசிரியர் கல்வி, பதவி உயர்வுகள், சம்பள உயர்வுகள், ஆசிரியர் பற்றி சமூகம் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள்.
- பாடசாலை சமூகத்தொடர்புகளும் அவை சார்ந்த பிரச்சினைகளும்

(43ஆம் பக்கம் பார்க்க...)

EXPRESS NEWSPAPERS (CEY) (PVT) LIMITED

வீ

NEWS ALERTS

வீரகேசரியின் விறுவிறுப்பான செய்திகள்...

உடனுக்குடன் உங்கள் கையடக்கத்தொலைபேசியில் தெரிந்துகொள்ளுங்கள்

டயலொக் : reg (space) virakesari என type செய்து

77007 என்ற

இலக்கத்துக்கு sms அனுப்புங்கள்.

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது. மாதாந்த கட்டணமாக ரூபா. 30/- + வரி அறவிடப்படும்.

All Models of Computer printer Ribbons
Electronic Typewriter Ribbons
Inkjet Cartridges, Inkjet Refills
Laser Printer Toners,
Digital Duplicating Inks, Black & Colour
Digital Stencil Master Rolls
Photocopy Papers, Roneo Papers
Toner for any copies
Computer Accessories & Papers
Fax Papers, Fax Ink Film Rolls & Cartridges
Paper, Board Packing Materials
All types of Office Stationery

RAINBOW STATIONERS (PVT) LTD.

# Rainbow Stationers (Pvt) Ltd.

**IMPORTERS, DEALERS IN PAPER & STATIONERY**

No. 18, Maliban Street, Colombo 11, Sri Lanka.

Voice : 2433906 (Hunting) 2433907, 2433908 Fax : +94 11 2433904

e-mail: rainbowst@sltnet.lk Website : www.rainbowsts.com

***Join the Largest Stationery House***

Printed and published by Express Newspapers (Ceylon)(Pvt)Ltd,at No.185,Grandpass road,Colombo -14, Sri Lanka.